
# சொல்

பெண்ணியத்தின் மகத்துவம்



## பெண்ணிய அல்லது
## பெண்கள் செயல்வாதம்

Women and Media Collective
Established 1984

# சொல்

பெண்ணியத்தின் மகத்துவம்

முதலாம் அரையாண்டு - 2012
ISSN 1391-958X

---

**கௌரவ ஆசிரியை**
காயத்ரி டிவகலால

---

**சரவை நோக்கு**
குகநிதி குகநேசன்

---

**அட்டை மற்றும் பக்கங்கள் வடிவமைப்பு**
வேலாயுதம் ஜெயச்சித்ரா

---

**அட்டைப் படங்கள்**
கமலா வாசுகி

இந்த சஞ்சிகையில் வரும் விபரங்கள் குறிப்பிடப்படாத படங்கள் 2011 மார்கழி மாதம் மன்னாரில் இடம் பெற்ற பெண்கள் செயல்வாதப் பயிற்சிப்பட்டறை பங்குபற்றுனர்களது ஆக்கங்களாகும். புகைப்படங்கள் - காயத்ரி.டி

**சஞ்சிகை வெளியீடு**
பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு
56/1, சரசவி லேன், காசல் வீதி,
கொழும்பு - 8, இலங்கை.
தொலைபேசி : 94-11-5632045.'.5635900
தொலைநகல் : 94-11-2690192
மின்தபால் : wmcsrilanka@gmail.com

# நாம் சொல்ல விரும்புவது...

"போருக்குப் பின்னர் இலங்கை" என்ற காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். கிட்டத்தட்ட 30 வருடகாலமான போரும் அதனைச் சார்ந்த அனர்த்தங்களும் மற்றும் இயற்கை அனர்த்தங்களும் எங்கள் யாவரையும் மிகப் பாரதூரமான வகைகளில் பாதித்திருக்கின்றன. பாதிப்புகளின் வகைகளும் விகிதங்களும் வேறுபடலாம். ஆனால் பாதிப்புக்குள்ளான சமூகம் அல்லது சமூகங்கள் என்பதற்குள் நாம் எல்லோரும் அடங்குவோம்.

தற்போது போருக்குப் பின்னரும் பாதிப்புகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. குறிப்பாக இறுதிப் (2008-2009) போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னமும் தமது அத்தியாவசிய தேவைகளையாவது அதாவது பாதுகாப்பு உள்ளடங்கலாக, பூர்த்தி செய்யக் கூடிய அளவில் மீள்குடியேற்றப்படவில்லை. 1990களில் கட்டாய வெளியேற்றம் காரணமாக பல இன்னல்களுக்கு இன்றுவரை முகங் கொடுத்துக் கொண்டிருக்கும் முஸ்லிம் மக்களது கோரிக்கைகளும் தேவைகளும் இன்னும் நிறைவு பெறும் நிலையிலிருந்து தொலைவில் உள்ளன.

இலங்கையின் பல பாகங்களில், குறிப்பாக வடக்குக் கிழக்கில், பல வருடங்களாக ஒற்றுமையாக வாழ்ந்து வந்த முஸ்லிம், தமிழ் சமூகங்களுக்கிடையிலான முரண்பாடுகளின் ஒரு பரிணாமமே அண்மையில் மன்னார் மாவட்டத்தில் முஸ்லிம் மற்றும் தமிழ் மீனவர்களுக்கிடையே ஏற்பட்டிருக்கும் குழப்பம். எமது வாழ்க்கைச் செலவின் நாளாந்த அதிகரிப்பினால் வாழ்வாதாரம் என்பது மிகவும் வேதனைக்குரிய ஒரு கடப்பாடாகிவிட்ட நிலையில், வாழ்வாதாரச் செயற்பாட்டில் ஏற்படும் அல்லது ஏற்படுத்தப்படும் இடையூறுகள் கையாளப்பட வேண்டும். இந்நாட்டில், இவற்றிற்கு உடனடியாக இனரீதியான ஓர் விளக்கப்படுத்தல் வழங்கப்படுகின்றது. இதுவே முரண்பாடுகளுக்கும் காரணமாகின்றது.

அதேவேளை கிட்டத்தட்ட 20 அல்லது 25 வருடங்களுக்குப் பின்னர் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி வரும் வடக்குக் கிழக்கைச் சேர்ந்த முஸ்லிம் மக்களுக்கு எவ்வாறான வரவேற்பும் வசதிகளும் கிடைக்கின்றன என்பதும், அவர்கள் தங்களது வாழ்க்கையை மீளமைத்துக் கொள்ள இருக்கக் கூடிய வளங்கள் என்பதும் இன்னும் பாரிய கேள்விக்குறியாகவே உள்ளது.

அத்தோடு இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களையும் எடுத்துப் பார்க்கையில், குறிப்பாக எண்ணிக்கையில் அதிகமாக உள்ள சிங்கள மக்களுக்கும் எண்ணிக்கையில் குறைவாகவுள்ள தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய இனங்களுக்கும் இடையிலான நல்லுறவு என்பது திருப்திகரமான நிலையில்

இல்லை என்பதை வெளிப்படையாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது. 30 வருடகாலப் போரினால் மக்களிடையே ஏற்பட்டிருக்கும் அவநம்பிக்கைகள், முரண்பாடுகள், வேறுபாடுகளால் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வு மனப்பான்மைகள் மற்றும் உரிமை மறுப்புகள் உள்ளடங்கலான பல முரண்பாட்டு நீக்கம் செய்யப்பட வேண்டிய விடயங்களுக்கு இதுவரை சரியான தீர்வுகள் கிடைக்கப்படவில்லை. இனங்களுக்கிடையிலான சமரச முயற்சிகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. ஓர் தலைமுறையே போர்க்காலச் சூழ்நிலையில் பிறந்து வாழ்ந்த இந்த நாட்டில் முரண்பாட்டு நீக்கம், இணக்கம் அல்லது சமரச முயற்சிகளுக்கான தேவையோ சமுத்திரம் போல பரந்து கிடக்கின்றது.

ஆனால் பல்வேறு அழுத்தங்கள் காரணமாக இத்தேவைக்குரிய அளிப்பு அல்லது வழங்கீட்டின் அளவு மிகவும் வேதனைக்குரிய ஓர் நிலையிலேயே உள்ளது.

இவ்வாறான ஓர் பின்னணியில், வரலாற்றில் மிகவும் முக்கியமான "போருக்குப் பின்னர்" என்ற கால கட்டத்தில் செயல்வாதங்களுக்கான கேள்வி அதிகரித்துள்ளது. இங்கே எடுத்துக் காட்டியுள்ளது போல பலர் சம உரிமைகளை அனுபவித்துக் கொண்டு வாழ்வதற்குப் பாதகமாக இருக்கும் இலங்கைச் சூழ்நிலையிலும் சரி, சொல்விடுக்கும் அறைகூவலான சவாலில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் சர்வதேச அரங்கியலிலும் சரி, பெண்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் பாதிப்புக்களே விஞ்சி நிற்கின்றன. பாதிக்கப்பட்ட எவருக்கும் நியாயமும் அதற்கீடான நட்டஈடும் கிடைப்பது என்பது இலங்கையைப் பொறுத்தவரையில் ஓர் அரிதான செயற்பாடாகவே காணப்படுகின்றது. இந்நிலையில் பாதிக்கப்பட்டவர் பெண்ணாயின் இது அரிதிலும் அரிதாகி விடுகின்றது. பெண்களுக்கு இருக்கக் கூடிய வளங்களை அடைவதற்கான வழி வாய்ப்புகளை ஆண்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பெண்களுக்கான வழிவாய்ப்புகள் மிகக் குறைவே. சமூகக் கலாசாரப் பின்னணிகளில் பெண்களுக்கு வழங்கப்படும் வகிபாத்திரங்கள் சமமற்றதாகவும் ஏற்றத்தாழ்வுகளை அதிகரிப்பதாகவுமே இருக்கின்றன. சாதாரணமான நிலையிலேயே பல சவால்களுக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலையில் வாழும் பெண்களுக்கு பொல்லாங்கான சூழல் மற்றும் பாதகமான நிலைப்பாடுகள் அல்லது முரண்பாடுகள் பாரிய முட்டுக்கட்டைகளாகி விடுகின்றன.

பெண்களுக்காக, பெண் உரிமைகளுக்காக குரல் கொடுத்தவர்கள் பலர். இதில் ஆண்-பெண் இருபாலாரும் அடங்குவர். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவி வழங்குவதற்கென பல அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இன்றும் போருக்குப் பின்னர் என்ற சூழ்நிலையில் பல்வேறு அமைப்புகள் பல்வேறு சவால்களை எதிர்கொண்ட போதும், அவர்களது செயற்பாடுகள் ஏதோ ஒரு விதத்தில் பெண்களுக்கு நன்மை பயக்குவதாகவே உள்ளது. சவாலில் கூறியிருப்பது போல சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சும் பெண்களது நன்னிலையினை உறுதிப்படுத்துவதற்காக முயற்சி செய்து வருகின்றது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே சொல்லின் 2012 ஆம் ஆண்டிற்கான முதற் பதிப்பானது பெண்ணிய அல்லது பெண்கள் செயல்வாதம் என்ற கருப்பொருளில் தனது படைப்புகளை ஒழுங்கமைத்துள்ளது. பெண்ணிய அல்லது பெண்கள் செயல்வாதத்திற்கான தேவைகள் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள், பெண் அபிவிருத்தியை அல்லது பெண் உரிமைகளை மழுங்கடிக்கக் கூடிய விடயங்கள், இலங்கையில் பெண்ணிய அல்லது பெண்கள் செயல்வாதத்தில் ஈடுபட்டவர்களது அனுபவங்கள், பெண்ணிய செயல்வாதிகளாக உருவாகிக் கொண்டிருப்போரது மாற்றங்களை நோக்கியும் மாற்றங்களை ஏற்படுத்துவதுமான பயணங்கள், பெண்கள் வன்முறைக்கெதிரான ஆண்களது செயல்வாதம் மற்றும் தேசிய ரீதியில் முன்வைக்கப்பட்ட பரிந்துரை முன்னெடுப்புகள் உள்ளடங்கலாக இப்பதிப்பானது, முடிந்தவரை தான் எடுத்துக்

கொண்டிருக்கும் கருப்பொருளுக்கு ஒப்புரவாகச் செயற்பட்டுள்ளது.

இப்பதிப்புக்கு ஆக்கங்கள் வழங்கிய எழுத்தாளர்கள் இலங்கையின் பல பாகங்களில் வசிப்பவர்களாகவும், ஆண்-பெண் இருபாலாராகவும், மூன்று வித்தியாசமான தலைமுறைகளைச் சேர்ந்தவர்களாகவும் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள். வழமைபோல் இப்பதிப்பின் சில கட்டுரைகள் புதிதாக உருவாகும் எழுத்தாளர்களினால் படைக்கப்பட்டுள்ளது.

பன்முகப்பட்ட சவால்களுக்கு முகங்கொடுக்கும் பெண்கள், தங்களது நிலையை மாற்ற முயற்சி எடுக்காது மூலையில் முடங்கிக் கிடப்பது என்ற நிலையில் இருந்து கணிசமான அளவு வெளிவந்து விட்டார்கள் அல்லது வந்து கொண்டிருக்கிறார்கள். இப்பதிப்பில் பகிர்ந்து கொள்ளப்பட்டதும் பகிர்ந்து கொள்ளப்படாததுமான பல்வேறுபட்ட பெண்ணிய செயல்வாதங்களே இதற்குரிய ஓர் தளத்தைப் பெண்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. தனக்கெதிராக ஓர் அநியாயம் நடக்கும் போது அப்பெண்ணுக்கு முதலில் அந்தச் சூழ்நிலையிலிருந்து விடுபட வழிகள் இருக்க வேண்டும். பின்னர் அந்த அநியாயத்தைத் தட்டிக் கேட்பது மற்றும் குரல் கொடுப்பதன் மூலம் தனக்கு நியாயத்தையும் நட்ட ஈட்டையும் தேடிக்கொள்வதோடு, வேறு பெண்களுக்கு அவ்வாறு நடைபெறாது இருக்க வேண்டும் என்ற கருத்தையும் ஆழமாகப் பதிக்கக் கூடியதாக உள்ளது. இதுவொரு படிமுறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதொன்றாகும். இதற்கு துணிச்சலான மனநிலை, திடமை, உதவிகள், பணம் போன்ற பல வளங்கள் தேவைப்படும். பெரும்பான்மையான பெண்ணிய அல்லது பெண்கள் செயல்வாதங்கள் இவ்வாறான வளங்களை பெண்கள் அடையக் கூடிய வகையில் மாற்றப்பட வேண்டும் என்றும், அதிகார அடிப்படையிலான சமமற்ற, வன்முறையினை நுழைவுகோளாகக் கொண்ட பெண்ணடிமைத்தனங்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்றும் அறைகூவல் விடுக்கின்றன.

அடக்குமுறை என்பது பல்கோணங்களில் பார்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். பெண்களுக்கெதிரான அடக்குமுறையானது பால், பால்நிலை, பாலியல்பு, சமூகப் பிரிவு, சாதி, மதம், வருமானம், கல்வி, கலாசாரம், தொழில், வளங்களுக்கு இருக்கக் கூடிய அடைவுத் தன்மை, பாதுகாப்பு, முடிவெடுத்தல், சம வகிபங்கு வகித்தல், தமக்குரிய தளங்களை அமைத்துக் கொள்ளல், சுதந்திரம் மற்றும் உரிமைகள் என்பன போன்ற பல்வேறுபட்ட விடயங்களை உள்ளடக்கியதாகின்றது. இவற்றின் சில பரிணாமங்களை இப்பதிப்பு கவனத்தில் எடுத்து அது தொடர்பான விளக்கப்படுத்தல்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி.

பெண்ணிய அல்லது பெண்கள் செயல்வாதத்தினை மையப்படுத்திய இப்படைப்புகள் வாசகர்கள் மத்தியிலும் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும் என்பதே எமது அவா. மாற்றங்கள் பின்பு செயல்வடிவம் பெற்று செயல்வாதங்களுக்கு வழிகோலுவதாகவும், களமிடுவதாகவும் அமைய வேண்டும். சொல்விடுக்கும் அறைகூவலான சவாலில் குறிப்பிட்டிருப்பது போல இலங்கைப் பெண்கள் அனைவருக்கும் அவர்கள் வாழ்க்கை தொடர்பான தீர்மானங்களை எடுக்கக் கூடிய உரிமையை உறுதிப்படுத்தவும், பெண்களுக்கெதிரான வன்முறைகளை அடியோடு ஒழித்துக் கட்டிய சமூகங்களை உருவாக்கவும், ஆண்கள் பெண்கள் யாவரும் ஒன்று சேர்ந்து பல செயல்வாதப் பயணங்களை முன்னெடுப்போமாக. இது பல சமூகங்களில் வசிக்கும் எங்கள் ஒவ்வொருவருடையதும் கடமையாகும். வன்முறைகளற்ற வளமிக்க சமூகங்களை உருவாக்க வேண்டியது எமது பொறுப்பாகும். பெண்கள் உரிமைகளை மறுக்கின்ற எந்த சமூகமும் வளமிக்கதொன்றாக முடியாது. ■

# சொல் விடுக்கும் அழைகூவல்!

சர்வதேச அரங்கில் பாரிய அளவிலான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் பல ஏற்பட்டுள்ள தருணத்திலேயே இம்முறை சவால் எழுதப்படுகின்றது. ஐரோப்பா முழுவதிலும் பாரிய பொருளாதாரப் பிரச்சினைகளும், அதனை அடிப்படையாகக் கொண்டு இனவாதமும் சடுதியாக பரவிவருகின்றது. வழக்கமாக தொழிலின்மையினாலும் சமூக நலனோம்பல் வலையமைப்புகள் முறிவடைவதனாலும் பெரிதும் பாதிப்படைபவர்கள் பெண்களே ஆவர். வட ஆபிரிக்காவின் அரசியல் களத்தில் இடம்பெறுகின்ற மாற்றங்களை நோக்கும் போது எகிப்து, ருனீசியா மற்றும் இலிபியாவில் ஜனநாயக ரீதியிலான மாற்றத்தைக் கோரி வீதியில் இறங்கிய பெண்கள் தற்போது தமது உரிமைகள் குறைந்து வருவதை பெரும் மனவேதனையுடனேயே பார்த்துக் கொண்டுள்ளனர். ஆயிரக்கணக்கான எமது பிரஜைகள் பணியாற்றுகின்ற ஓமான் மற்றும் பஹ்ரேன் போன்ற நாடுகளிலும் நீண்டகாலமாக வேரூன்றியுள்ள மன்னர் ஆட்சிகளுக்கு சவாலிடப்பட்டு வருகின்றது.

இலங்கையர்களாகிய எமக்கு ஆடி மாதமானது 1983ஆம் ஆண்டில் ஏற்பட்ட தமிழர்களுக்கு எதிரான வன்முறையையே நினைவில் நிறுத்துகிறது. வெலிக்கடைச் சிறைச்சாலையைச் சேர்ந்த 52 சிறைக் கைதிகள் உள்ளடங்கலாக ஆயிரத்திற்கும் அதிகமான தமிழ்ப்பெண்கள், ஆண்கள் மற்றும் பிள்ளைகள் மிகக் கொடூரமான முறையில் இனப்பற்றினால் வெறிகொண்டிருந்த சிங்கள காடையர் குழுவொன்றினால் படுகொலை செய்யப்பட்டனர். இன்று உலகில் பல்வேறுபட்ட நாடுகளின் பிரஜைகளாக இருந்து கொண்டு இலங்கை அரசு இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியாக தீர்வு காண்பதற்கு எதிராகக் குரல் எழுப்புகின்றவர்கள் இக்கொடூர வரலாற்றிலிருந்து உருவாகி வருபவர்களேயாவர். இது கறுப்பு யூலையை நாம் கொண்டாடுகின்ற 29ஆம் வருடமாகும்.

அத்துடன் நாம் இன்னும் பல நெருக்கடிகளுக்கும் முகங் கொடுத்துள்ளோம். வடக்குக் கிழக்கு யுத்தம் முடிவுக்கு வந்து மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் கூட இன சமத்துவத்தை உறுதிப்படுத்தக் கூடிய அரசியல் தீர்வு தொடர்பாக ஓர் அறிகுறியுமில்லை. இது தொடர்பாக அரசியல் களத்தில் எதுவித கலந்துரையாடலையும் காணவில்லை.

இலங்கை அரசாங்கமானது பெரும்பான்மை மக்களாகிய சிங்களவர்களது வேண்டா வெறுப்புகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற அரசாங்கமாக அமைந்திருப்பது சிக்கல் தன்மையைக் கொண்ட ஒரு விடயமென அல்லது ஜனநாயகத்திற்கு எதிரான ஒரு விடயமாகக் காண்பவர்கள் எம்முள் ஒரு சிறிய அளவினர் மட்டுமேயாகும். யுத்தம் நிலவிய பிரதேசங்களில் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களுக்கு மீண்டும் தமது வீடுகளையும் வாழ்வாதாரங்களையும் கட்டியெழுப்பிக் கொள்வதற்குத் தேவையான நிதி மற்றும் ஏனைய வளங்களை பெற்றுக் கொடுக்கும் போது அரசாங்கத்தினால் பாரிய தாமதம் ஏற்படுகின்றது. இத்தகைய பிற சந்தர்ப்பங்களில் மனிதாபிமான உதவிகளை வழங்குகின்ற அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் மத அமைப்புகளுக்கும் குறிப்பாக வன்னிப் பிரதேசத்திற்குப்

பிரவேசிப்பது சம்பந்தமாக விதிக்கப்பட்டுள்ள தடைகளின் காரணமாக நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது. இவ்வாறானதோர் நிலைமையில் தற்போது கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வட மத்திய மாகாணங்களுக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவுள்ளது. கட்சி நடவடிக்கைகளுக்காகப் பாடுபடுகின்ற பெண்களுக்குக்கூட கட்சிப்பெயர் நியமனங்களைப் பெற்றுக்கொள்வது கடினமாக அமைந்துள்ளதென பெண்களின் அரசியல் பங்கேற்புத் தொடர்பாக ஊக்கம் காட்டுவோர் தெரிவிக்கின்றனர். கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சில பெண்களை களமிறக்கியுள்ளது. இவர்களுள் ஒருவர் திருமதி பத்மநாதன் பத்மலதா. இவர் மூதூர் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து கட்டைப்பறிச்சான் முகாமில் வசித்து வருபவர் என்பது தனிச்சிறப்பானது.

பெண்கள் என்ற வகையில் இந்த நாட்களில் நாம் இரண்டு விடயங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. அதில் ஒன்று பெண்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற பாலியல் பலாத்காரங்கள் பற்றியதாகும். இக்குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட சிலர் கைது செய்யப்பட்டிருந்தாலும் மேலும் சிலர் சுதந்திரமாக நடமாடி வருகின்றனர். சில சமயங்களில் ஆயுதங்களை கையில் வைத்துக் கொண்டு இக்குற்றச் செயல்களை புரிகின்றவர்களுள் சிலர் உள்ளூர் மன்றச் சபைகளின் பிரதிநிதிகளாக இருப்பது பாரதூரமான ஓர் விடயமாகும். நாட்டில் பொறுப்பு வாய்ந்த அரசியல் கட்சிகளைச் சேர்ந்த மற்றும் அக்கட்சிப் பொறிமுறைகளில் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகிக்கின்ற ஆட்கள் இவ்வாறு நடந்து கொள்ளும் போது இதற்கு எதிராக கட்சியின் உச்சபீடம் நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டம் இந்த நபர்கள் தொடர்பாக உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றபோதும் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் சிறைக்குச் செல்ல வேண்டி ஏற்படுகின்ற போதும் மட்டுமே இந்நாட்டுப் பெண்கள் அச்சமின்றியும் சந்தேகமின்றியும் பரிபூரணமான வாழ்க்கையைக் கொண்டு நடாத்த முடியும்.

இரண்டாவது விடயமானது வரையறுக்கப்பட்ட விதத்திலேனும் கருக்கலைப்பினை சட்ட ரீதியானதாக்குவது தொடர்பாக ஏற்பட்டுள்ள விவாதமாகும். சாதாரணமாக பாலியல் தொடர்பாக பேசுவதற்கு நாம் விரும்புவதில்லை. பாடசாலைக்குச் செல்கின்ற இளம் பருவத்திலுள்ளவர்களுக்கு பாலியல் கல்வி வழங்கப்படுவதையும் நம்மில் பலர் எதிர்க்கின்றோம். ஒரு புறத்தில் கருவின் உரிமை தொடர்பாக பேசுகின்றவர்களாலேயே கருக்கலைப்பினை சட்டவிரோதமாக்குவதற்குச் சார்பாக கருத்தியல்கள் கட்டியெழுப்பப்படுகின்றன. கருக்கலைப்பென்பது ஓர் மனிதப்படுகொலை என்றே இவர்கள் குறிப்பிடுகின்றனர். மனிதப் படுகொலைகளுக்கு தடைகளை ஏற்படுத்துகின்ற சட்டங்களுக்கு மேலதிகமாக, கருக்கலைப்புக்கு எதிரான மத ரீதியான ஆலோசனைகள் எல்லா மதங்களையும் சார்ந்தவர்களால் முன்வைக்கப்படுகின்றன. இருப்பினும் இதற்கு மாறாக கருத்துத் தெரிவிக்கின்றோர், தினசரி பிறந்தவுடன் கழுத்தை நெரித்து குப்பைத் தொட்டிகளிலும், கால்வாய்களிலும், மலசலகூடக் குழிகளிலும் குப்பைகளைப் போன்று இடப்படுகின்ற சிசுக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதென சுட்டிக்காட்டுகின்றனர். கருக்கலைப்பு சட்ட ரீதியாக மேற்கொள்ளக்கூடியதாக இருந்தால் பெண்கள் வழிதவறிச் சென்று தங்குதடையின்றி பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு அதன் விளைவாக கருத்தரிக்கும் போது அக்கருவைக் கலைத்துவிட்டு நாகரீகமற்ற வாழ்க்கையில் ஈடுபடுவர் எனச் சிலர் குறிப்பிடுகின்றனர். இருப்பினும் சமூகவியலாளர்களினால் திரட்டப்படுகின்ற தரவுகளின் பிரகாரம் இலங்கையில் கருக்கலைப்புகளை மேற்கொள்ளும் பெண்களுள் பெரும்பாலானவர்கள் திருமணமான நடுநிலை வயதிலுள்ளவர்களேயாவர். பொருளாதாரச் சிக்கல்களின் காரணமாகவோ, தொழில் தொடர்பான பிரச்சினைகளின் காரணமாகவோ குழந்தைகளுக்கு இடையிலான இடைவெளி அதிகமாக இருப்பதனாலோ பெண்கள் கருக்கலைப்புக்கு தூண்டப்படுகின்றனர் என்பதை மேற்படி மீளாய்வுகள் சான்றுபடுத்துகின்றன. புள்ளிவிபரங்களுக்கமைய இலங்கையில் தினசரி சட்டத்திற்கு முரணான கருக்கலைப்புகள் 500இற்கும் 1000திற்கும் இடைப்பட்ட அளவு இடம்பெறுகின்றன.

வரையறுக்கப்பட்ட விதத்திலேனும் கருக்கலைப்பினை சட்ட ரீதியானதாக்க வேண்டுமென வாதாடுகின்றவர்களுக்கு

மத்தியில் கருக்கலைப்பினால் மரணிக்கின்ற பெண்களின் எண்ணிக்கை மற்றும் சட்ட ரீதியற்ற தன்மையில் கருக்கலைப்பினை செய்து கொண்டு அதன் திருப்திகரமற்ற பெறுபேறுகளின் விளைவாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்ற பெண்கள் சார்பாக செலவிடப்பட வேண்டிய மருத்துவ மற்றும் சுகாதார வசதிகளை எடுத்துக் காட்டுகின்றவர்களும் உள்ளனர். இதேவேளை, பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளான பெண்ணுக்கு, குறிப்பாக தமது நெருங்கிய உறவினர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளான சிறுமியொருத்திக்கு மேற்படி வன்முறையின் விளைவாக கருத்தரித்த கருவை அது வளரும் வரை சுமந்து தமக்கு பலாத்காரம் செய்த நபரின் குழந்தையை பிரசவிப்பதற்கு கட்டாயப்படுத்தும் சட்டத்தின் அநீதி தொடர்பாக பேசுகின்றவர்களும் உள்ளனர். பெண்ணியல்வாதிகள் என்ற வகையில் பெண்களுக்குத் தமது இனப்பெருக்க நடவடிக்கை தொடர்பாக முடிவெடுப்பதற்கான உரிமை இருக்க வேண்டுமென்பது இது தொடர்பான எமது கருத்தாகும்.

இப்பின்னணியில் இருந்து கொண்டு சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சு கடந்த ஆனி மாதம் இது தொடர்பான பகிரங்க உரையாடலுக்கு அழைத்திருப்பதானது மிகவும் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். பாலியல் ரீதியான பலாத்காரத்திற்கு அல்லது தகாப் புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டதனால் கருத்தரித்த பெண் ஒருவருக்கு மற்றும் பாரதூரமான விகாரமடைந்த கருவினைக் கொண்ட பெண் ஒருவருக்கு மருத்துவ ஆலோசனைகளுடன் சட்ட ரீதியாக கருக்கலைப்பினை மேற்கொள்ளக்கூடிய நிலைமையை ஏற்படுத்துவது அமைச்சின் முன்மொழிவாகும். அமைச்சர் கௌரவ திஸ்ஸ கரலியத்த இம்முன்மொழிவினை அறிமுகப்படுத்தும் போது, பாலியல் பலாத்காரத்தின் விளைவாக கருத்தரிக்கும் பெண்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படுகின்ற சமூக ஓரங்கட்டல்கள் தொடர்பாக விசேட கவனஞ் செலுத்தினார். களனிப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் வசந்தா சுபசிங்க அவர்கள் ஞாயிறு லங்காதீப பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்த நேர்காணல் ஒன்றில் கருக்கலைப்பினை சட்டவிரோதமாக்குவது பெண்களுக்கு எதிரான துன்புறுத்தலின் ஒரு தோற்றப்பாடாகும் எனக் குறிப்பிட்டிருந்தார். இவரது ஆய்வின் பிரகாரம் நடுவயதில் உள்ள திருமணமாகிய பெண்களே அதிகமான கருக்கலைப்புகளை மேற்கொள்கின்றனர். இதேவேளை, பாதுகாப்பற்ற கருக்கலைப்புகளினால் மரணிக்கின்ற பெண்களின் எண்ணிக்கையானது வருடமொன்றில் இடம்பெறுகின்ற கர்ப்பிணித் தாய்மார்களது மரண எண்ணிக்கையில் 10% - 13% இற்கும் இடைப்பட்ட அளவாகும் என அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

1990ஆம் ஆண்டுகளிலிருந்து கருக்கலைப்புச் சட்டத்தை தளர்த்துவது தொடர்பாக அரசியல் களத்தில் உரையாடல்கள் இடம்பெற்றாலும் நல்லொழுக்கத்திற்கும் உரிமைக்கும் இடையில் ஊசலாடிக் கொண்டிருந்த உரையாடலை தணிப்பது சிரமமாகியது. 2011ஆம் ஆண்டு பெண்களுக்கெதிராக சகலவிதமாகவும் இடம்பெறுகின்ற பாகுபாடுகளை இல்லாதொழிப்பதற்கான சர்வதேச சமவாயத்தினைக் கண்காணிக்கும் குழுவினால் இலங்கையில் கருக்கலைப்பினை சட்ட விரோதமாக்கும் சட்டத்தை மாற்றுமாறு கோரி மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையுடன் மேற்படி பழைய உரையாடலுக்குப் புத்துயிர் கிடைத்துள்ளது.

இலங்கை அரசாங்கம் மனித உரிமைகள் தொடர்பாக அதன் வகைப்பொறுப்பினை எவ்வாறு நிறைவேற்றுகின்றதென இலங்கைக்குள்ளேயும் வெளியிலிருந்தும் பலர் பார்த்துக் கொண்டிருக்கும் தருணத்தில் இடம்பெறுகின்ற இந்த உரையாடலின் ஊடாக உண்மையிலேயே சட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக எமது ஒத்துழைப்பினை நல்குவது அத்தியாவசியமாகும்.

அன்றைய பாராளுமன்றத்தில் இது சம்பந்தமாக விவாதம் நடத்தப்பட்டவேளை பாராளுமன்ற உறுப்பினராக செயற்பட்ட கௌரவ சாமல் ராஜபக்ச இன்றைய பாராளுமன்றத்தின் சபாநாயகராகவுள்ளார். இந்த சட்டத்தை மாற்றியமைத்து இலங்கைப் பெண்கள் அனைவருக்கும் தமது வாழ்க்கை தொடர்பான தீர்மானம் எடுக்கக்கூடிய உரிமையை உறுதிப்படுத்துவது இத்தகைய காலகட்டத்தில் அரசுக்கும் எமக்கும் முன்னாலுள்ள சவாலாகும். ■

**சுனிலா அபேசேகர**

# வன்முறையும் பெண்களும்

இன்று எமது நாட்டில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் சகல பாகங்களிலும், சகல துறைகளிலும் நடந்தேறுகின்றன. இதனை ஆராய்ந்து பார்ப்போமானால் பதவி, அதிகாரம், அரசியல், வீட்டுச்சூழ்நிலை, பொருளாதாரம் போன்ற பல காரணிகள் இதற்குள் தாக்கம் செலுத்துகின்றன.

இவற்றுக்கு எதிராக தற்பொழுது இலங்கையில் பெண்ணிய செயல்பாடுகள் நடைபெற்றாலும், கொள்கை அளவில் மாற்றம் ஏற்படுத்துவதில் பின்னடைவே காணப்படுகின்றது. குறிப்பாக சொல்லப்போனால் 2005ஆம் ஆண்டு வீட்டுவன்முறைச் சட்டம் அமுல்ப்படுத்தப்பட்டாலும் இதனை இன்னும் வலுப்படுத்த வேண்டிய தேவை 2012 இலும் காணப்படுகின்றது. இதனை விட வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட பெண்களுக்கான பாதுகாப்பு வசதிகள்




இலங்கையில் மிகக் குறைவாகவே உள்ளது. இதனால் பெண்கள் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டாலும் தங்களுக்கான பாதுகாப்பு வசதியின்மையால் மீண்டும் வன்முறை நிகழ்ந்த சூழலிலே அவர்கள் வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. இதனால் இன்னும் பெண்கள் மனதளவிலும், உடலளவிலும் அதிகமாகவே பாதிக்கப்படுகின்றார்கள்.

வேலைத் தளங்களில் நடந்தேறும் வன்முறைக்கு எதிராக குரல்கொடுத்தால் அதற்கு எதிராக எவ்வாறு நடவடிக்கைகளைத் திறம்பட செய்ய முடியும் என நாம் ஆராயும் முன்பே வன்முறையை ஏற்படுத்தியவர் அடுத்த வன்முறையை ஏற்படுத்துவதற்கு தயார் ஆகின்றார். வன்முறையை ஏற்படுத்தியவருக்கு அரசியல் செல்வாக்கு இருக்குமாயின் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நியாயம் கிடைப்பது அரிதாகி விடுகிறது. இதனால் 75 வீதமானோர் தமக்கு என்ன வன்முறை நிகழ்ந்தாலும் குடும்ப வறுமை, கலாசாரம், சமூகம் என்ற அடிப்படையில் வெளிவராமலே தொடர்ந்தும் வன்முறையை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

பெண்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறை தொடர்பாக நாம் எந்தளவு பொறுப்புணர்வுடன் செயற்படுகின்றோம் என நாம் ஒவ்வொருவரும் எம்மை கேள்வி கேட்க வேண்டும். காரணம் அண்ணன், தம்பி, தாய், தந்தை, உறவினர்கள் என்ற பாத்திரங்களுடன் குடும்பத்தில் இணைந்து வாழும் நாங்கள் பெண்களுக்கு வன்முறை இழைக்கப்படும் போது மட்டும் அவர்களுடைய உணர்வுகளை, அதனால் அவர்கள் அடைந்துள்ள பாதிப்பை உணராமல், கலாசாரம், சமூகம் என்பவற்றிற்கு பயந்து மௌனம் சாதிக்கின்றோம். இதனால் வீட்டில் வன்முறை நடைபெற்றால் உறவுகளிடம் அல்லது குடும்பத்திடம் சொல்லி என்னபயன் என்று தங்களுடைய வாழ்வினை முற்றாக அழித்துக் கொண்ட பெண்கள் எத்தனையோ

பேர். வேலைத்தளங்களில் வன்முறை ஏற்படும் போது சக அலுவலர்களிடம் அதனைத் தெரியப்படுத்தி அதனால் மீண்டும் வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட பெண்கள் எத்தனை பேர். இதனால் சக அலுவலர்களிடம் சொன்னால் ஏற்றுக்கொள்வார்களா என சிந்தித்து தங்களுடைய பொருளாதாரத்தை இழந்த பெண்கள் எத்தனையோ பேர். மீண்டும் அதே பதவிக்கு பெண்கள் வேலையில் அமர்த்தப்பட்டு வன்முறையை அனுபவித்துக் கொண்டிருக்கும் பெண்களும் உள்ளார்கள். இவ்வாறான வன்முறைக்கு உள்ளாக்கப்படும் சந்தர்ப்பங்களை நாங்கள் ஆளமாக நோக்கி, இவற்றை நிறுத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

இன்று எமது சமூகத்தில் காணப்படும் கட்டமைப்புக்களே இதற்கு முதற்காரணமாகிறது. இந்த கட்டமைப்புக்களில் எப்போது மாற்றம் ஏற்படுகின்றதோ அன்றுதான் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் வன்முறைகளுக்கு ஓரளவேனும் தீர்வும் நியாயமும் காணமுடியும். இன்று எமது குடும்பங்களின் கட்டமைப்பை பார்ப்போமானால் அதிகமாக சமூகம், கலாச்சாரம் என்பவற்றை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. வன்முறை ஒன்று நிகழும் போது, அந்த பெண்ணை பற்றி சிந்திக்காமல் சமூகம் என்ன சொல்லும் என்று சிந்திப்பவர்கள் வன்முறையை ஏற்படுத்தியவரும் அந்த சமூகத்தில் தான் இருக்கின்றார் என்பதை ஏன் மறந்துவிடுகின்றார்கள். இவற்றையெல்லாம் பார்க்கும்போது இந்த கலாச்சாரம், சமூகம் எல்லாம் பெண்களுக்கு மட்டும்தானா? இந்த சிந்தனைகளை இல்லாதொழிக்க வேண்டுமானால் கட்டாயம் குடும்ப கட்டமைப்புக்களில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். அது எவ்வாறாயின் குடும்பத்தில் ஆண், பெண் சமமாகப் பார்க்கப்படல் வேண்டும். அவர்களது வாழ்வும் சமத்துவத்தை பிரதிபலிக்க வேண்டும். ஆண்களுடைய தேவைகளுக்கு முதன்உரிமை கொடுக்கும் குடும்பம் பெண்களுடைய தேவைகளையும் கவனத்தில் எடுத்து சமமாக பார்க்க வேண்டும். அது மட்டும் இன்றி ஆண்பிள்ளைக்கு திருமணம் பார்க்கையில் எவ்வளவு அக்கறையுடனும் எதிர்பார்ப்புடனும் செயற்படுகின்றார்களோ அந்த அளவு தங்களுடைய பெண்ணுக்கு திருமணம் பார்க்கையிலும் அக்கறையுடனும், எதிர்பார்ப்புடனும் செயற்படல் வேண்டும். அதுமட்டும் இன்றி முடிவெடுக்கும் உரிமை இருபாலாருக்கும் சமமாகவே இருக்க வேண்டும். குடும்பத்தில் ஆண்பிள்ளையுடைய கல்வியிலும், தொழிலிலும் காட்டுகின்ற ஆர்வத்தினை பெண்ணுடைய கல்வியிலும், தொழிலும் காட்ட வேண்டும். காரணம், திருமணம் பேசுகின்றபோதே சில பெற்றோர்கள் எனது மகள் திருமணத்திற்கு பின்னர் வேலைக்கு செல்லமாட்டாள் என்ற ஒப்பந்தத்திலேயே திருமணம் செய்து வைக்கின்றார்கள். இதன் பின்னர் பெண் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு கணவனை விட்டு பிரிய நேர்ந்தால் அவள் தனக்கு எந்தவித பொருளாதார வளமும் இல்லாமல் இன்னுமொருவருடைய கையை எதிர்பார்த்து வாழவேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றார். அந்த இன்னுமொருவர் பெரும்பாலும் குடும்பத்தில் உள்ள ஆணாக இருப்பார். இதேநிலையில் எந்தப் பெற்றோராவது திருமணத்திற்கு பின்னர் எனது மகன் வேலைக்கு செல்லமாட்டார் என்ற ஒப்பந்தத்தில் திருமணம் செய்கின்றார்களா? ஏன் ஆண்பிள்ளையுடைய வேலைக்கு வழங்கும் முக்கியத்துவத்தை பெண்ணுடைய வேலைக்கு வழங்கத் தவறிவிடுகிறார்கள். இப்படியான நிலைமைகள் எமது குடும்ப கட்டமைப்புக்களில் நீக்கப்படுகின்றதோ அன்றுதான் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறையும். அதுமட்டும் இன்றி சமூகத்தில் வாழும் ஒவ்வொருவரும் தங்களுடைய பொறுப்பினை உணர்ந்து குடும்பத்திலும் சமூகத்திலும் செயற்பட்டாலே 75% பெண்களுக்கு எதிரான வன்முறையைக் குறைக்கலாம். அதனைவிட ஒரு பெண்ணுக்கு வன்முறை நிகழ்த்தப்பட்டால் இந்த பெண்ணுக்காக முதலில் அவர்களுடைய குடும்பம் வெளிவர வேண்டும். பின்பு அந்த பெண்ணிற்காக அவளுடைய சமூகம் வெளிவர வேண்டும் அப்போதுதான் பெண்களுக்கெதிரான வன்முறைகள் குறைக்கப்படும். அநியாயங்கள் தட்டிக் கேட்கப்படும். எமக்காகக் குரல் கொடுக்கப் பலர் உள்ளார்கள் என்ற நம்பிக்கை பெண்கள் மனதில் ஏற்படும். வன்முறையற்ற சமுதாயத்தை நாம் உருவாக்க முடியும். அதற்குத் தேவையான முதற்படியை எடுத்து வைக்க வேண்டும் என அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். ■

**ஸ்.ஜோ. நிஷாந்தினி**



# புதிய தலைமுறைப் பெண்ணுலகு

நாணல்கள்
போல வளைந்திடச் சொன்னதும்,
நாணித் திரையினுள்
ஆளுமை முடங்கிடச் செய்ததும்,

கல்வியின் கண்ணைத்
திறக்காமல்,
கலையின் சுவைகளைச்
சுகிக்காமல்,
இருட்படுதாவினுள்
பெண்ணை
இருத்திய பழமையின்
கருத்தியல் தம்மைத்
கொளுத்திட
அணிதிரண்டோம் இன்று

பீடங்களில்
தெய்வமாய் அமர்த்திவிட்டு
மனுஷியாய்
உலாவத் தடை விதிக்கும்
மேலாதிக்கச்
சிந்தனையின்,
அதிகாரத் திருக்கை வாலின்
சுழற்சி,
இனி
எங்கள் வீறார்ந்த
செயல்வாத முனைப்பின் முன்,
மோனமாய் முடங்கிப்
போவது,
நிட்சயம்

சேலைகள், இரவிக்கைகள்,
சிகை அலங்கார
மோஸ்தர்கள்
யாவும் எங்கள் மூளையைச்
சலவை செய்து,
"அழகியல் பொம்மை" எனக்
குறுக்கிடும்,
தந்தைமையுலகின்
தந்திரோபாய வார்ப்புகள்
என்பதுணர்ந்தோம்

எங்கே எவ்விடத்தும்,
எவரிடத்திருந்தும்
அதிகார அசமத்துவம்
முளைத்தெழுந்தாலும்
கிளர்ந்தெழுவோம்

பண்பாட்டுப் பேரணியாய்...
பால்நிலைச் சமத்துவச் செயலமர்வாய்
ஆக்ரோஷமான அணிதிரளலாய்...
அறிவியற் புரட்சிகளாய்...
புத்தகப் பெருவெளியாய்...
பூட்டுகள் உடைத்து,
கட்டுகள் அவிழ்த்து,
புதிய பார்வையில்
புதிய திசைகளில்,
புதிய சாசனங்களாய்,
புதிய தலைமுறைகளாய்
பெண்நிலை வரலாறு
படைக்குமே
எங்களின்
இயல்பான, உறுதியான
செயல்வாதம்

**சந்திரசேகரன் சசிதரன்**

# என்னில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிய ஓர் பகிர்வு

நான் மன்னாரில் வசிக்கின்றேன். எனக்குள் நிகழ்ந்தவற்றை உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். எனது தொழில் முச்சக்கர வண்டி ஓட்டுவது. மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்துக்கு நான் ஓர் வாடிக்கையான ஆட்டோ சாரதி. கார்த்திகை மாதக் காலப் பகுதியில் ஓர் நீண்ட நாட் செயற்பாட்டிற்காக எனது ஆட்டோவை முற்பதிவு செய்து கொண்டார்கள். அது பெண்கள் உரிமை தொடர்பான ஓர் செயல்வாத நடவடிக்கை தொடர்பானதென்பதை நான் பின்பு அறிந்து கொண்டேன். ஆனால், அவர்கள் முற்பதிவு செய்யும் போது எனது நோக்கம் வருமானமாகவே இருந்தது. வருமானம் கிடைக்கின்றது என்ற அடிப்படையில் அது எனக்கு சந்தோசத்தையும் அளித்தது. அப்போது எனக்குத் தெரிந்திருக்கவில்லை வெகு விரைவில் செயல்வாத நடவடிக்கைகளின் முக்கியத்துவம் வருமானத்தையும் மிஞ்சும் என்று. நானும் அச் செயல்வாதத்தில் ஒருவனாக மாறுவதற்கு அதிக நாட்கள் தேவைப்படவில்லை.

மன்னார் மாவட்டத்தின் பல இடங்களுக்கும் அவர்களுடனான எனது பயணம் தொடங்கியது. என்னுடன் வந்தவர்கள் என்னோடு பேசினார்கள். அது வழமைபோல் வழிப்போக்கு பேச்சாக இல்லாமல் பல கேள்விகள் பதில்கள் உள்ளடக்கிய பேச்சாக இருந்தது. ஆரம்பத்தில் நான் அவர்களது கருத்துக்களை பெரிதுபடுத்தவில்லை. எனக்கு மாற்றம் வேண்டும் என்று தோன்றவில்லை. ஆனால் என்னையும் அறியாமல் நாங்கள் கதைத்த விடயங்களும் நான் பார்த்து விளங்கிக் கொண்ட விடயங்களும் என்னைச் சிந்திக்க வைத்தது.

என்னில் உண்டாகிய மாற்றங்களை நான் சிறிது சிறிதாக உணரத் தொடங்கினேன். பிறந்ததில் இருந்து வேரூன்றி விதைக்கப்பட்ட பழக்கவழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகளை மாற்றவேண்டும் என்றால் அது இலகுவான காரியம் இல்லை. செயல்வாதிகள் பல இடங்களுக்கு சென்று பெண்களை சந்தித்து பேசினார்கள். சிறு குழு கூட்டங்களில் பெண் வன்முறை பற்றி பேசினார்கள். நானும் குற்ற உணர்வு இல்லாமல் பங்கு பற்றினேன். ஏன் என்றால் நான் பெண் வன்முறை செய்பவன் இல்லையென்பதனால். கூட்டங்களில் ஒவ்வோர் பெண்ணும் வன்முறை பற்றி பேசினார்கள். பேசும்போது அதில் ஓர் உண்மை தெரிந்தது. அவர்களின் பேச்சு எனக்கு வித்தியாசமாகவும் வியப்பாகவும் இருந்தது. பல பெண்களது அனுபவங்கள், பெண்களுக்கெதிரான வன்முறை என்றால் என்ன என்பதற்கு பல விளக்கங்களையும் பல கேள்விகளையும் என்னுள் ஏற்படுத்தியது. பெண்களுக்கெதிரான வன்முறைகளின் பல வடிவங்களை அவர்களது பேச்சு எனக்கு உணர்த்தியது. குடித்துவிட்டு அடித்தால் மட்டும் வன்முறை அல்ல. ஆண்களின் தவறான



பார்வைகளும், சொற்பிரயோகங்களும் கூட பெண்களுக்கெதிரான வன்முறையாக மாறும் என அறிந்து கொண்டேன்.

பெண்களுக்கெதிரான வன்முறைகள் தவிர்ந்து, அவர்கள் பகிர்ந்து கொண்ட வேறு பல விடயங்கள், பெண்களை எமது சமூகம் இரண்டாம் நிலையிலேயே வைத்துள்ளது என்பதை வலியுறுத்தியது. பெண்களை எம் சமூகம் எவ்வாறு பார்க்கின்றது என்பதையும் அதுவிடும் தவறுகளையும் அறிந்து கொண்டேன். இவை ஏன் என்ற கேள்வியும் என்னுள் எழுந்தது. எம்முன்னோர் அதற்கு காரணமாக அமைகின்றார்கள் என்பதை மட்டும் ஏற்றுக் கொள்ள முடியாது. நாம் ஒவ்வொருவரும் இதற்கு ஏதோ ஒரு வகையில் காரணமாக அமைகின்றோம். இவைகளை முதலில் என்னில் இருந்து அகற்றி பின்னர் என்னோடு சம்பந்தப்பட்டவர்களிடத்தும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று முடிவு செய்தேன்.

எனக்கு விளங்கியது நான் என்னை ஆராயத் தொடங்கி விட்டேன் என்று. சமூகத்தில் ஓர் ஆணாக எனக்கு கணவன், தகப்பன், மகன், மருமகன், அண்ணண் போன்ற பல அந்தஸ்துகள் கொடுக்கப்பட்டுள்ளன. இதே ஆணாக நான் எவ்வாறு பெண்களுடன் பழக வேண்டும் என்றும், குறிப்பாக என் மனைவி, மகள் உட்பட குடும்பத்தில் உள்ள பெண்களுடன் எவ்வாறு அவர்களது உரிமைகளை மதித்து வாழப் பழக வேண்டும் என்பதே என்னில் ஏற்பட்ட முக்கிய மாற்றமாகும். எனது குடும்பத்தில் பெண்களுக்கெதிரான வன்முறைகளை அழிக்க வேண்டும் எனத் தீர்மானித்தேன். எனக்குக் கிடைத்த பெண் குழந்தையை சகல உரிமைகளையும் பெற்று சமத்துவமாக வாழக் கூடியவளாக வளர்க்க வேண்டும் என்ற கருத்து என்னில் ஆழமாகப் பதிந்து கொண்டது. இதுவும் என்னில் ஏற்பட்ட மாற்றமே.

அதேவேளை என்னில் ஏற்பட்ட மாற்றங்களை எவ்வாறு ஓர் சமூக மாற்றமாக்குவது என்பது பற்றிய தெளிவு எனக்கு இன்னுமில்லை. நான் ஒருவன் சமூகத்தை மாற்றுவது என்பது கடினம். ஆனால் என்னில் மாற்றம் கொண்டு வருதல் என்பது இலகு. அதேநேரம் ஒரு சிறு முயற்சியாக என்னில் எழும் மாற்றங்களை என்னோடு பழகும் என் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ள முடிவெடுத்துள்ளேன்.

என்னால் முடிந்தவரை என் நண்பர்களுக்கு பெண்களுக்கெதிரான வன்முறை பற்றி விளங்க வைப்பேன். பெண்களை மதித்து சமமாக எண்ணும் மனிதன் தான் நல்ல ஆண்மகனாக இருக்க முடியும் என்பதை எடுத்துக்காட்டுவேன்.


இவ்வாறான பல மாற்றங்களுக்கு வழியமைத்த மாதர் அபிவிருத்தி ஒன்றியத்துடனான எனது செயல்வாதப் பயணம் மேலும் பல பயணங்களுக்கு வித்திட்டு விட்டு இனிதே நிறைவேறியது. என்னோடு பயணத்தில் பங்கு பற்றியவர்களுக்கு என் நன்றிகள். ■

**ஏ. ரோஜன்**

# மீண்டும் எழுவோம்

நிறம் தொலைத்த
வண்ணத்துப் பூச்சிகளின்
நிர்ப்பந்தச் சிறை வாழ்க்கை
சிறு தூறல்
அடைமழை
பெரு வெள்ளம்
மீண்டும் அதே பாணியில்
இடி முழக்கமும் கூடவே
அகண்ட வானப் பிரகாசம்
இடையிடையே மின் வெட்டும்
மறுபடியும் மாற்றம்
தட்டிச் செல்லும்
தகர்த்தெறியும் திறவு கோல்கள்
இதனிடையே
நிறம் இழந்த
வண்ணத்துப் பூச்சிகள்
மீண்டும் வண்ணமயம் தேடியே...
மீண்டெழுந்த சுயம்...
இறுகப் பற்றிய ஏக்கத் துளிகள்...
புதிய வேகம்
புதிரான பாதை
முன்னே சிறுபொறி
பெரு ஒளியாக...

**செந்துருத்தி**



# வாருங்கள் மாற்றத்தை நோக்கி

பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு (முன்னர் பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்பு Women and Media Collective) எனப்படுவது, பெண்களின் உரிமைகள் தொடர்பாக விழிப்பூட்டுதல், உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் அவர்களுக்குச் சாதகமான சட்டங்களுக்காகவும் கொள்கைகளுக்காகவும் பரிந்துரை செய்கின்ற ஒரு முன்னோடியான பெண்கள் அமைப்பாகும். சமூக, பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் ரீதியாக பெண்கள் முகங்கொடுக்கும் சிக்கல்களுக்கு பெண்ணியல்வாதம் மற்றும் பால்நிலை என்பவற்றுடன் கூடிய நோக்குடன் பெண்கள் தொடர்பாக சாதகமான சிந்தனைகளை மேம்படுத்துதல், வன்முறை மற்றும் இராணுவமயமாக்கம் அல்லாத சமூகமொன்றிற்காகப் பாடுபடுவது WMC யின் பிரதான நோக்கு ஆகும்.

WMC யின் உத்தியோகபூர்வ வருடமாகிய 1984 இற்கு முன் ஊடகத்தில் பெண்களின் வெளிப்படுத்துகை தொடர்பாக கவனம் செலுத்திய பெண்ணியல்வாதிகள் உத்தியோகபூர்வமற்ற வகையில் ஒன்று கூடத்தொடங்கினார்கள். இவர்களுள் பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பின் ஆரம்ப உறுப்பினர்களான குமுதினி சாமுவெல் மற்றும் சுனிலா அபேசேகர ஆகியோரும் அடங்குகின்றனர். சமூகத்தில் பெண்ணியல்வாதம் தொடர்பாக மிகவும் பலமான கலந்துரையாடலை கட்டியெழுப்பிய பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு 80ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட அரசியல் ரீதியிலான மாற்றங்கள் காரணமாக அரசியல் செயற்பாடு ரீதியிலான தோற்றப்பாட்டினைப் பெற்றது. 83ஆம் ஆண்டு ஜூலை கலவரம், அச்சம் நிலவிய காலம், 82-83 ஆண்டுகளில் சுதந்திர வர்த்தக வலயத்தில் பெண்




பெண்கள் செயற்பாட்டுக் குழுவினரிடையில் ஓர் கலந்துரையாடல், 1984



பிரதான ஊடகங்களில் பெண்களுக்கு பாதகமான கருத்துகளைக் கொண்ட விளம்பரங்களுக்கு எதிராக மாற்று விளம்பரங்களை நிர்மானிக்கும் பெண்கள் செயற்பாட்டுக் குழுவினர், 1984



சில்க் ச்கிரீன் முறையில் சுவரொட்டிகள் தயாரிப்பு பயிற்சி பெறும் பெண்ணிலைவாதிகள் சிலர்





*ஊடகங்களில் பெண்களுக்கு எதிரான பாதகமான கருத்துகளை வெளிப்படுத்தும் நிர்வாண விளம்பரங்களுக்கு எதிராக பெண்கள் செயற்பாட்டுக் குழுவால் சர்வதேச பெண்கள் தினத்தன்று மாற்று விளம்பரங்கள், சுவரொட்டிகள் போன்ற ஆக்கங்களை வெளியிட்டனர். அத்தோடு பெண்களுக்கு எதிரான நிர்வாண விளம்பரங்களை பொது இடத்தில் எரித்தார்கள். 1987*

தொழிலாளர்களின் போராட்டம், 84இல் பெருந்தோட்டப் பெண் தொழிலாளர்களின் சம சம்பள உயர்வுக்கான போராட்டம், 85இல் நிர்வாக போராட்டம், 1977இல் தொடக்கம் எண்பதுகள் வரை மொனராகலை சீனிப் போராட்டம், அதேபோல் துளிர்ந்தெழுந்த தேசியப் பிரச்சினையின் போது பெண்ணியல்வாத நோக்குடன் இவை அணுகப்பட்டன. அதனுடன் இணையத் தொடங்கினார்கள்.

பெண்ணியல்வாதம் மற்றும் கருத்தியல்களுக்கு அப்பால் சென்று அரசியல் மட்டத்திலான செயற்பாடுகளை கட்டியெழுப்புவதற்கான பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன. WMC இல் அங்கத்துவம் வகித்த பெண்கள் செயற்பாட்டுக் குழு மற்றும் சமாதானத்துக்கான பெண்கள் என்ற வலைப்பின்னல் ஊடாக பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு இந்தப் போராட்டங்களுக்குத் தனது பங்களிப்பினை வழங்கியது. அச்சம் நிலவிய காலத்தில் உயிர் அச்சுறுத்தல்களுக்கு உள்ளான பெண்ணியல்வாத செயற்பாட்டாளர்கள் கொழும்புக்கு வந்ததுடன் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கும் அதேபோல் ஏதேனும் வருமானத்தை சம்பாதிக்கக்கூடிய வகையில் லெட்டர் பிரஸ், சில்க் ஸ்கிரீன் பிரின்டிங் போன்ற அச்சக தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்பட்டன. இதேவேளை லீனா அய்ரின் ஹப்புதன்திரி என்ற பெண்ணியல்வாதியினால் வழிநடத்தப்பட்ட பெண் எழுத்தாளர்களின் சந்திப்பும் இடம்பெற்றது. பிரதான ஊடகங்களில் பெண்கள் தொடர்பான பாலியல் ரீதியான விளம்பரங்கள் மற்றும் பெண்களின் மீள் வெளிப்படுத்துகைக்கு எதிரான மற்றும் பாதகமான கருத்துகளைக் கொண்ட விளம்பரங்களுக்கு எதிராக மாற்று விளம்பரங்கள், சுவரொட்டிகள், சஞ்சிகைகள், கவிதைகள், பாடல்கள், தெருக்கூத்துக்கள் போன்ற ஆக்கங்களை மேற்கொள்ளவும் அழுத்தம் கொடுக்கவும் ஆரம்பித்தனர். நாட்டில் நிலவிய பயங்கரவாதம், யுத்தச் சூழ்நிலை மற்றும் அரசியல் நிலவரம் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சம காலத்தில் ஏற்படுகின்ற சமூகப் பிரச்சினைகள் என்பவற்றுக்காக வேண்டி வலையமைப்பாக மாறிய பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பானது மேலும் வலையமைப்புக்களை உருவாக்குவதற்கும், ஏனைய அமைப்புகளுடன் இணைந்து ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டங்கள் மற்றும் மனுக்கள் சமர்ப்பிக்கப்படுதல் போன்றவற்றை ஒழுங்கு செய்யவும் ஆரம்பித்தது.
பெண்கள் முகங்கொடுக்கின்ற பிரச்சினைகள் தொடர்பாக விழிப்பூட்டுவதற்கு அச்சு, ஒலி, ஒளி மற்றும் புதிய ஊடகங்களைப் பயன்படுத்துதல், அந்தப் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பளித்தல், அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்காக பரிந்துரை செய்தல், பெண்களுக்கு எதிரான அனைத்து பாகுபாடுகளை இல்லாதொழித்தல் பற்றிய சீடோ சமவாயம் (CEDAW) தொடர்பாக விழிப்பூட்டுதல், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் மற்றும் ஐக்கிய நாடுகளின் குழுவுக்கு சீடோ மாற்று அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் என்பன WMC யினது செயற்பாடுகளுள் முதன்மை பெறுகின்றன. தற்போது, CEDAW விற்கு நாடு ரீதியான அறிக்கை சமர்ப்பிக்கும் முக்கிய பொறுப்பினை WMC வகிக்கின்றது. பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு அடிமட்டத்தில் உள்ள அமைப்புகளை விழிப்பூட்டுதல் மற்றும் பயிற்சியளித்தல், தலைமைத்துவம் வழங்குதல் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அல்லது




செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல் என்பவற்றுக்காகத் தேவைப்படுகின்ற வசதிப்படுத்தல் நிதமும் வழங்கப்படுகின்றது.

WMC யானது அதன் ஆரம்ப காலத்திலிருந்து இதுவரை மேற்கொண்ட செயற்பாடுகளுள் சில முக்கியமான செயல்வாதங்கள் மட்டும் இக்கட்டுரையில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

### சட்ட மற்றும் கொள்கை மறுசீரமைப்பு

1. 2004 ஆம் ஆண்டு வீட்டு வன்முறைச் சட்டம் இயற்றுவதற்கான ஒருங்கிணைக்கப்பட்ட பிரசாரம், பரிந்துரை செய்தல் 2000 ஆம் ஆண்டில் ஆரம்பித்து 2005ஆம் ஆண்டு ஆவணி 9 ஆம் திகதி இலங்கைப் பாராளுமன்றம் வீட்டு வன்முறை தடைச்சட்டத்தினை ஏகமனதாக நிறைவேற்றியது.
2. பெண்கள் உரிமைகள் சட்ட மூலத்தை வரைவதில் பெண்கள் மீதான தேசிய குழு (NCW) விற்கு உதவியது.
3. சமூகவியலாளர்களது சங்கத்துடன் இணைந்து Women's Manifesto தயாரிக்கப்பட்டது.
4. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு சட்டத்திற்கான திருத்தங்களை வரைந்தது.
5. இலங்கை சீடோ குழுவிற்கு அதன் நிழல் அறிக்கை தொடர்பாக ஆதரவு திரட்டியதுடன் குழுவின் முடிவான கருத்துகள் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுத்தது. CEDAW தொடர்பாக சமுதாய அமைப்புக்களின் தலைவிகளை விழிப்பூட்டுதல், பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் நீண்டகாலமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.
6. 2010 இல் உள்ளூர் ஆட்சி மன்றத் தேர்தலுக்காக பதுளை, மொனறாகலை, திருகோணமலை, காலி மற்றும் குருநாகல் ஆகிய 5 மாவட்டங்களைச் சேர்ந்த பெண் வேட்பாளர்களை இனங்காணுதல், அவர்களைப் பயிற்றுவித்தல், பெயர் நியமனங்களுக்காக முன்நிறுத்துதல், தேர்தல் நடவடிக்கைகளுக்காக ஊக்கப்படுத்துதல். "பெண்களுக்கு பெயர் நியமனங்களும், வாக்குகளும்" என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக 20



பெண் பாராளுமன்ற உறுப்பினர்களைப் பாராட்டுதல், 2010



பெண்களுக்கான நியமனத்தை அதிகரிக்கும்படியான எதிர்ப்பு போராட்டம் லிப்ரன் சுற்றுவட்டத்தில், 2009 மார்கழி

வருடங்களாக பல நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டாலும் பெண்களுக்காக பெயர் நியமனங்களை பெற்றுக்கொள்வது இலங்கைச் சூழமைவில் இன்னும் சவாலாகவே காணப்படுகின்றது. அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்திற்காக கோட்டா முறையொன்றைக் கோரி தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற அழுத்தங்கள், பரிந்துரை செய்தல் மற்றும் அடிப்படை உரிமை பற்றிய வழக்கொன்றை 2010 ஆம் ஆண்டு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு பெண்கள் மற்றும் ஊடக கூட்டமைப்பு உள்ளடங்கலாக இன்னும் பல அமைப்புக்கள் நடவடிக்கை எடுத்தன.

### பெண்களின் இயலுமையைக் கட்டியெழுப்புதல்

1. 2002 ஐப்பசி பெண்கள் ஊடகக் கூட்டமைப்பினர் உலகின் பல பகுதிகளைச் சேர்ந்த முன்னணி ஆறு பெண் அமைதிச் செயற்பாட்டாளர்களையும், உள்ளூர் மட்ட பெண் செயற்பாட்டாளர்களையும் ஒன்று சேர்த்து முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு பயணிக்கவென ஒரு இலங்கைக்கான சர்வதேச பெண்கள் பணியினை ஒழுங்கு செய்தனர். இந்த சர்வதேச பெண்கள் பணியானது சமாதானச் செயன்முறையில் பெண்களின் முழு ஈடுபாடு தொடர்பான கண்டுபிடிப்புகள் மற்றும் சிபார்சுகளுடனான அறிக்கையை சமர்ப்பித்தது. இவ்அறிக்கையின் கண்டுபிடிப்புக்களானவை இலங்கைக்கு உள்ளேயும், வெளியேயும் பரவலாகப் பகிர்ந்து கொள்ளப்பட்டதுடன், "இலங்கையில் பெண்களும் நடந்து கொண்டிருக்கும் சமாதானச் செயன்முறையும்" தொடர்பான பரிந்துரை மற்றும் பரிந்துரைத்தல் செயற்பாடுகளுக்கான அடிப்படையை வழங்கியிருந்தது. ஒஸ்லோ உதவிக்குழு கூட்டத்திற்கு முன்பானதும், சமாதானச் செயன்முறையின் ஆரம்பத்தில் மதியுரைக்குழுவாக இருந்த பால்நிலை விடயங்கள் மீதான உபகுழுவை அமைப்பதற்கு காரணமாக இருந்த 2002 மார்கழி ஒஸ்லோ நான்காம் கட்ட பேச்சுவார்த்தைக்கு முன்பானதுமான சர்வதேச பணிக்குழுவின் பரிந்துரையானது அதனுடைய முக்கிய சாதிப்புக்களிலே அடங்கும்.



சமாதான தினத்தைக் கொண்டாடுதல் விப்ரன் சுற்றுவட்டத்தில் - மாசி 2006

2. நாடுபூராகவும் இருந்தான பெண்கள் பிரதிநிதிகளுடன் பெண்கள், அமைதியை உருவாக்கல் மற்றும் அமைதியைக் கட்டியெழுப்புதல் மீதான அனைத்துமடங்கிய நிரூபம் ஒன்றினை வரைவதற்கு இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம் மற்றும் சமூக விஞ்ஞானிகள் சங்கத்துடன் இணைந்து முனைப்புக்களை எடுத்தல். அத்துடன் 2002 ஆம் ஆண்டில் ஜனாதிபதி, பிரதம மந்திரி, எல்.ரீ.ரீ.ஈ மற்றும் நோர்வே தூதுவரைச் சந்திப்பதற்கான தூதுக்குழுவிற்கு தலைமை தாங்கியது.
3. இடம்பெயர்ந்த ஆட்களின் நிலைமைகளுடன் ஈடுபடுவதற்காக 1991 இல் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தை உருவாக்குதல்.
4. அரசாங்கத்திற்கும் எல்.ரீ.ரீ.ஈ. யினருக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு அரசியல் தீர்வுக்கு வரவேண்டுமென கட்டாயப்படுத்தப்பட்ட பல ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. நீண்டகாலமாக மேற்கொள்ளப்பட்ட லிப்ரன் சுற்றுவட்ட பிக்கரின் நடவடிக்கையில் பல செயற்பாட்டாளர்கள் பங்கேற்றதுடன் அது பொதுமக்கள் மத்தியில் கலந்துரையாடலுக்கும் வழிசமைத்தது.
5. சர்வதேச பெண்கள் தினம், சர்வதேச மனித உரிமைகள் தினம், பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கெதிரான சர்வதேச தினம் போன்ற சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த தினங்களைக் கொண்டாடுதல்.

### வலையமைப்புகள் அமைத்தல்

பெண்கள் மற்றும் ஊடக வலையமைப்பானது தனி நிறுவனமாக மட்டுமன்றி இன்னும் பல அமைப்புக்களுடன் வலையமைப்பு உருவாக்கிக் கொள்வதன் ஊடாக பல செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.




சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான இலங்கைப் பெண்கள் கூட்டமைப்பினர் அரசாங்கத்திற்கும் எல்.ரி.ரி.ஈ யினருக்கும் இடையிலான பேச்சுவார்த்தையை ஆரம்பிக்குமாறு நடத்திய அமைதி ஊர்வலம், 2006 மாசி



சர்வதேச பெண்கள் தினத்தையொட்டி பொலநறுவை எல்லைக் கிராமங்கள் பெண்கள் வலைப்பின்னால் ஊர்வலத்தையும் கூட்டத்தையும் ஒழுங்கு செய்தது. 2000 இற்கு மேற்பட்ட பெண் செயற்பாட்டாளர்கள் இதில் பங்கேற்றனர். 2000 பங்குனி

1. 2005 ஆம் ஆண்டில் சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான இலங்கைப் பெண்கள் கூட்டமைப்பினை நிறுவியதன் மூலம் அரசாங்கத்திற்கும் எல்.ரி.ரி.ஈ க்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் மீதான பரப்புரைகளை வசதிப்படுத்தியமை.
2. 2004 சுனாமியால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவுவதற்கான கூட்டமைப்பு ஒன்றினை அமைத்து வசதிப்படுத்தியதும் 2005 இல் பெண்களின் வாழ்வாதாரத்தில் உதவியது.



இலங்கைப் பெண்களின் அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டு பெண்களின் சம உரிமைக்காக குரல் எழுப்புதல், 2000 பங்குனி

3. முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழுவினரின் முரண்பாட்டு மற்றும் முரண்பாட்டிலிருந்து தப்புதல் போன்ற விடயங்களில் ஈடுபடும் எல்லைக்கிராம வலைப்பின்னல் பெண்கள் நிறுவனங்களுடன், 2005 இல் WMC அவற்றினை அமைப்பதற்கு உதவியாகப் பணியாற்றுகிறது.




இலங்கையின் அன்னையரும் புதல்வியரும் என்ற கூட்டமைப்பினரால் காணாமற்போதல் மற்றும் விலைவாசி உயர்வுக்கெதிரான எதிர்ப்புப் போராட்டம், 2007

4. 2002இல் இருந்து 2004 வரை கிழக்கு மாகாண மற்றும் தெற்கைச் சேர்ந்த எல்லைப் பகுதிகளிலிருந்தான பெண்களுடன் சமாதானத்திற்கான பரிமாற்ற விஜயங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் ஒழுங்கு செய்தது.
5. 2003 பங்குனியில் சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு கொழும்பில் WMC ஒரு ஊர்வலத்தையும் கூட்டத்தையும் இலங்கையின் அன்னையரும் புதல்வியரும் (Mothers and Daughters of Lanka) மற்றும் இலங்கைப் பெண்களின் அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டு SLWNGOF என்பவற்றின் வேலைகளை கூட்டிணைத்து ஒழுங்கு செய்தது. இதிலே யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், வவுனியா போன்ற வடக்கு கிழக்கு மாவட்டங்களில் முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட

பகுதிகள் எல்லைப் பிரதேசங்கள் ஏனைய தெற்கு மாவட்டங்களிலிருந்தும் பெண் செயற்பாட்டாளர்கள் பங்குபற்றினர். முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட இடங்களில் பெண்களின் அனுபவங்கள், அமைதி, நீடித்த வாழ்வாதாரம், உலகமயமாக்கல் போன்ற விடயங்கள் மீது குறிப்பான கவனம் செலுத்தப்பட்டது.

6. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை பலப்படுத்தும்படியும், பெண்களையும் பெண்களின் பிரச்சினைகளையும் சமாதானச் செயன்முறையில் சேர்த்துக் கொள்ளும்படியும் கேட்டுக்கொண்டு, கொழும்பிலே பெண்கள் தினத்தில் போராட்டத்தை ஒழுங்கு செய்ததுடன், பங்குனி 2002 இல் புனர்வாழ்வு மற்றும் புனருத்தாரண அமைச்சருக்கும் இவ்விடயம் தொடர்பான மனுவை வழங்கியது.

7. புலம்பெயர் தொழிலாளர்கள் தொடர்பான பிரச்சினைகளுடன் ஈடுபடுவதற்கும், பெண் புலம்பெயர் தொழிலாளர்களின் அப்பிரச்சினைகள் மீது அழுத்தம் கொடுப்பதற்குமாக WMC, 2001 இல் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான செயற்பாட்டு வலைப்பின்னலை (Action Network for Migrant Workers) உருவாக்கி அதன் வேலைகளை ஒருங்கிணைத்தது.

8. யுத்தத்தாலும், முரண்பாட்டாலும் நேரடியாகப் பாதிக்கப்பட்ட கிழக்கு மற்றும் எல்லைப் பகுதிகளைச் சேர்ந்த பெண்களின் பிரச்சினைகளை எடுத்துக்காட்டுவதற்காக 2001 இல் பொலநறுவையில் 2500 பெண்களைச் சந்தித்ததும் ஒரு பெண்கள் தின ஊர்வலத்தை ஒழுங்கு செய்ததும்.

9. 2000 ஆம் ஆண்டு சர்வதேச பெண்கள் தினத்தையொட்டி அரச சார்பற்ற நிறுவனங்கள் நிறுவனம் சார்பாக பெண்களும் சமாதானமும் என்ற கருப்பொருளில் நாடுபூராகவும் இருந்தான 2000 இற்கும் மேற்பட்ட பெண் செயற்பாட்டாளர்களுடன் விகாரமாதேவி பூங்காவில் எதிர்ப்புப் போராட்டத்தையும் ஊர்வலத்தையும் கூட்டத்தையும் ஒழுங்கு செய்தது.

10. 1999 பொலநறுவை எல்லைக் கிராமங்கள் பெண்கள் வலைப்பின்னலை நிறுவியது.

11. பெண்கள் மீதான செயற்பாட்டுக்கான பீஜிங் மேடை, பெண்களுக்கெதிரான எல்லா வடிவங்களிலுமான பாரபட்சங்களை இல்லாதொழிப்பது மீதான ஐ.நா சமவாயம் மற்றும் பெண்கள் மீதான செயற்பாட்டின் இலங்கை தேசியத் திட்டம் என்பவற்றில் விபரிக்கப்பட்டுள்ள அக்கறைக்குரிய சர்ச்சைக்குரிய விடயங்களைக் கண்காணித்தல் மற்றும் அமுல்ப்படுத்துதலை இயலச் செய்வதற்கான கொள்கை மற்றும் சட்ட மறுசீரமைப்பிற்காக ஆதரவைத் திரட்டுவதற்கு 1993 இல் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்தே செயற்படும் இலங்கைப் பெண்கள் அ.சா.நி.கள் (Sri Lanka Women's NGO Forum) சபையின் வேலைகளை WMC ஒருங்கிணைத்தது.

12. இலங்கையின் அன்னையரும் புதல்வியரும் என்ற கூட்டமைப்பின் நிறைவேற்றுக்குழுவில் பணியாற்றுவதுடன் அதன் ஸ்தாபக உறுப்பினராகவும் WMC இருந்தது. 1989 இல் இருந்து கூட்டமைப்பானது மனித உரிமைகள், பெண்கள் உரிமைகள், அமைதி போன்ற விடயங்கள் மீது பணியாற்றும் பெண்கள் நிறுவனங்களின் ஒரு முன்னேற்றகரமான கூட்டுக்குழுவாகும்.

13. மனித உரிமைகள் மற்றும் அமைதி விடயங்கள் மீது பணியாற்றும் பெண்கள் வலைப்பின்னல்களை நிறுவுவதற்கு வசதிப்படுத்தல்.



WMC தனது 25வது ஆண்டை 2009இல் பூர்த்தி செய்ததையிட்டு, இலங்கையில் பெண்களின் மற்றும் பெண் நிறுவனங்களின் செயல்வாதத்தை எடுத்துக் காட்டும் கண்காட்சியை ஒழுக்கு செய்தது, 2009 பங்குனி

## ஊடகம் மற்றும் வெளியிடுகை

1. சஞ்சிகைளை வெளியிடுதல்: ஆங்கிலத்தில் (OPTIONS 1994 இலிருந்து) சிங்களத்தில் (Eya 1995 இலிருந்து) மற்றும் தமிழில் சொல் (2004 இலிருந்து) என்ற பெயர்களில் பெண்ணியல்வாத சஞ்சிகைகளின் ஊடாக பெண்களின் பிரச்சினைகளைக் கலந்துரையாடுதல், பெண் எழுத்தாளர்களுக்கு வாய்ப்பளித்தல், சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் கவிதைகளையும் சிறுகதைகளையும் வெளியிடுதல்.
2. பெண் ஊடகவியலாளர்கள் எழுத்தாளர்கள் கவிஞர்கள் மற்றும் ஆக்க கலைஞர்களுடன் பணியாற்றியது. 1996-2004
3. பிரசுரிக்கப்பட்ட ஏனைய வெளியீடுகளான "குறுபான் செய்த கனவு" என அழைக்கப்படும் இன மற்றும் பால்நிலை அடையாளங்கள் குறித்த பெண்களின் சிறுகதைகளின் தொகுதி 2003 இல் வெளியிடப்பட்டது.
4. இலங்கையில் முரண்பாட்டிலும் யுத்தத்திலும் வாழும் பெண்களால் எழுதப்பட்ட கவிதைத் தொகுதி ஒன்று தமிழ் கவிதைகளின் சிங்கள மொழிபெயர்ப்பு மற்றும் மறுதலையாகவும் 2002 இல் வெளியிடப்பட்டது.
5. சமாதானம், இடப்பெயர்வு மற்றும் மீளக்குடியேறல், பெண்களுக்கு எதிரான வன்முறை, பாலியல் தொந்தரவு, அரசியலில் பெண் எனும் பல தலைப்புக்களில் 1999 இருந்து வானொலி நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன. 16 அங்கங்களைக் கொண்ட இடப்பெயர்வு மற்றும் மீளக்குடியேறல் மீதான வானொலி நாடகம் ஒன்று சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் தயாரிக்கப்பட்டு தேசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒலிபரப்பப்படும். இது வடக்கு கிழக்கில் இடப்பெயர்வின் உண்மைகள், பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாத சிங்களம், ஆங்கிலம் பேசும் பொதுமக்களிடையே இப்பிரச்சினை மீதான விழிப்புணர்வை ஏற்படுத்தவதற்கான ஒரு முயற்சியாகும். அண்மையில் தயாரிக்கப்பட்ட இலங்கையைச் சேர்ந்த 100 பெண் செயற்பாட்டாளர்களின் கதாபாத்திரங்களைக் கொண்ட இரண்டு நிமிட வானொலி நிகழ்ச்சிகள் பிரபல்யம் அடைந்தன.







புதிய பெண்ணியல்வாத இளைஞர் - யுவதிகளின் பெண்ணியல்வாத நோக்கினை மெருகூட்டும் பொருட்டு மும்மொழி சஞ்சிகைகளை வெளியிடுதல், குறும் திரைப்படப் போட்டிகள், பெண்களின் புகைப்படக் கண்காட்சி மற்றும் திரைப்படவிழாக்களை ஒழுங்கு செய்தல்



2009 இலிருந்து நடத்தப்படும் பெண்கள் புகைப்படக் கண்காட்சி

6. 2004ஆம் ஆண்டு ஏப்ரல் பொதுத் தேர்தலில் அரசியல் கட்சிகள், பெண்களை தமது நியமன நிரலில் சேர்த்துக் கொள்ளுமாறு வேண்டி மூன்று மொழிகளிலும் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தன.
7. பெண்களின் உரிமைகள் தொடர்பாக விழிப்பூட்டும் சுவரொட்டிகள், சர்வதேச மகளிர் தினத்தையொட்டி வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படுகின்ற திரைப்படவிழா, புதிய பெண்ணியல்வாத இளைஞர் - யுவதிகளின் பெண்ணியல்வாத நோக்கினை மெருகூட்டும் பொருட்டு குறும் திரைப்பட போட்டிகள் ஒழுங்கு செய்யப்படுதல்.
8. பெண்களின் புகைப்படக் கண்காட்சியினை ஒழுங்கு செய்ததன் மூலம் பெண் புகைப்பட கலைஞர்களை இனங்காணுதல் மற்றும் அவர்களது ஆற்றல்களை முன்னெடுத்து வருவதற்காக வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல். ■

**வேலாயுதன் ஜெயச்சித்ரா**

புகைப்படங்கள் : பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு




# ஆதித்தாய்

ஆதித்தாய் இங்கே வந்தாள்
மக்களைக் காண
ஆதித்தாய் இங்கே வந்தாள் (ஆதித்தாய்)

ஆதித்தாய் அன்றொரு காலம் கண்ட சமத்துவம்
மாயமாய் போக
மக்களே மக்களைத் தாக்க
கேள்விகள் கேட்க வந்தாள் இங்கு (ஆதித்தாய்)

ஆதித்தாய் எங்கள் அன்னை
அவள் வழியில்
வந்தவர் மக்கள் குடிகள்
மக்கள் குடிகள்
அன்னையரை மறந்தனரே
வன்மங்கள் கொண்டு
பெண்களையே வதைத்தனரே

ஒரு மகள் அலற
ஒரு மகள் கதற
பேத்தியும் பூட்டியும் பதறிடக் கதறிட

ஆதித்தாய் இங்கே வந்தாள்
கேள்விகள் கேட்க
ஆதித்தாய் இங்கே வந்தாள்

ஆதித்தாய் அன்றொரு காலம் கண்ட சமத்துவம்
மாயமாய் போக
மக்களே மக்களைத் தாக்க
கேள்விகள் கேட்க வந்தாள் இங்கு (ஆதித்தாய்)

ஆதித்தாய் இங்கே வந்தாள்
மாற்றங்கள் காண
ஆதித்தாய் இங்கே வந்தாள்

வேற்றுமை மறைய
ஒற்றுமை வளர
வாழ்க்கையின் அர்த்தம்
பெருகிடப் பெருகிட

ஆதித்தாய் இங்கே வந்தாள்
மாற்றங்கள் காண
ஆதித்தாய் இங்கே வந்தாள்.

**கமலா வாசுகி**

# பெண்ணிலைவாத செயற்பாட்டாளர்களான வாசுகிக்கும் காயத்ரிக்கும் இடையில் நடைபெற்ற ஓர் சம்பாசனை

குறிப்பு : இச்சம்பாசனையை அதிலிருக்கும் கருத்தாண்மை முக்கியத்துவம் இழக்கப்பட்டுவிடக் கூடாது என்பதை நோக்காகக் கொண்டு இதனை உரைநடை வடிவிலேயே உங்களுக்குத் தருகின்றோம்.

**கா:** எல்லாத்துக்கும் முதல்ல கதைக்க நேரம் ஒதுக்கியதற்கு நன்றி வாசு...

பெண்ணிலைவாத செயற்பாடுகள், பெண்ணிலைவாதம் அல்லது பெண்ணியல்வாதம் என்பது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அதனைப் பற்றி வரலாற்றோடு சம்பந்தப்படுத்தி சொல்ல முடியுமா?

**வா:** நான் என்ரை வாழ்க்கையில கருத்தியல் ரீதியாக எப்பிடிப் பார்க்கிறன் எண்டு யோசிக்காட்டியும் என்ரை வாழ்க்கையில பொம்பிளப் பிள்ளையா யாழ்ப்பாணத்தில வளரேக்கில சில சில விசயங்கள் எனக்குக் கேள்விக் குறியாகத் தான் இருந்தது. எனக்கு மட்டும் ஏன் இது இப்பிடி நடக்குது, நான் ஏன் வேறை மாதிரிச் செய்ய ஏலாது என்பது எனக்குப் பிரச்சினையாக இருந்தது. முக்கியமா அந்த உடுப்புகள் சார்ந்த பிரச்சினைகள், சில விரும்புற விடயங்கள் பெண் என்றபடியினால் செய்ய ஏலாது என்றது பிரச்சினையாகவே இருந்தன. முக்கியமா நீந்தப் பழக விருப்பம். கடலுக்கு யாரும் கூட்டிப் போகமாட்டினம். அதொரு பகிடியான விசயம். பிறகு பள்ளிக்குடங்களுக்கிள்ளையும் எங்களை நடத்திற விதங்கள். பொம்பிளப்பிள்ளை எண்டால் இப்பிடித்தான் இருக்க வேணும் என்டு அவை சொல்லேக்குள்ள ஏன் அப்பிடி இருக்க வேணும் எண்டு எல்லாத்திலேயும் ஏன் இருந்தது. அதை எங்கே யாரிட்டைக் கேட்கிறதெண்டு தெரியாது. முக்கியமா சாமத்திய வீடு, பிறகு ஸ்கூல்ல என்ன பாடம் தெரிவு செய்யுறது ... அதுகள் மாதிரி எல்லாம் பெரிய கலந்துரையாடலுக்கு இல்லாட்டியும் கேள்விகள் கேட்டுக் கொண்டு போறது. ஆனால் இந்த நேரம் பெண்களுக்கென்டில்லை சமூகங்களிலிலை ஏதோ வித்தியாசம், பிரச்சினைகள் இருக்கிறதென்டும் ஆக்களுக்குள்ள வித்தியாசங்கள் ஏற்றத்தாழ்வுகள் இருக்கிறதென்டும் சில புத்தகங்களுக்குளாலை எனக்கு தெரிய வந்தது. அப்பா புத்தகம் வாங்குவார். இண்டைக்கு மல்லிகை சஞ்சிகை தொடர்பாக கருத்தியல் ரீதியாக சரியான பிரச்சினை இருந்தாலும் சமூகத்தில இருக்கிற ஏற்றத் தாழ்வுகள் வேறை வேறை ஆக்கள் கேள்வி கேட்கலாம் என்ற நிலைப்பாட்டை எனக்கு முதல் அறிமுகப்படுத்தினது மல்லிகை தான். அதுக்குப் பிறகு பல்கலைக்கழகத்தில படங்கள் எல்லாம் கீறத் தொடங்கிட்டன். ஆனால் ஆரம்பத்தில என்னை சந்தோசப்படுத்த கீறினது. அதுக்குள்ள ஒரு கருத்தும் இருக்கேல்லை. பல்கலைக்கழகத்துக்கு வந்து விஞ்ஞான பீடத்தில ஒரு படங்கீறக் கூடிய ஆள் எண்டு அறிமுகமாகேக்குள்ள அப்ப நான் பிரபலமான ஆட் மாஸ்டரிட்டைப் போகத் தொடங்கினபடியால் அங்கை இருக்கிற பொம்புளப் பிள்ளை இங்கை என்டு அடையாளம் காண்டு கலைப் பீடத்தில நடைபெற்ற கண்காட்சியில்

என்ட ஓவியங்ளுக்கு ஒரு அறிமுகம் கிடைத்தது. இதை பெண்கள் ஆய்வு வட்டம் ஒழுங்குபடுத்தினது. அதுக்கு முதலே ரஜினி திரணகம அவவோடை சேர்ந்து போஸ்டர் செய்யுறதுக்குக் கூட்டிக் கொண்டு போனவை. அப்ப அந்த இடங்களிலை தான் ஒரு வேறுபட்ட உலகம் ஒன்று எனக்கு அறிமுகமானது. கட்டாயமாக எங்கட குடும்பங்கள் சொன்னது மட்டும் தான் இல்லை. இதைவிடவும் நாங்கள் கேள்வி கேட்கக் கூடிய ஒரு தளம் இருக்குது அதை வெளிப்படுத்தக் கூடிய வழிகள் இருக்குது என்பது தெரிய வந்தது.



பெண் எனும் நிலையில் நிண்டு என்னுடைய விடயங்களைக் கேள்வி கேட்கலாம் என்ட கருத்தியல் ரீதியான விசயங்களும் தெரிய வந்தது. அதுக்குப் பிறகு சூரியாவில சேர்ந்ததில் இருந்து இவ்விடயங்களுக்கு மேலும் விளக்கங்கள் கிடைத்தன.

**கா:** தொடக்கத்தில சொன்னீங்க தானே உங்களிட்டை இருந்த கேள்விகள், அதாவது இதுதான் விசயம் எண்டு சொல்லி இருக்கிறதை ஏன் இதுக்கு அப்பாலும் இருக்கக் கூடாதா? இல்லாட்டி இது மற்ற மாதிரியும் இருக்கக் கூடாதா? எண்டு பார்க்கத் தொடங்கினீர்கள். பெண்கள் ஆய்வு வட்டத்தில் முதல் முறையாக இந்த விசயங்களைப் பாவிச்சு உங்களது எண்ணங்களுக்கு உருவம் கொடுக்கலாம் என்ற எண்ணம் வந்ததென்று. அந்த அனுபவத்தைக் கொஞ்சம் கூடுதலாக சொல்ல முடியுமா?

**வா:** கலைப்பிரிவில் இருந்த வேற வேற பீடங்களிலை இருந்த ஆசிரியர்கள் மற்றது உள்ளுக்குள்ள இருந்த மாணவர்கள் போன்றோரே பெண்கள் ஆய்வு வட்டமாக இருந்தார்கள். நான் நினைக்கிறன் 1988இல், என்னுடையதும் அருந்ததியினதும் சித்திரக் கண்காட்சியை பரமேஸ்வரா மண்டபத்தில் பெண்கள் ஆய்வு வட்டம் ஒழுங்குபடுத்தினார்கள். எனக்கு நல்லா ஞாபகம் அந்த 2 நாள் கண்காட்சியிலும் கூடுதலாக இருந்தவர்கள் சிவரமணி, சுமி, அருந்ததி போன்றவர்கள்.

**கா:** அப்ப உங்கட படங்கள் பெண்கள் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்தத் தொடங்கிட்டுதா?

**வா:** அது வந்து முக்கியமா சித்திர மாஸ்டரிட்டைப் படிச்சுக் கொண்டிருந்த காலம். யுத்தம் யுத்தத்தோடை அனுபவங்கள் தான் அதில கூடுதலாக இருந்தது. ஆனா அதைக் கூடுதலாக வெளிப்படுத்தினது அந்தக் காலத்தில மார்க் மாஸ்ரரின்ரை மாணவர்களுள் இந்த விசயங்களைப் பலமா வெளிப்படுத்தினது எல்லாம் பொம்பிளைப் பிள்ளையள் தான். அருந்ததி, நான், சுகுணா, ஜக்குளின் பிறகு சுகி இப்பிடிக் கனபேர் அந்த நேரம் போர் பற்றி பொம்பிளைப் பிள்ளையள் தான் ஓவியத்துக்குள்ளாலே வெளிப்படுத்திக் கதைச்சுக் கொண்டிருந்தினம். அதுக்குள்ள என்னுடைய ஓவியங்கள் அநேகமாக இந்திய இராணுவத்தின்ரை அனுபவம் சார்ந்த வெளிப்பாடுகளாக இருந்தன.

**கா:** நீங்கள் நேரடியாகப் பெண்ணியல் அல்லது பெண்ணியல்வாதம் தொடர்பாக கதைக்காட்டிலும் அந்தநேரம் போர் மற்றும் போரினால் ஏற்படுகின்ற விளைவுகளை பெண் என்ற கண்ணுக்கூடாகப் பார்த்தீர்கள்.

**வா:** இவற்றில் பாலியல் வல்லுறவு பற்றி நாங்கள் கீறினதும் இருக்கு. ஒரு தாயாக பிள்ளைகளைக் காப்பாத்த செய்யுற போராட்டம். அதுகள் பொம்பிளையளோடை பார்வையில வரும் போது அது நிறையப்

பெண்ணாகிய அனுபவத்தை கொண்டு வாறதாகவும், வெறுமனே வெளியிலை நிண்டு இன்னொரு ஆளோடை அனுபவத்தைப் பிரதிபலிக்கின்ற அல்லது அதை ஒரு தொழில்நுட்ப ஓவியமாக அளிப்பது என்பதை விட இன்னொரு பரிமாணத்தில் அது வெளிவருகிறது. அரசியல் கூட எங்களது படங்களிலை வரும். பாலியல் வல்லுறவில் விளைவென்பது பெண்ணுடைய துயரம் என்பதை விட பிறகு அடுத்த கட்ட ஓவியங்களிலை அது தொடர்பான மாற்றத்தையும் நீங்கள் பார்ப்பீங்கள். இது என்னையும் அறியாமலே வந்ததொன்று. முதல்ல என்ன நடந்தது என்று எனக்கு விளங்கவில்லை. ஆனா இப்ப விளங்கப்படுத்தக் கூடிய அளவுக்கு அந்த மாற்றங்கள் என்னுடைய ஓவியங்களிலை இருக்குது.

கா: அதாவது உங்களுடைய கருத்தியல்கள் இல்லாட்டி உங்களது அனுபவங்கள் எவ்வளவு தூரம் மாற்றம் வளர்ச்சி கண்டு போகுதோ அவை உங்களுடைய ஓவியங்களிலையும் பிரதிபலிக்குது. இது முக்கியமான விடயம்.

வா: நிச்சயமாக. பெண்கள் ஆய்வு வட்டத்தில் எனக்கு கிடைத்த அறிமுகமானது நான் வளர்ந்த சூழலில் இருக்கக் கூடிய கட்டுப்பாட்டுச் சட்டகத்தில இருந்து வேறை தெரிவு இல்லையா எனத் தேடிக் கொண்டிருக்கும் போது, எனக்கு வேறை வேறை விதமான தளங்களைக் கொடுத்தது. இதுக்கு இந்தப் பெண்கள் ஆய்வு வட்டத்தைச் சேர்ந்த பல பேர் காரணமானார்கள். மேலும், படிப்பைத் தெரிவு செய்யுறது, தங்களுக்கு விருப்பமான வேலையை தெரிவு செய்யுறது, கலியாணத்துக்கு தங்களது விருப்பப்படி வாழ்க்கைத் துணையைத் தெரிவு செய்யுறது போன்ற அனைத்திலும் தாங்களே முடிவெடுக்கிற இவர்கள் போன்ற ஆட்கள் எனக்குத் துணிவைத் தந்தார்கள்.

கா: பல்கலைக்கழகத்தில படிச்சுக் கொண்டிருந்த நேரம் இந்த பல்கலைக்கழகத்தோடை தொடர்புடைய பெண்கள் ஆய்வு வட்டத்தை விட வேறை ஏதாவது பெண்களோடை வேலை செய்யுற அல்லது அந்தக் கருத்தியலோடு சம்பந்தப்பட்ட விடயங்களில் உங்களுக்குத் தொடர்பிருந்ததா?

வா: அதுக்குப் பிறகு பூரணி. பூரணிக்கும் எனக்குமான தொடர்பு திரும்பவும் இந்த ஓவியராகத்தான். பூரணிட முகாமைத்துவம், கொள்கை சார்ந்த நிலைப்பாடுகளில் எனக்கு எந்த சம்பந்தமும் இருக்கயில்லை. அங்க இருக்கிற பெண்கள் மற்றும் பிள்ளைகள் எல்லாரும் சேர்ந்து சாப்பிடுகிற மத்தியான நேரத்தில் வேறை வேறை செயற்பாட்டாளர்களாகிய நாமும் கலந்து கொள்வோம். அது தவிர, நான் போறது ஓவிய வகுப்பு நடத்துறதுக்கு.


**“மேலும், படிப்பைத் தெரிவு செய்யுறது, தங்களுக்கு விருப்பமான வேலையை தெரிவு செய்யுறது, கலியாணத்துக்கு தங்களது விருப்பப்படி வாழ்க்கைத் துணையைத் தெரிவு செய்யுறது போன்ற அனைத்திலும் தாங்களே முடிவெடுக்கிற இவர்கள் போன்ற ஆட்கள் எனக்குத் துணிவைத் தந்தார்கள்.”**


அதில விருப்பமான எல்லாரும் இருப்பினம். இன்னாருக்குத்தான் என்டில்லை. எங்களுக்கு எதுவுமே கிடைக்காத காலம் தானே. அப்ப பழைய பேப்பர், பள்ளிக்குடத்தில கரும்பலகையில கீறுற பழைய ஷோக் இப்படியாக கிடைக்கக் கூடிய பொருட்களை வைச்சுக் கொண்டு யாருக்கு விருப்பமோ அவர் எல்லாம் இருந்து கீறுவம். சிலவேளை நான் கீறி விடுறதை அவர்கள் நிறம் தீட்டுவார்கள். மழை பெய்தாலும் இடி முழங்கினாலும்

நான் பூரணிக்குப் போறதை நிறுத்துரேல்லை. அப்ப அது தூரம். நல்லூரிலை இருந்து மானிப்பாயுக்குப் போயே தீர வேண்டும் என்ற உந்துதலை தொடர்ந்து தரும் இடமாகப் பூரணி இருந்தது.

**கா:** *பூரணியைப் பற்றி ஓரிரு வசனம் சொல்ல முடியுமா?*

**வா:** பூரணியில பெண்களுக்கு நடந்த பாதிப்பை வச்சுக் கொண்டு திரும்ப அவையளை சமூகத்தில் ஏற்றுக் கொள்ள ஏலாது என்டு சொல்லிக் கைவிடப்பட்ட பொம்பிளையளுக்கு அவர்களது ஆளுமையை வளர்த்துக் கொள்ள இருந்த ஒரு இல்லமே பூரணி. இவர்களில் அநேகமானவர்கள் இந்திய இராணுவத்தோடை பாதிப்புக்குள்ளாக்கப்பட்டவர்கள். அந்த இல்லம் 1989, 1990 கால கட்டத்தில் இயங்கியது. எனக்கு வேற வேற விடயங்களைப் பார்க்கின்ற வாய்ப்புகள் ஓவியத்துக்குள்ள போனதால கிடைச்சது.

**கா:** *பெண் ஓவியர் என்ற பார்வையில பல விசயங்களுக்கான ஓர் திறவுகோல் உங்களுக்கு கிடைத்த மாதிரித் தானே?*

**வா:** ஆம். எங்கையும் யாருடனும் கதைக்கும் போது நான் ஓவியத்தில மட்டுமில்லை தன்னையும் பற்றி யோசிக்கிற ஒராள். தன்னைப் பற்றிய ஒரு தேடலும் விளக்கமும் இருக்கும் போதுதான் பெண்ணியவாதிகளுடனான உறவுகளும் வளர்ந்தது. பிறகு நாடகக் குழுவோாடு சேர்ந்ததும் எனக்கு ஒரு திறவுகோல். அப்போது தான் நான் படித்த விஞ்ஞானத்துறைப் படிப்பையும் விட வேறை தெரிவுகளும் இருக்குது என்றதை விளங்கிக் கொண்டேன். இந்தத் தருணத்தில விருப்பமில்லாத படிப்புப் படிப்பிச்சுப் போட்டியள் எண்டு எனது பெற்றோர்களுடன் பிரச்சினைப்படுத்தினேன்.

**கா:** *எது விருப்பம்?*

**வா:** சித்திரம் தான் விருப்பம். வீட்டில ஒருமாதிரி சண்டை பிடிச்சு இந்தியாவுக்குப் போய் படிக்கிறதுக்கு அனுமதி பெற்றுக் கொண்டு கஸ்டப்பட்டு ஒரு மாதிரியாக கொழும்புக்கு வந்து சேர்ந்தன். நான் கொழும்புக்கு வர ராஜீவ்காந்திக்கு குண்டு வைச்சிட்டாங்கள் அங்கை. அதோடை இந்தியாவுக்குப் போறது கெட்டுது. நான் திரும்பிப் போகமாட்டன் என்டு கொழும்பில நின்டிட்டன். கொழும்பில அறிமுகமான அருந்ததி அவையளோடை சேர்ந்து என்ரைபாட்டுக்கு வேலை செய்யத் தொடங்கிட்டன். அப்ப என்ரை பல்கலைக்கழக படிப்பு முடிஞ்சிட்டுது. இந்த நேரத்தில தான் கொழும்பில நின்டு விபவியில தமிழ் கலாசார உத்தியோகத்தராக வேலைக்குச் சேர்ந்தன். கொழும்பில சுனிலா அக்கா மாதிரி ஆட்களை சந்தித்தேன். அவர்களை திரைப்படக் கலந்துரையாடலின் போது தெரியும். அவர்களோடு பெண்ணியவாதிகள் வட்டத்திற்குள் போனதில்லை. வழக்கமான எங்கட யாழ்ப்பாணத்து தமிழ் பெண் என்ற சட்டகத்துக்குள் போகாமல் இருக்கிறதுக்கு எடுத்துக் கொண்ட ஒரு தெரிவுதான் விபவியுடனான என்ரை தொடக்கம்.

**கா:** *எப்ப உங்களுக்கு கிட்டத்தட்ட நான் ஒரு பெண்ணிலைவாதி என்ற அந்த விளக்கம் ஏற்பட்டிச்சு?*


**வா:** நான் ஒரு பெண்ணியல்வாதி என்று கையுயர்த்திச் சொல்லும் அளவுக்கு அது எப்போது விளங்கினது என்றால், கமலா பாசின்ரை பயிற்சிப்பட்டறை ஒன்றில்தான். அது சூரியாவுக்கு வந்தாப் பிறகு நடந்தது.

**கா:** *அப்போ சூரியா என்று பார்க்கும் போது 1995 இலா வந்தீங்கள்?*

**வா:** 1995 இல மட்டக்களப்புக்கு வந்தனாங்கள். அந்த வருடம் கார்த்திகை தொடக்கம் சூரியாவுடனான தொடர்பு தொடங்குது. 1996 தொடக்கம் பணிப்பாளர் சபையின் ஒரு அங்கத்தவர் ஆகினன். சூரியா 1992 இல கொழும்பில தொடங்கி 1994 இல மட்டக்களப்புக்கு வந்தினம்.

**கா:** சூரியா பெண்களுக்காக வேலை செய்யுற ஒரு நிறுவனம். உங்களுக்கு அவ்வளவு காலம் கிடைச்ச அனுபவத்தையும் அல்லது நீங்கள் எப்பிடி பெண்கள் தொடர்பான விடயங்களை அணுகினீர்கள் என்ற அடிப்படையிலும் ஓர் நிறுவனக் கட்டமைப்புக்குள் வரேக்குள்ள எப்பிடி இருந்திச்சு?

**வா:** சூரியாவில அப்ப நாலைஞ்சு பெண்கள்தான் வேலை செய்தார்கள். பெண்கள் ஆய்வுவட்டத்துக்குள் மற்றும் பூரணியில் இருந்த மாதிரியான பெண்களோடை இந்த வேலைகள் தொடங்கியது. நிறுவனமா பதிவு செய்து இருந்தாலும், அதோட அமைப்பில அந்த நிறுவனம் என்டு நாம் ஏற்கனவே எதிர்பார்க்கின்ற நிறுவன கட்டமைப்பு



பெரிசா இருக்கயில்லை. வேலை செய்யுற பெண்கள் தாங்கள் கண்டிட்டு வாற பிரச்சினைகளை கருத்தில் எடுக்கக் கூடியதாகவும், அதுக்கான திட்டங்களைத் தயாரிக்கக் கூடியதாகவும் செற்பாடுகள் அமைந்தன. பணிப்பாளர் குழு என்டதில் நெறியாளர் என்றொருவர் இல்லை தானே. வேலை செய்து கொண்டிருந்த நாலு பொம்பிளையளோ, உறுதுணையாக கருத்தியல் விளக்கங்கள் அதிகம் பெற்ற சூரியாவின் நண்பர்களோ தீர்மானங்களை எடுத்தார்கள். நாங்கள் நினைக்கிறது, செய்யுறது, சரியா என்று அடிக்கடி கதைப்பம். அதுக்குக் கூடுதலா அனுபவம் மிகுந்த ஆக்கள் உதவி செய்தீனம். எனக்கு அது பெரிய சிக்கலா இருக்கயில்லை. சில வேளைகளில் பெண்ணிய செயற்பாடுகளில் அனுபவம் இல்லாத தனியே தொழில் நுட்ப அறிவினை மட்டும் தெரிஞ்ச ஆட்களை வேறை வேறை பதவிகளிலை உள்ள கொண்டு வர வேணும் என்டேக்குள்ளதான் எனக்கு முரண்பாட்டுக் கருத்துகள் வந்தது.

**கா:** நீங்க சொன்னீங்கள் தானே நானும் பெண்ணியவாதி என யோசிச்சது கமலா பாசின்டை பயிற்சிப்பட்டறையில் என்று அது எந்தக் கால கட்டப் பகுதியில்?

**வா:** 1997, 1998 ஆக இருக்கும். சூரியாவால ஒரு 5 நாள் பயிற்சிக்கு அனுப்பினவை. கண்டியில நடந்தது. அப்ப அதை சுனிலா அக்காவும் கமலா பாசினும் நடத்தினவை. அதிலதான் பால்நிலை என்டால் என்ன? பெண்ணியவாதி என்டால் யார்? ஆணாதிக்கம் என்டால் என்ன? என்பவற்றிற்கு கருத்துருவாக்கம் ரீதியில் விளக்கம் கிடைத்தது. அப்போதுதான் நான் ஏற்கனவே செய்து கொண்டிருந்த விடயங்களுக்கு இதுதான் பெயர் என்ற விளக்கம் கிடைத்தது. அந்தப் பயிற்சிக் காலத்தில இதில யார் பெண்ணிலைவாதிகள் என அவர்கள் கேட்ட போது முதல்ல கை உயர்த்தினது நான்தான். அவர்களது விளக்கப்படுத்தலுக்குப் பிறகு இதுதான் நான் என்டு எனக்கு நல்லாத் தெரிந்தது. அவ்வளவு காலமும் அதுக்கொரு பெயர் வைக்க வேணும் எண்டு யோசிக்கயில்லை. கமலா பாசினோடை வந்த தொடர்பில இருந்து அவ என்னை ஆர்வம் மூட்டினா. அதுக்குப் பிறகு அவவின் ஒரு மாதகாலமுடைய கற்கைப் பயிற்சிப்பட்டறைக்குப் போனன். அந்த ஒரு மாதகால கற்கைக்குப் பின்னர் தான் எனக்கு நிறைய கருத்தியல் ரீதியான விளக்கங்களோடு தேடலும் வந்தது. எனக்கு பெண்ணிலைவாதத்தைப் பற்றிக் கதைக்கிறதுக்கான, வெளியில கொண்டு போறதுக்கான திறன் வளர்ந்தது சூரியாவில தான். சிந்தனையும் திறனும் வளர்ந்தது அங்கைதான். எனது ஓவியங்களில் அதுக்கு முதற் காலம், அதுக்குப் பிற்காலம் எனப் பிரிக்கிற அளவுக்கும், தூக்கி இரண்டு பக்கம் வைக்கிற அளவுக்கும் வித்தியாசம் வந்தது. இப்படியான பல தனிப்பட்ட ரீதியிலான மாற்றங்களை 1999 ஆம் ஆண்டு

மார்கழியில் நடந்த இந்த ஒரு மாத கால கற்கையை எனக்குத் தந்தது.

**கா:** நீங்கள் பெண்ணிலைவாதியாக உங்களை அடையாளப்படுத்தி வளர்ந்து வரும்போது உங்களைச் சார்ந்த நபர்கள் மற்றும் விடயங்கள் உங்களுக்கு பொருத்தமானதாக இருந்திச்சா?

**வா:** நான் பெண்ணிலைவாதியாக என்னுடைய சமூகத்தில வைச்சு என்னை வெளிக்காட்டவில்லை. இன்னொரு இடத்துக்கு வந்திட்டன். அப்ப இங்கை இவைக்கு நான் புது ஆள். அதாவது மட்டக்களப்புக்குப் புது ஆள். என்னில் ஏற்பட்ட மாற்றங்கள், வளர்சிகளுக்குப் பிறகே அவர்களுக்கு என்னைத் தெரியும். ஆனால் நான் நெருக்கமாகப் பழகின குடும்பங்களுக்கு எல்லாம் என்னைப் பற்றி வழமையான எதிர்பார்ப்புத்தான். விரிவுரையாளரது பெஞ்சாதி என்ட எதிர்பார்ப்புத் தான் இருந்தது. வீட்டுக்குள்ள ஜெயசங்கர் (கணவர்) வந்து சாதாரணமான வெளிப்படையான ஒருவராக இருந்தபடியால் நிறைச் சண்டைகள் வரும். எதிர்பார்க்காமல் அவருடைய யாழ்ப்பாணத்துத் தமிழ் ஆண் பாணி வந்துடுறது. ஆனால் எதிலும் வெளிப்படையாக இருப்பார். எப்பவுமே கதைச்சுக் கதைச்சு கேள்விகள் கேட்டுக் கேட்டு இருப்போம். இதன் மூலமே ஒரு சமத்துவமான வாழ்க்கை இரண்டு பேருக்கும் கிடைத்தது. என்னுடைய அப்பா எங்களோடு வீட்டில இருந்தவர். அதுக்குப் பிறகு அப்பா சிறந்த அவதானிப்பாளராக மாறிட்டார். அவருக்கு நிறைய ஏமாற்றங்கள் இருந்திருக்கு. நாங்கள் தாலி கட்டாதது, பிள்ளை பெறுவதில்லை என்ற முடிவு எடுத்த காலகட்டத்தில் எல்லாம் அவர் சார்பான குழுவில் இருந்து அழுத்தம் வந்திருக்கு. தேநீர் கூடப் போடத் தெரியாமல் இருந்தவரை தேநீர் போட வைக்க மட்டுமே என்னால முடிஞ்சுது. அது தவிர வேறை எதுவுமே செய்ய முடியலை. அவருக்கு இதில எவ்வளவு தூரம் விளக்கம் இருந்திச்சு என்டு தெரியலை. ஆனால் என்னில இருந்த விருப்பத்தில என்னை ஆதரித்துக் கொண்டு இருந்தவர். பெரிய தடங்கல் என்டு இருக்கயில்லை. ஆனால் வெளியில எங்களோடை சேர்ந்தால் கலியாணம் கட்டவிடமாட்டினம், திருமண வாழ்க்கை கிடைக்காது எண்டு சனங்கள் பலதைக் கதைக்கத் தொடங்கி விட்டார்கள்.

**கா:** நீங்கள் கலியாணம் கட்டித்தானே இருக்குறீங்க. பிறகு ஏன்?

**வா:** கலியாணம் கட்டினதுக்குரிய அடையாளங்கள், அதாவது பொட்டு வைக்கிறதில இருந்து வீட்டில சமைச்சுப் போடுறது வரை அந்த விடயங்கள் எதுவுமே செய்ததில்லைத் தானே. ஜெயசங்கர் வீடு கூட்டுறதே மற்றாக்களுக்குப் பிரச்சினையாக இருந்திச்சு. எங்கட வாழ்க்கையில அது பெரிசா குழப்பத்தைக் கொண்டு வரயில்லை. அதேநேரம் பிள்ளை பெறுவதில்லை என்ற முடிவைத் தான், நான் ஒருகாலத்திலையும் எதிர்பார்க்காமல் எடுத்த முடிவு. சின்னதில இருந்து இரண்டு பிள்ளைக் கற்பனைகள் வைச்சிருந்தனான். இங்க சிறுவர் வன்முறை சம்பந்தமான விடயங்களைக் கையாண்ட அனுபவமும் மற்றும் பிள்ளைகளைக் காணாமல் அவதிப்படும் அம்மாமார்களின் வேதனையை நேரடியாகக் கண்ட அனுபவமுமே இதற்குக் காரணம். அப்படிப்பட்ட ஒருநாளில்தான் திடுதிப்பெண்டு எழும்பி சொன்னன் நான் பிள்ளை பெறவேமாட்டேன் எண்டு.

**கா:** அதுக்கு உங்கடை கணவரும் சம்மதித்தாரா?

**வா:** நாங்கள் கதைச்சு எடுத்த முடிவுதான். இதுவரைக்கும் அதில எந்தக் குழப்பமும் இல்லை.

**கா:** நான் ஏன் அதைக் கேட்டன் எண்டால் கன பொம்பிளையளுக்கு பேச்சுவார்த்தை என்பது சரியான கடினமாக இருக்குது. எங்களுக்கு விருப்பமானதை விரும்பின வழியில செய்யுறதுக்கு பெண்கள் நிறைய பேச வேண்டி இருக்கு. அவங்களோடை சம்பந்தப்பட்ட எல்லாரோடையும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டி இருக்கு. அப்படிப் பாக்கேக்குளை எங்களிலை

*சிலபேருக்குத்தான் அது சாத்தியப்படுகுது. சமூகக் கட்டுப்பாடுகளுக்கு எதிரான கலாசாரத்துக்கு எதிரான விடயமாக இருந்தாலும் ஏதோ வழியில இதனை செய்து கொள்ளுறம். அப்பிடி செய்யக் கூடியதா இருக்கிற பெண்கள் மிகவும் குறைவு. இது ஒரு பெரிய சவால். இது தொடர்பாக வளமார்ந்த அனுபவங்களைக் கொண்ட பெண்ணிலைவாதி என்ற அடிப்படையில் உங்களது அனுபவங்கள் எப்பிடி இருந்திருக்கு என்பதைப் பற்றிக் கொஞ்சம் சொல்ல ஏலுமா?*

**வா:** நல்லா எங்களுக்குத் தெரியுற பலமான சமூகக் கட்டமைப்பு ஒன்று இருக்குத்தானே. அது விளங்கப்படுத்தவே தேவையில்லை. அது நீங்கள் எங்க போனாலும் பிடிச்சுத் தட்டி இழுத்துக் கொண்டு வந்து தங்களுடைய உருவத்திற்குள் போடுறதுக்கு பெரியளவிலான முயற்சி எடுக்கத்தான் போகுது. அதில் கனபேர் இணைஞ்சு நிக்கிறது பலம். அதிலிருந்து மாறி நிக்கிற எங்களுக்குத்தான் கஸ்டம். எனக்குத் தெரிய கன சந்தர்ப்பங்களிலை நான் பார்த்திருக்கிறன் மாறி நிண்டு இந்த செயற்பாங்கு அல்லது நடைமுறைகளில் தங்களைத் தக்க வைச்சுக் கொண்டிருக்கிற ஆக்களுக்குள்ள ஒரு தெளிவான பார்வை இருந்தது. தங்களுக்குள்ள தாங்கள் என்னவாக இருக்க வேணும் எண்டு தங்களைத் தெளிவாக வரையறுத்துக் கொண்ட பெண்கள் யாருமே திரும்பி அதுக்குள்ள அடிபட்டுப் போனதில்லை. பார்த்தீங்கள் என்டால் எனக்குப் பெரிசாக சவால் இல்லை எண்டு சொன்னாலும், உணர்வு ரீதியாக நாங்கள் பட்ட போராட்டம் வெளிப்படையானது அல்ல. நான் என்னவாக இருக்க வேணும்? என்பது தொடர்பான தெளிவான விளக்கமே எனது பலமாக இருந்திச்சு. பெண்ணியல்வாதியாக வாழுதல் என்ற நிலையைத் தெரிவு செய்யப் போகிற பெண்ணுக்கு, பெண்ணியல்வாதிகளாக இருக்கிற ஏனைய சகோதரிகளை தெளிவாகத் தெரியாட்டியும் அவர்களது வாழ்க்கையை எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற முடிவுகளில் அவர்கள் தெளிவாக இருக்க வேணும். நான் நினைக்கிறன் சமூகத்தில இருக்கிற அடக்கு முறைகளில் இருந்து வெளியே வாறதுக்கான தளங்கள் எவ்வளவு தூரம் கிடைக்குதென்று தெரியேல்லை. சிலருக்கு கிடைக்குது சிலருக்கு கிடைக்கயில்லை. எங்களுக்குள்ளும் ஒருத்தரை ஒருத்தர் பற்றிய சந்தேகங்கள் என்ட பிரச்சனை ஒன்டு இருக்குது. சில பெண்களுக்கு பெண்ணிலைவாதிகளாகத் தங்களை தக்க வைச்சுக் கொண்டாக்களோடை தங்களை இணைச்சுக் கொள்ளுற வாய்ப்பு இருக்குது. அவர்கள் விட்டுட்டு வாற ஏதோ ஒன்றுக்கான மாற்றுத் தளம் இங்க இருக்கும். வேறு சில பெண்களுக்கு அப்பிடியான இணைப்பை ஏற்படுத்துறதுக்கான சந்தர்ப்பங்கள் கிடைக்காத போது அவர்கள் அடக்கு முறைகளுக்குள்ளேயே முடங்கி விடுகிறார்கள். ஒன்டும் இல்லாத வெளியில பெண்ணிலைவாதம் இல்லைத் தானே?

> **“பெண்கள் உரிமைகள் பற்றிக் கதைபடாமல் பாலியல் சமத்துவம் பற்றிக் கதைக்கப்படுகுது. பால்நிலை சமத்துவம் சொல்லுறது பெண்ணிலைவாதம் தான். ஆனால் பால்நிலை சமத்துவத்தைக் கதைப்பது பெண்ணிலைவாதம் இல்லை என்று வந்துவிட்டது.”**

சமூக வாழ்க்கையும் இல்லைத் தானே? பெண்ணிலைவாதிகள் என்ற தளம் சில ஆக்களுக்கு சரியான இடத்தைக் கொடுக்காத நேரத்தில் பின்வாங்கிப் போயிருக்கினம். இன்னொண்டு எனக்குத் தனிப்பட்ட ரீதியில் சொல்லக் கூடியது என்னென்டால் நான் வந்து பெண்ணிலைவாதியாக இந்த வேலைகள் செய்து கொண்டிருநதாலும், சமூகம் ஆகலும் என்னைத் தள்ளி வைக்காமல் நான் அதுக்குள்ள இருந்து கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக தளங்களை

விரிச்சுக் கொண்டு வாறான். நிறைய ஆக்களோடை வேலை செய்ததன் கற்கையே எதிரிகளாகப் பார்க்காமல் ஆண்களுடனும் வேலை செய்யத் தொடங்கியது. அப்போதுதான் எனக்கு விளங்கினது அவையளும் எங்களை மாதிரி தெரியாத ஒரு தளத்தில் இருந்து தான் இதைச் செய்யினம் என்டு. அதுக்குப் பிறகு நான் கதைக்கிற விடயங்கள் பற்றி எங்க தொடர்பு வருகுதோ அங்கு எனது அணுகுமுறையை எப்போதுமே ஓர் சாதகமானதாக மாற்றிக் கொண்டேன். ஏதாவது ஒரு பிரச்சினை நடக்கேக்குள்ள திருப்பி இங்க வந்து கேட்கலாம், கதைக்கலாம், இந்த இடத்துக்குப் போனால் எதிரிகளாக புறக்கணிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையை கொண்டுவர நான் கஸ்ரப்பட்டன். இது தொடர்பாக என்னிலும் பல மாற்றங்களை கொண்டுவர வேண்டி இருந்தது.

**கா:** ஒரு வகையில பெண்கள் செயல்வாதக் கருத்துகளை ஒரு சமூக மாற்றமாகக் கொண்டு வரவேணும் என்ற அடிப்படையில உங்களில சில மாற்றங்களைக் கொண்டு வந்தீங்கள். இருந்தும் உங்களுடைய மையக் கொள்கைகள், விழுமியங்கள் என்பனவற்றை ஆண்களும் விளங்கி ஏற்றுக் கொள்ள வேணும் என்ட அடிப்படையில உங்களுடைய அணுகுமுறையைக் கொஞ்சம் நெகிழ்வுத் தன்மையாக்கிக் கொண்டீர்கள்.

**வா:** அது இடத்துக்கேற்ற வகையில மாறும். சிலவேளைகளில் பெண்ணிலைவாதம் தெரிஞ்சும் அதுக்கு மாறாக யாரேணும் செய்யினம் என்டால் அந்த இடத்தில எந்தவிதமான இறங்கிப் போதலுமின்றி, எனது பலமான பதில்களை அவர்களுக்குக் கொடுப்பன். எந்த விட்டுக் கொடுப்பும் இல்லை.

**கா:** சமூகம் கலாசாரம் ஒடுக்கம் என்ற தளத்திலிருந்து வெளியில வரும் போது இன்னொரு மாற்றுத் தேவைக்கான தளம் தேவை என்றீர்கள். இன்றைய பெண்ணியல்வாதிகள் குறைந்தது பெண்ணியவாதிகள் என்று சொல்லாட்டிலும் அந்த செயல்வாதத்தில் தம்மை முழுமையாக நம்பிக்கை கொண்டு தமது வேலைகளை அதை நேக்கி செய்து கொண்டிருக்கிற பெண்களுக்கு அப்பிடியான தளங்கள் இருக்கா?

**வா:** இப்ப எப்பிடி இருக்கெண்டால் அது ஓரளவுக்கு அரச சார்பற்ற நிறுவனமயமாக்கப்பட்டுள்ளது. அவையவை உருவாக்கிக் கொண்ட சின்னொரு நட்பு வட்டங்களாகவே இது இருக்குது.

> **“பெண்ணிலைவாதிகளுடைய கதையே கேட்கத் தேவையில்லை. அவையளுடைய சொந்தமான விடுதலை சார்ந்து ஒன்று இரண்டு விடயங்களிலாவது விட்டுக் கொடுக்க மாட்டம் என்று தீவிரமாக இருப்பதே முக்கியம். பெண்ணாக என்ரை உரிமையைப் பாதிக்கிற விடயத்தை நான் என்ன வந்தாலும் விட்டுக் கொடுக்க மாட்டன் என்றதில தீவிரமாக இருப்பது முக்கியம்.”**

இப்ப அநேகமா பெண்ணிலைவாத செயல்வாதங்களை அல்லது செயற்பாடுகளை செய்து கொண்டிருக்கிற ஆட்களுக்கு வேலைத் தளங்களுக்கு வெளியாலை இவ்வாறான செயற்பாடுகளை செய்ய கூடியதாக இருக்கக் கூடிய தளங்கள் மிகவும் குறைவு. முன்பு கதைக்கிற மாதிரி பெண்கள் ஆய்வு வட்டங்கள் கூட இப்போது இல்லை.

**கா:** உங்கட அனுபவத்தின் படி முதல்ல இப்படியான தளங்கள் நிரம்ப இருந்திருக்கா?

**வா:** எனக்கு மிச்ச அமைப்புகள் மிச்ச நிறுவனங்களோடை வேலைகள் பற்றித் தெரியாட்டியும் சூரியா வரைக்கும் தெரியும். அதுக்குள்ள பாத்தீங்கள் என்டால் ஒருத்தரோடை ஒருத்தர் இருந்த அனுசரணை, தொடர்பு, உதாரணமாக சுனிலாக்காவேடையோ சித்திராக்காவோடையோ இருந்த உறவுமுறை அவசியமானதாகின்றது. வழக்கமாக பெண்கள் அவர்களுடைய குடும்பங்கள் எதிர்பார்த்த வகிபாத்திரங்களில் இருந்து விடுபட்டு மாற்று வகிபங்கு எடுப்பதற்கு இந்த பக்க பலம் ஒரு முக்கிய காரணம். இவர்களுக்குள் இருந்த கதைகள், கலந்துரையாடல்கள் அவர்களை வளர்த்து விட்டது. அந்தநேரம் அதுக்குள்ள வாற சந்திப்புகளில் எத்தனையோ நிறுவனங்களில் இருந்து வாற பெண்கள் ஓரளவுக்கு இழுத்துப் பிடிச்சுக் கொண்டிருக்கிற அடக்குமுறைகள் பற்றி கதைக்கிற ஒரு தளம் இருந்தது. பரந்துபட்ட ஆக்கள் சேர்ர ஒரு தளமாக அது இருந்தது. அது பிறகு செயற்திட்டத்தை மையப்படுத்திய சின்ன சின்ன நிறுவன செயற்பாடுகளாக மாறியிருக்கு. திரும்ப ஒருகால் பெண்ணிலைவாதம் என்ட சொல் கூட இல்லாமல் போயிட்டுது தானே? அது பற்றிக் கூடத் திரும்பிப் போய்ப் பார்க்கிறதுக்கான தளங்கள் சரியான குறைவு.

**கா:** பெண்ணிலைவாதியாக நாங்கள் என்ன செய்ய வேணும் என்டு நினைக்கிறீங்கள்? இப்ப எங்கள் எல்லாருக்கும் ஒரு பொறுப்பிருக்குத் தானே? ஏதோ ஒரு வழியில அந்த தளத்தைத் திருப்பி பெற.

**வா:** முதலாவதாக அந்த சொல்லைப் பாவிக்கிற துணிவைக் கொண்டு வரவேணும். பெண்கள் உரிமைகள் பற்றிக் கதைபடாமல் பாலியல் சமத்துவம் பற்றிக் கதைக்கப்படுகுது. பால்நிலை சமத்துவம் சொல்லுறது பெண்ணிலைவாதம் தான். ஆனால் பால்நிலை சமத்துவத்தைக் கதைப்பது பெண்ணிலைவாதம் இல்லை என்று வந்துவிட்டது. பெண்ணிலைவாதம் என்டால் என்ன என்பது பலருக்கு குழப்பமாக இப்ப இருக்குது. பெண்ணிலைவாத செயற்பாடுகளைச் செய்யுற பலருக்கு தாம் செய்வது பற்றி விளங்காதுள்ளது. அந்த சொல்லையே திரும்ப அன்னியப்படாத சொல்லாக மாற்ற வேண்டிய தேவை இருக்குது. கருத்தியல் உட்பட. அது பற்றிக் கதைக்கக் கூடிய தளங்களை உருவாக்க வேண்டும். வேலைகள் சார்ந்து வரக்கூடிய பணம், புகழ், பதவி அதுக்கு மேலாக திரும்ப சகோதரித்துவ தளங்கள் உருவாக்கப்பட வேண்டும். அந்தத் தேவை நிச்சயம் உண்டு. கனபேர் முயற்சிகள் எடுக்கினம் என்டு தெரியும். நானும் முயற்சி செய்யுறன். இன்னும் சரியாக சரிவரயில்லை. இதில சம்பந்தப்படாத புது ஆக்களோடை செய்யுறது சுலபமாக இருக்குது. ஏற்கனவே இந்த அமைப்பில் இருப்போருக்கு மாற்று அமைப்பில் வாறது கடினமாகலாம்.

**கா:** பெண்ணிலைவாதத்தைக் கொண்டுவாறதுக்கு எப்பிடிப்பட்ட செயற்பாடு அல்லது நடைமுறை தேவைப்பட்டுதோ கிட்டத்தட்ட அதேநிலையில் திரும்ப வந்து நிற்கிறோம். திரும்ப பெண்கள் ஆய்வு வட்டத்தில் இருந்து தொடங்க வேண்டி வரும். வளர்ந்து வாற பெண்ணிலைவாதிகளுக்கு நீங்க சொல்ல விரும்பிறது என்ன?

**வா:** பெண்ணிலைவாதிகளுடைய கதையே கேட்கத் தேவையில்லை. அவையளுடைய சொந்தமான விடுதலை சார்ந்து ஒன்று இரண்டு விடயங்களிலாவது விட்டுக் கொடுக்க மாட்டம் என்று தீவிரமாக இருப்பதே முக்கியம். பெண்ணாக என்ரை உரிமையைப் பாதிக்கிற விடயத்தை நான் என்ன வந்தாலும் விட்டுக் கொடுக்க மாட்டன் என்றதில தீவிரமாக இருப்பது முக்கியம். நாங்கள் பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறையை ஒழிக்கப்பட வேண்டும் என்ற ஸ்திர நிலையை எடுக்கிறோம். அந்த நிலைப்பாடு எங்கடை வாழ்க்கைக்கானது மட்டுமல்ல. ஒருவரில் தொடங்கி கனபேரில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றம். நாங்கள் அந்த நிலைப்பாட்டில் தீவிரமாக இருப்பதென்பது செயற்பாட்டாளர்கள் யாவரினதும் பொறுப்பாகிறது. என்னைப் பொறுத்தவரை பலமான ஒரு நிலைப்பாடும் திருப்தியான,

சந்தோசமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையும் தான் முக்கியம். என்னுடைய இந்த நம்பிக்கை இன்னும் நிறையப் பேருக்கு நம்பிக்கையைக் குடுக்கும்.


**கா:** நீங்கள் கதைக்கும் போது எனக்கு மனதில் வந்த விடயம் திரும்ப திரும்ப நாங்கள் எங்களைக் கேள்வி கேட்பதும், நாங்கள் எப்பிடி அதுக்குள்ள எங்களைப் பொருத்துறம், அதாவது, சொல்லுகிற விடயத்திலோ செய்யிற விடயத்திலோ அல்லது நம்புற விடயத்திலோ எப்பிடிப் பொருத்துறம், அதைத் திருப்பிக் கேள்வியாகக் கேட்டுக் கொண்டு அதை தொடர் செயற்பாடாக மாற்றுகிறோம். அது நான் நினைக்கிறன் மிகவும் முக்கியமான அம்சம். கூடுதலாக நான் இதை பெண்ணியத்தில்தான் பாத்திருக்கிறன்.


**வா:** எங்களை நாங்களே பிரதிபலித்தல் என்பது எங்கள் எல்லாருக்கும் இருக்க வேண்டிய ஒன்று. நாங்கள் எதை கலந்துரையாடுறம், எதை விட்டுக் கொடுக்கிறம் என்பது பற்றித் தொடர்ந்து விழிப்புணர்வாகவே தான் இருக்கோணும். இல்லாட்டில் கஸ்டம். ஓவியக் கதை ஒன்டு சொல்ல வேணும். சூரியாவோடை முந்திய காலமெல்லாம் யுத்தத்தைப் பிரதிபலிக்கின்ற பாதிக்கப்பட்டோர் பார்வையில் இருந்துதான் வரும். இங்கையும் சூரியாவில நிறைய விடயங்களைக் கையாள்கின்ற நேரத்தில் எனக்கு நிறைய சவால்கள் ஏற்பட்டிருக்கு. அதுக்கு முதல் வாழ்க்கையில கேள்விப்படாத அளவு வன்முறைகளைப் பற்றி எல்லாம் கேள்விப்பட வேண்டி இருந்தது. ஒரு நாளைக்கு இரண்டு, மூன்று என வரேக்கை அதை எல்லாத்தையும் ஓவியங்களாகத்தான் போய் செய்யுறது. அப்ப அந்த ஓவியத்தில ஏன் இப்பிடி நடக்குது என்டு கிட்டத்தட்ட சுய ஆற்றுப்படுத்தல் மாதிரித்தான் இருந்து கொண்டிருந்தது. அதிலையும் கேள்வி கேட்கிற அகங்காரம் இருக்குமே ஒழிய அதுக்கு மேல பெண் பற்றிய அழுத்தப் பார்வை இருக்காது. கமலா பாசின்ரை ஒரு மாதகால பயிற்சிப்பட்டறைக்குப் போன பிறகுதான் உடல் சார்ந்த கட்டுப்பாடுகள் விடுபட்டு பெண் விடுதலை பற்றிய உருவகப்படுத்தல் உருவானது. அதுக்குப் பிறகு வாற ஓவியம் எல்லாம் சரியான கடும் கலர். எப்பிடி ஒரு பெண்ணை மூலையில வைச்சாலும் நான் கீறுற பெண் எழும்பி இயற்கையோடை இணைந்த தன்மையைக் கொண்டவளாக இருந்தாள்.

**கா:** இப்படியானதொரு சாதகமான மாற்றம் தொடர்பான கருத்துடன் இச்சம்பாசனையை முடித்துக் கொள்ளலாம் என நினைக்கிறன்.

**வா:** நல்லம். நன்றி காயா.

**கா, வா:** இச்சம்பாசனைக்கு எழுத்து வடிவம் கொடுக்கப்போற குகாவுக்கு நன்றி. ■






நாங்கள் வாழ வேண்டும் இந்தப் பூமியில்
நாங்கள் வாழ வேண்டும் இந்தப் பூமியில்

துயர்களையெல்லாம் துச்சமாய் எண்ணி
தடைகளையெல்லாம் வெற்றிப்படிகளாய் மாற்றி

துணிந்து, நிமிர்ந்து
உயர்வு பெற்று வாழ்ந்திட வேண்டும்

**கமலா வாசுகி, சி ஜெயசங்கர்**






# விடியலுக்காய் ஏங்கும் விட்டில் பூச்சிகள்

கரம் சேர்த்து - தம் உரிமை
உரம் பெற குழுமியிருந்ததோர்
பெண் குழுமம்

விழிகளின் திரையில்
அரங்கத்தின் விம்பம்
கோசத்தின் ஒலியில்
அதிர்ந்தது தேசம்

சமநீதி பெற்று சரித்திரம் படைத்திட்ட
சாதனைப் பெண்கள் நாம் - என்று
பறைசாற்றிப் பார் போற்ற - எண்ணம் கொண்ட
ஆதங்கத்தின் அரங்கமது

சிற்றுரை எனும் பெயரில்
சிறியோரின் அறியாமை தளர்த்த
சிகரமாய் வந்தவள்
சிரம் தாழ்த்தி வணங்கினாள் சபையோரை

உணவில் உவர்த்த உப்பினைப் போல்
ஊற்றெனும் உரையில் உணர்வலைகள்
எழுச்சியின் எல்லையில் நின்றிருந்தோர்
எழும்பிட மனமின்றி இருந்திருக்க
மகளிர் மகத்துவம் பேசும் அந்நாளில் - மனம்
நிறைந்திருந்தேன் அப்பெண்ணைக் கண்டு

நன்றியின் சாரல்கள் அரங்கதை நனைத்திருக்க
நகர்ந்தன கிளிகள் தத்தம் கூடு நோக்கி
மனமலைந்தது அவளைக் காண - அவள்
திறன்தனை வாழ்த்திப் பாட

விரைந்திருந்த அவளைக் காண
தேன் கவர்ந்த வண்டினை போல் வீடுவரை சென்றிருந்தேன்
வாழ்த்துக் கூற வாயெடுத்தேன்
வாயடைத்துப் போயிருந்தேன்
மார்படைத்து உறைந்து போனேன்
கற்சிலையாய் நானும் - கல்
நெஞ்சுடைய அவள் கணவன்
இழைத்த கொடூரத்தைக் கண்டு

கேள்வி அலை பலமாய் மோத - கரைந்ததென்
மணல் மனம் அந்நொடியில்
சமநீதி, சமத்துவமென சரித்திரம் பேசியதற்காய்
சரீரத்திற்கு கிடைத்திட்ட பரிசில் இதுவோ!

விண்ணில் மிளிர்ந்த விடிவெள்ளி
விட்டில் பூச்சி ஆகியது போல அவள் வாழ்க்கை
நாளாந்தம் அரங்கேறும் நாடகமிதுவென
நகர்ந்திட்ட அவள் போக்கு
நரகமாக்கியது என் இதயத்தை ஒரு நொடியில்

வெற்றி கொண்டாட வீராங்கனைகளல்ல நாம்
விடியலுக்காய் ஏங்கி நிற்கும் விட்டில் பூச்சிகளே - இன்றும் கூட
விழித்தெழுவோம் என்று கூறி விடைபெறுகின்றேன்
உண்மை சொல்லி

**காஞ்சனா முருகதாசன்**

# பால்நிலைப்படுத்தப்பட்ட ஊடகத்துறையில் எனது செயல்வாதம்

“நீங்கள் ஒரு பெண், அதுவும் ஒரு தமிழ்ப் பெண், மேலும் யாழ்ப்பாணச் சமூகத்தைச் சேர்ந்தவர் எவ்வாறு ஊடகவியலாளராகப் பணியாற்ற முடியும்?” “ஊடகவியல் ஆண்களுக்குரிய துறை பெண்களால் ஊடகவியலாளர்களாக வர முடியாது” எனப் பல்வேறுபட்ட கேள்விகளுடனான சவால்கள் எனக்கு ஆரம்பத்திலேயே விடுக்கப்பட்டன.

எதனையும் சாதிக்க முடியும் என்ற ஊக்கத்தை வழங்கக் கூடிய அன்பான குடும்பத்தினரின் ஒத்துழைப்பைப் பக்க பலமாகக் கொண்டு, நான் எனது முதலாவது தொழிலாகத் தமிழ் செய்தித்தாள் ஒன்றின் ஊடகவியலாளராக ஊடகத்துறையில் காலடி எடுத்து வைத்தேன். 1993 ஆம் ஆண்டில் எனது 21 ஆவது வயதில் ஊடகத்துறையில் பிரவேசித்தேன். மிக நீண்டகாலமாக நீடித்து வந்த யுத்தத்தின் இடைக்காலப் பகுதியில் நான் தமிழ் ஊடகவியலாளராகக் கடமையாற்ற ஆரம்பித்தேன். யுத்தத்தில் ஈடுபட்டு வரும் சிறுபான்மை இனமான தமிழ் சமூகத்தைச் சேர்ந்த அதுவும் பெண் ஊடகவியலாளராக நான் பணியாற்ற முடிவெடுத்தது எனக்குப் பெரும் சவாலாக அமைந்தது. அதைத் துணிவுடன் ஏற்றுக் கொண்டு பணியை ஆரம்பித்தேன். இந்தத் தொழில் முரட்டுத்தனமான வியப்பாகவே அமைந்திருந்தது.

பழமையைப் போற்றும் மரபு ரீதியான விழுமியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும், பல்வேறு கட்டுப்பாடுகளையும் ஒழுக்க விதிகளையும் அதிகம் கவனிக்கும் ஓர் சமூகத்தையே நான் பிரதிநிதித்துவம் செய்கின்றேன். பெண்கள் வீடுகளிலே மூடிவைக்கப்பட வேண்டியவர்கள் என்பதே இந்தச் சமூகத்தவர்களின் கொள்கையாக அமைந்துள்ளது.

எனினும், 21 வயதேயான நான், எனது சமூகமும், சக பெண்களும் அதிகம் விரும்பாத ஓர் தொழிலையை மேற்கொள்ள வேண்டும் என அவாக் கொண்டேன். யுத்தம் தொடர்பான செய்திகளைச் சேகரிக்க வேண்டும் என்பதே என்னுடைய விருப்பமாக அமைந்தது.

பரீட்சைகளுக்கு மேல் பரீட்சைகள் மற்றும் பல்வேறு சுற்று நேர்முகப் பரீட்சைகளின் பின்னரே என்னைத் தெரிவு செய்தார்கள். நான் கொழும்பில் உள்ள புனித பிரிட்ஜட்ஸ் கன்னியர்மடத்தில் கல்வி கற்றேன். இதனால் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் புலமை ஏற்பட்டது. தலைமுடியை நீளமாக வளர்க்கவில்லை, ஜீன்ஸ் (நீளக் காற்சட்டை) அணிவேன், எனது சமூகத்தின் மரபு ரீதியான தோற்றத்திலிருந்து மாறுபட்ட நிலையில் எனது தோற்றம் காணப்பட்டது. அலுவலக நிர்வாகம் என்னை மிகவும் வித்தியாசமாகவே நோக்கியது. ஊடகத்துறையானது ஆபத்தான தொழிலாகவே பல்வேறு நாடுகளில் கருதப்படுகின்றது. "இது தொடர்பில் எனது குடும்பத்தினர் அறிந்திருந்தார்களா?, ஊடகவியலாளராகக் கடமையாற்றுவதனைக் குடும்ப உறுப்பினர்கள் அனுமதித்தார்களா?"

எனப் பல தடவைகள் பலர் என்னிடம் கேள்வி எழுப்பினார்கள்.

இவ்வாறான ஓர் பின்னணியில் அலுவலக நிர்வாகம் மேலதிக நிபந்தனைகள் சிலவற்றை விதித்தது. சர்ச்சைக்குரிய விடயங்களை எழுதக்கூடாது யுத்தம் இடம்பெறும் வலயங்களுக்குச் செல்லக்கூடாது. தேவையோ தேவையில்லையோ எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஆண் புகைப்படக் கலைஞர் ஒருவரின் உதவியுடனேயே செய்தி சேகரிக்கச் செல்ல வேண்டும், இரவு நேரங்களில் கடமையில் ஈடுபடக் கூடாது போன்ற பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன. இவ்வாறான கட்டுப்பாடுகள் கெடுபிடிகள் தொடர்பில் உடன்பாடு இல்லாத நான், இந்தத் தடைகளை உடைத்தெறிய முனைப்புக் காட்டினேன். எனினும், இந்தப் போராட்டங்களில் வெற்றி கொள்ள எனக்கு நீண்ட காலம் காத்திருக்க வேண்டியேற்பட்டது. ஆரம்பத்தில் எனது பெயர் செய்திகளில் குறிப்பிடப்படவில்லை, பின்னர் பெயரின் முதலெழுத்துகள் மட்டும் இணைக்கப்பட்டன.




பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிராக அதிகரித்து வரும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கெதிராக அண்மையில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம்.
படப்பிடிப்பு - துஷியந்தினி கனகசபாபதிப்பிள்ளை, கொழும்பு, ஆடி 2012.

நீண்ட காலத்தின் பின்னரே முழுப் பெயருடன் செய்திகள் மற்றும் கட்டுரைகள் பிரசுரமாகின.

எனது சுய முயற்சியின் காரணமாக நான் யுத்த வலயங்களுக்குச் சென்று அக்கால நிலைமைகளைச் செய்தி அறிக்கையிட்டேன். இடம்பெயர்ந்த மக்கள், நிலக்கண்ணி வெடிகள், பலவந்தமான முறையில் படையில் ஆட்களை (முக்கியமாகச் சிறுவர்களை) இணைத்தல், காணாமல் போதல்கள், ஊடக சுதந்திரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் செய்திகள் சேகரித்தேன். களத்திற்குச் சென்றேன். ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கலகங்களை நேரில் சென்று பார்வையிட்டுச் செய்தி அறிக்கையிட்டேன். புகைப்படமெடுத்தேன்.

யுத்த வலயத்திற்கு நேரில் சென்று இந்த விடயங்கள் தொடர்பில் செய்தி அறிக்கை இடுவதற்கு மிகவும் சொற்பளவான ஊடகவியலாளர்களே விரும்புவார்கள். எனது பல செய்திச் சேகரிப்புகளைப் பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்கள் பயன்படுத்திக் கொண்டன.

ஊடக ஒழுக்கவிதிகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்பதில் நான் கூடுதல் சிரத்தை எடுத்து வருகின்றேன். ஊடக ஒழுக்க மரபுகள் பேணப்பட வேண்டும் என்பதில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கின்றேன். அதாவது ஊடகத்துறையில் பக்கச்சார்புத் தன்மையைத் தவிர்க்க வேண்டும்.

நான் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த காரணத்தினால், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுவேன் என அவர்கள் கருதினார்கள். என்னுடைய சில ஆக்கங்கள் தொடர்பில் அவர்கள் திருப்தியடையவில்லை. எனினும், அதனை நான் இடையூறாகக் கருதவில்லை. நான் எனது கொள்கைகளிலிருந்து மாறுபடவில்லை. எனது கொள்கைகளிலிருந்து மாறுபடாமல் ஊடகப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்பதில் கூடுதல் அக்கறை செலுத்தினேன்.

சில விடயங்கள் தொடர்பிலான செய்திகளை அறிக்கையிடும் போது நான் பல சவால்களை எதிர்நோக்கினேன். குறிப்பாக மூதூரிலிருந்து முஸ்லீம் மக்களைத் தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியேற்றிய சம்பவம் தொடர்பான செய்தி போன்றவற்றை இங்கு குறிப்பிடலாம்.



யாழ்ப்பாணத்தில் முதற்தடவையாக முச்சக்கர வண்டிகளைச் செலுத்திச் சாதனை புரியும் தமிழ்ப் பெண்கள்.
படப்பிடிப்பு - துஷியந்தினி கனகசபாபதிப்பிள்ளை, யாழ்ப்பாணம், சித்திரை 2012.

குறித்த செய்தியைச் சேகரிப்பதற்காக நான் மூதூருக்குப் பயணம் செய்தேன், "புகைப்படங்கள் ஆயிரம் வார்த்தைகளைப் பேசும்" என்ற கூற்றின் மீது மிகுந்த நம்பிக்கை கொண்ட நான், சம்பவம் தொடர்பான சில புகைப்படங்களையும், அது தொடர்பான செய்திகளையும் எனது வலைப்பதிவில் தரவேற்றம் செய்தேன்.

இந்தச் செய்தி தொடர்பான வலைப்பதிவினைப் பலர் பார்வையிட்டனர். இணையத்தின் ஊடாகப் பலர் இந்தச் செய்தி தொடர்பான தகவல்களைத் தங்களுடைய நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டனர். மூதூர் சம்பவம் தொடர்பான செய்தியைக் குறித்த நேரத்தில் வேறு எந்த ஊடகமும் பதிவு செய்யவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்த புகைப்படங்களையும், கட்டுரையையும் உடனடியாக அகற்றுமாறு கட்டளையிட்டனர். வலைப்பதிவில் தரவேற்றம் செய்த செய்தியை அகற்ற முடியாது என நான் அவர்களிடம் உறுதியாகக் கூறினேன்.

செய்திகள் தொடர்பிலான உறுதியான நிலைப்பாடு காரணமாக எனக்குப் பல தரப்பினரிடமிருந்தும் கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டன. இவ்வாறான கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்ட பல ஆண் சக ஊடக நண்பர்கள் நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்து சென்று பல நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர். எனினும், ஊடகச் சேவையைத் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும் என்ற நிலைப்பாடு காரணமாக நான் நாட்டை விட்டு வெளியேற விரும்பவில்லை. எனது சவால் மிக்க ஊடகப் பணியை மகிழ்ச்சியுடன் தொடர்கின்றேன்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட தலைவர்களைச் சந்திக்கவும் , நேர்காணவும் பல சந்தர்ப்பங்கள் எனக்குக் கிட்டின. இதேபோன்று அரசாங்கத் தரப்பைச் சேர்ந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க உட்படப் பலரையும் மற்றும் இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் பங்காற்றிய வெளிநாட்டுப் பிரமுகர்களையும் சந்திக்கவும், நேர்காணவும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன.

யுத்தத்தின் பின்னர், தமிழ் மக்களின் வாழ்க்கை முறைமை, கலாசாரம் போன்ற விடயங்கள் தொடர்பிலான செய்தி அறிக்கையிடலில் நான்

தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றேன். 2005 ஆம் ஆண்டு நான் எனது வலைப்பதிவினை (Blog) ஆரம்பித்தேன். செய்திகள், கட்டுரைகள் மற்றும் புகைப்படங்களைத் தரவேற்றம் செய்யும் நோக்கில் இந்த வலைப்பதிவு ஆரம்பிக்கப்பட்டது. பல ஊடகங்கள் மற்றும் வெளிநாடுகளில் இயங்கும் இணையத் தளங்கள் எனது வலைப்பதிவில் (www.humanityashore.org, www.humanityashore.com, www.PassionParade.blogspot.com, www.flickr.com/photos/PassionParade, www.twitter.com/DushiYanthini) பிரசுரமாகும் விடயங்களை மீள் பிரசுரம் செய்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

வலைப்பதிவினை ஆரம்பித்த தருணத்தில் எவரும் அதனை வாசிக்கமாட்டார்கள் எனப் பலர் என்னிடம் கூறினார்கள். எனினும், ஊடக ஒழுக்க விதிகளுக்கு அமைய இந்த வலைப்பதிவினைப் பராமரிக்க நான் அதிக சிரத்தை காட்டி வருகின்றேன். இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசங்கள் தொடர்பில் ஆர்வம் காட்டும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாசகர்கள் எனது வலைப்பதிவினைப் பார்வையிடக் கூடுதல் நாட்டம் காட்டுகின்றனர்.

அச்சு ஊடகத்திலிருந்து வானொலி, தொலைக்காட்சி இறுதியாக இணைய ஊடகங்களில் நான் எனது பங்களிப்பினை முற்று முழுதாக வழங்கி வருகின்றேன். நவீன ஊடகக் கருவிகளைப் பயன்படுத்தி ஆக்கங்களை மிளிரச் செய்ய வேண்டும்



யுத்தம் முடிவடைந்த நிலையில் புதைக்கப்பட்டுள்ள நிலக் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டும் பெண். படப்பிடிப்பு - துஷியந்தினி கனகசபாபதிப்பிள்ளை, தோப்பூர், வைகாசி 2009

என்பதில் நான் அதிக ஆர்வமும், நம்பிக்கையும் கொண்டுள்ளேன். சாதாரண கமரா ஒன்றிலிருந்து அதி நவீன தொழில்சார் கமரா ஒன்றை இயக்கும் அளவிற்கு நான் தொழிலுட்ப ரீதியாகவும் பரிணமித்துள்ளேன் என்பதில் எனக்குப் பெருமிதம்.

புகைப்படத் துறையைப் பொறுத்த வரையில் பொதுவாகவே பெண்களின் ஆற்றல்களைக் குறைத்தே மதிப்பிடப்படுகின்றன. "நான் ஓர் புகைப்படக் கலைஞர் அல்லது புகைப்பட ஊடகவியலாளர்" எனப் பெண்கள் பெருமிதத்துடன் சொல்லிக் கொள்ளும் தருணங்களில் பல கேள்விக் கணைகள் தொடுக்கப்படுகின்றன.

"தொழில்சார் கமராக்களை இயக்கத் தெரியுமா?", "லென்ஸ்களை எவ்வாறு பயன்படுத்துவது எனத் தெரியுமா?", "இரவு நேரங்களில் தனியாகப் பயணம் செய்ய முடியுமா?", "இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்கு (யுத்த காலத்தில்) தனியாகச் சென்று முரண்பாட்டு நிலைமைகளைப் பதிவு செய்ய முடியுமா?", "ஆர்ப்பாட்டங்கள், கலகங்கள் போன்றன குறித்த புகைப்படங்களை எடுக்கத் தெரியுமா?" "அமைதி நிலவும் பிரதேசத்தை விட்டு வெளியேறி முரண்பாடு நிலவும் பிரதேசத்தில் வாழ முடியுமா?", "மரமொன்றில் அல்லது கட்டடமொன்றில் ஏறிப் படமெடுக்க முடியுமா?", "உயரமான (குதியுள்ள) செருப்புக்களைப் பயன்படுத்தாமல் இருக்க முடியுமா?" "கமராக் கருவிகளைக் கொண்ட சுமையான பைகளைச் சுமந்து திரிய முடியுமா?", "திருமண பந்தத்தில் இணைந்து கொண்டதன் பின்னர் இந்தத் தொழிலை நீடிக்க முடியுமா?" இவ்வாறான முடிவற்ற பல கேள்விகள் இன்றும் தொடர்கின்றன.

தொழில் போட்டி, பொறாமை போன்ற கடுமையான சவால்களை நான் எதிர்நோக்க நேரிட்டது. குறிப்பாக யுத்த வலயத்தில் புகைப்படக் கருவியுடன் செய்தி சேகரிக்கச் சென்ற போது கடுமையான நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தேன். ஆண் புகைப்பட ஊடகவியலாளர்கள் பெண் ஊடகவியலாளர்கள் தொடர்பில் கொண்டிருந்த நிலைப்பாடு விரும்பத் தகாத வகையில் அமைந்துள்ளது. "நீங்கள் யார்?" "தமிழ் பெண் ஒருவர் யுத்த வலயத்தில் புகைப்பட ஊடகத்துறையில் பணியாற்றுவதா?"

என்ற அலட்சியமான மற்றும் கோபத்தை ஏற்படுத்தக் கூடிய கேள்விக் கணைகளை ஆண் ஊடகவியலாளர்களும் அதிகாரிகளும் தொடுத்தனர்.

"பெண்ணலைவாதி" அல்லது "பெண்ணியியலாளர் " அல்லது "பெண் உரிமைச் செயற்பாட்டாளர்" என்று என்னை அடையாளப்படுத்திக் கொள்வது எனக்குப் பெருமிதமான விடயமே. எனினும், பெண்ணியிலாளர் தொடர்பான சமூகப் பார்வை அபத்தமானது, பெண் உரிமைச் செயற்பாட்டாளர்கள் தொடர்பாகச் சமூகத்தில் பாதகமான கருதுகோள்களே விஞ்சி நிற்கின்றன.

தமிழ் பத்திரிகையில் எச்.ஐ.வி நோய்த் தொற்று, ஓரினச் சேர்க்கை தொடர்பிலான செய்திகளை அறிக்கையிட்ட போது எனது ஆண் சக ஊடக நண்பர்கள் என்னை நோக்கிய விதம் மிகவும் மோசமானது. "நீங்கள் பெண்ணியியலாளரா?" எனப் பலர் கேலிக் கேள்விக் கணைகளைத் தொடுத்தனர்.

பெண் உரிமைச் செயற்பாட்டாளர்கள் புகைப்பிடிப்பார்கள், மது அருந்துவார்கள், ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவார்கள் உதாரணமாக மேற்கத்தைய பெண்களைப் போன்று வாழ்வார்கள், ஒழுக்க விதிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கமாட்டார்கள் என்று பொதுமைப்படுத்தப்பட்ட கருத்துருவாக்கங்களே காணப்படுகின்றது. இந்த நிலைப்பாட்டை மாற்றியமைப்பதற்காக நான் இன்னமும் போராடி வருகின்றேன், குறிப்பாகத் தமிழ்ச் சமூகத்தில் இவ்வாறான கருதுகோள்கள் விஞ்சியிருக்கின்றன. இது கவலைக்குரிய விடயம். அதிலும் தமிழ் ஆண்கள் அதிகளவு இவ்வாறான கருத்துருவாக்கங்களில் நம்பிக்கை கொண்டுள்ளனர். இங்கு பெண்களது அடிப்படையான உரிமையே தாக்கப்படுகின்றது. பெண் உரிமைச் செயற்பாட்டாளர்கள் என்றால் என்ன மற்றும் அவர்கள் சமூகத்திற்கு ஆற்றும் அளப்பரிய பணி யாது என்பது பற்றிய சரியான தெளிவுபடுத்தல்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

பெண் வலைப்பதிவாளர்களின் சர்வதேச மாநாடு 2010 ஆம் ஆண்டு



வாகரையில் இடம்பெற்ற யுத்தத்தின் போது தனது காலையிழந்த பொதுமகன் ஆறுமுகத்தான் குடியிருப்பில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக முகாமில் கொடிய வெய்யிலில் தனது ஊன்றுகோலுடன் செல்லும் காட்சி. படப்பிடிப்பு - துஷியந்தினி கனகசபாபதிப்பிள்ளை, மட்டக்களப்பு, ஆனி 2007.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்றது. பல பாகங்களையும் சேர்ந்த பெண் வலைப்பதிவாளர்கள் இந்த வலைப்பதிவாளர் மாநாட்டில் கலந்து கொண்டனர். நியூயோர்க்கின் ஹில்டன் ஹோட்டலின் நாட்டிய மண்டபத்தில் பெண் வலைப்பதிவாளர்கள் நிரம்பி வழிந்தனர். உலகம் முழுவதிலும் இருந்து விண்ணப்பம் செய்த ஆயிரக் கணக்கான பெண் வலைப்பதிவாளர்களிலிருந்து இலங்கை, ஆப்கானிஸ்தான், பஹ்ரெய்ன் மற்றும் ஆர்ஜன்டீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த நான்கு பெண் வலைப்பதிவாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தலைசிறந்த பெண் வலைப்பதிவாளர்களான இந்த நால்வருக்கும், நியூயோர்க்கில் நடைபெற்ற ஆறாம் சர்வதேச வலைப்பதிவாளர் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. வலைப்பதிவின் மூலம் செயல்வாதத்திலும் மற்றும் சீர்திருத்த நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வரும் பெண் வலைப்பதிவாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுப்பதே இந்த மாநாட்டின் பிரதான இலக்காகும். சர்வதேச வலைப்பதிவாளர் மாநாட்டில் கலந்து கொள்வதற்கான புலமைப் பரிசிலைப் பெற்றுக் கொண்டு, மாநாட்டில் கலந்து கொண்ட முதலாவது இலங்கைப் பெண் வலைப்பதிவாளர் என்ற

பெருமையைப் பெற்றதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆண்கள் மிகச் செறிவாக ஆதிக்கம் செலுத்தும் ஊடகத்துறையில் எனது பெயரைச் சரியான முறையில் பதிவு செய்து கொள்வதற்கும் ஓர் தடத்தை பதிப்பதற்கும் கடுமையாகப் போராட வேண்டியேற்பட்டது. பெண் என்ற வகையிலும், சிறுபான்மைத் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த பெண் என்ற வகையிலும் பாரிய சவால்களை (பாதுகாப்பு உட்பட) எதிர்நோக்க நேரிட்டது. கடுமையான அர்ப்பணிப்புடன் கடின உழைப்புக் காரணமாக ஊடகத்துறையில் எனது பெயரைத் திடமாகப் பதிவு செய்துகொள்ள முடிந்தது. குறிப்பாக ஆணாதிக்கம் மேலோங்கியுள்ள ஊடகவியல் துறையில் பல தடைகளையும் தாண்டி நான் தடம் பதித்துள்ளேன் என்பது மகிழ்ச்சிக்குரியதோர் விடயமாகும்.

எனது ஊடகப் பணி ஆரம்பித்த காலம் முதலே குடும்பத்தார் அளப்பரிய ஒத்துழைப்பை நல்கி வருகின்றனர். குடும்ப உறுப்பினர்களின் திடமான ஊக்குவிப்பு உண்மையில் என்னை வலுவடையச் செய்கின்றது.

இலங்கையில் ஊடகத்துறை மற்றும் ஊடகத்துறை மூலமான செயல்வாதம் ஆகியவற்றை இலகுவான பயணமாகக் கருத முடியாது. தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் செய்திகள் கட்டுரைகள் புகைப்படங்கள் வீடியோ போன்றவற்றின் ஊடாக மனித உரிமைகள், பெண்களின் உரிமைகள், சிறுவர்களின் உரிமைகள், ஊடகச் சுதந்திரம் போன்றவற்றிற்காகத் தொடர்ந்தும் குரல் கொடுத்து எனது செயல்வாதத்தை வலுவூட்டி வருகின்றேன். பல சவால்கள் மற்றும் இடர்கள் இருப்பினும் இந்தப் புனிதமான துறையானது எனக்கு மிகுந்த ஆத்ம திருப்தியைத் தருகின்றது. எனது செயல்வாதப் பயணம் தொடரும். ■

**துஷியந்தினி கனகசபாபதிப்பிள்ளை**



சிரேஷ்ட ஊடகவியலாளர் ஞானசுந்தரம் குகநாதன் தாக்கப்பட்டதைக் கண்டித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம்.
படப்பிடிப்பு - துஷியந்தினி கனகசபாபதிப்பிள்ளை,
யாழ்ப்பாணம், ஆவணி 2011.

லாலல லாலல ...

(என ஒரு மெட்டை இசைத்தபடி வந்து எல்லோரும் வட்டமாக நின்று அதே மெட்டில் அமைந்த பின்வரும் பாடலைப் பாடுதல்)

எங்களின் ஊரில் எங்களின் வீட்டில்
அமைதி நிறைந்திடுமா?
அமைதி நிறைந்திடுமா?,
பெண்களின் வாழ்விலும்,
ஆண்களின் வாழ்விலும்
நிம்மதி காண்போமா?
நிம்மதி காண்போமா?
லாலல லாலல ...

போரிலா வாழ்வு வேண்டும் என்று
நாட்டினில் நாம் கேட்டோம்
நாட்டினில் நாம் கேட்டோம்
போரிலா வாழ்வு வேண்டும் என்று
வீட்டிலும் நாம் கேட்போம்
வீட்டிலும் நாம் கேட்போம்
லாலல லாலல ...

நாட்டினில் நடக்கும் வன்முறை ஒழிக்க
நாங்கள் எழுந்து நின்றோம்
நாங்கள் எழுந்து நின்றோம்
வீட்டினுள் நடக்கும் வன்முறை ஒழிக்க
நாங்கள் எழுந்து நிற்போம்
நாங்கள் எழுந்து நிற்போம்

நாட்டில் நடக்கும் வன்முறை ஒழிக்க
நாங்கள் இணைந்து நின்றோம்
நாங்கள் இணைந்து நின்றோம்
வீட்டினுள் நடக்கும் வன்முறை ஒழிக்க
நாங்கள் இணைந்து நிற்போம்
நாங்கள் இணைந்து நிற்போம்

# அன்பை நிறைத்திடுவோம்

குடிப்பதும், அடிப்பதும் தவிர்த்தே நாங்கள்
தலை நிமிர்ந்தே வாழ்வோம்
தலை நிமிர்ந்தே வாழ்வோம்
பெண்களின் வாழ்விலும்,
ஆண்களின் வாழ்விலும்
நிம்மதியைக் காண்போம்
நிம்மதியைக் காண்போம்

கட்டுப்படுத்தும் வாழ்க்கை முறைகளை
நீக்கி எழுந்திடுவோம்
நீக்கி எழுந்திடுவோம்
வன்முறையற்ற வாழ்க்கை முறையினை
மீளவும் ஆக்கிடுவோம்
மீளவும் ஆக்கிடுவோம்

எங்களின் ஊரில் எங்களின் வீட்டில்
அன்பை நிறைத்திடுவோம்
அன்பை நிறைத்திடுவோம்
எங்களின் ஊரில் எங்களின் வீட்டில்
அமைதி நிறைத்திடுவோம்
அமைதி நிறைத்திடுவோம்

**மூன்றாவது கண் உள்ளூர் அறிவு, திறன் செயற்பாட்டு நண்பர்கள் வட்டம்**



கொழும்பில் சர்வதேச பெண்கள் தினத்தை ஒட்டி விலைவாசி ஏற்றத்திற்கெதிரான ஆர்ப்பாட்டம், பங்குனி 2012. படப்பிடிப்பு - சச்சினி பெரேரா.

# பெண்ணடிமையை ஒழிக்கக் கைகொடுப்போம்

"ஏட்டினையும் பெண்கள் தொடுவது தீமை என்றெண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார் வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டிவைப்போம் என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்."

இது பாரதியின் சிந்தனையில் தோன்றிய சிறப்பு மிக கவித்துளிகள். ஆழியானது பரந்து விரிந்து இப்பிரபஞ்சத்தில் அழகு சேர்த்துக் கொண்டிருக்கின்றது. அதன் மத்தியில் கோளமிட்டதைப் போல பரந்த நிலத் தொகுதி அங்கே படைக்கப்பட்ட மனிதன், இறைவன் தந்த வளத்தை சிறப்பாக மாற்றிக் கொண்டு ஜீவித்துக் கொண்டிருக்கின்றான்.

இதில் இரண்டு வகை இனம் ஒன்று ஆண் மற்றொன்று பெண். இங்கே இருவருக்கும் சமஉரிமை வழங்கப்பட வேண்டும். பாரதியின் காலத்தில் பெண்ணடிமையைக் கண்டு அவர் கொதித்தார். இதைத்தான் ஒரு கவிஞர் அழகாகப் பாடினார். "சாஸ்திரங்கள் பெண் மனதை மூடி மறைத்ததம்மா அந்த ஆத்திரத்தில் பாரதிக்கு மீசை துடித்ததம்மா" இதன் பின்னும் இவ்வுலகம் பெண்ணை விடுவிக்காமல் தான் சுழல்கின்றது.

இன்றைய யுகம் கூட மூட நம்பிக்கையில் அமிழ்ந்து பெண்களின் கற்பனை வாழ்வை வெறும் கற்பனையாகவே மாற்றிக் கொண்டிருக்கின்றது. "பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான் புவி பேணி வளர்த்திடும் ஈசன். மண்ணுக்குள்ளே சில மூடர் நல்ல மாதர் அறிவை கெடுத்தார். கண்கள் இரண்டினில் ஒன்றை குத்திக்காட்டி கெடுத்திடலாமோ பெண்கள் அறிவை வளர்த்தாள் வையம் பேதமை அற்றிடும் தானோ".

இதுவும் பாரதி கூற்றுத்தான். எம்முடல் உறுப்புக்களில் சிறந்த உறுப்பாக கண் கொள்ளப்படுகின்றது. இக்கண்களில் ஒன்றை ஆண் எனக் கொண்டு மற்றைய கண்ணை பெண் எனக் கொள்வோம். இவற்றில் இவ்வுலகில் ஆண் வர்க்கம் மட்டும் போதுமானதென்றால் எமது சாட்சி கெட்டுவிடும். ஒரு சமூகம் நன்றாக உருவாக வேண்டும் என்றால் பெண்ணிற்கும் சம உரிமை கொடுத்தாக வேண்டும். அப்பொழுதுதான் வையகம் பேதமை அற்று சுழலும் இன்றைய உலகம் கூட பெண்களை வெறும் பொம்மைகளாகத்தான் பார்க்கின்றது.

எனவே பெண்களுக்கும் சமபங்கு வழங்கும் போது மட்டுமே இப்பிரபஞ்சம் பாரபட்சமில்லாத பூமியாக திகழும். எனவே பெண்ணடிமையை ஒழிக்க இனி வரும் இளம் சமூகமாகிய நாம் கைகொடுப்போம். பெண்ணடிமையை ஒழித்து பெண்ணுரிமையைக் காப்போம். ■

**லூர்ட்ஸ் கிபானி பெரேரா**

# செயல்வாதப் பயணம் ஒன்றின் மீட்டல்கள்

*1980களில் நடந்தவற்றை மறக்கும் முன்னர் எழுத வேண்டும் எனப் பலமுறை ஆரம்பித்தேன். நெருங்கிய சிநேகிதிகள் எழுதும்படி உற்சாகம் ஊட்டிக் கொண்டிருந்தனர். சிந்திக்க ஆரம்பிக்கும் பொழுது முதலில் நினைவுக்கு வருவது 1981 ஆண்டு யாழ்நூல் நிலைய எரிப்புத்தான். அந்த நிகழ்வு பலரையும் மிகவும் பாதித்த ஒன்றாகும். அது மனதில் உறைந்து போன துன்பமான விசயம். ஒவ்வொரு கிழமையும் நூல்நிலையம் சென்று பிள்ளைகளும் நானும் படித்தவற்றைக் கொடுத்து விட்டுப் புதிய நூல்களை எடுத்து வருவோம். அங்கு செல்வது அன்றோடு நின்று விட்டது.*

*அடியும் முடியும் தேடும் போது, 1983 ஆம் ஆண்டு ஆடி மாதம் தான் நினைவில் வருகிறது. பெரும்பாலான நமது மக்களுக்கு பயங்கர அனுபவங்களைக் கொடுத்து, உலகின் பல பகுதிகளுக்கும் சிதற அடித்து விட்டது. நாங்களும் மற்றவர்களைப் போல் ஏக்கமும் குழப்பமும் அடைந்த நிலையில் ஒரு தீர்மானத்தை எடுத்தோம். கொழும்பு வீடு எரிந்த நிலையில் சில காலம் தமிழ் நாட்டில் இருக்கலாம் என்று அங்கு சென்றோம். அங்கு பாதுகாப்பாய் இருக்கும் என்ற எண்ணம் பலருக்கும் இருந்தது. அந்த சமயம் யாழ்ப்பாணம் திரும்பி வரவேண்டும் போல எண்ணம் வரவில்லை. அதற்கு முக்கிய காரணம் திருநெல்வேலியில் தான் 1983 ஆடியில் 13 சிங்கள இராணுவத்தினர் கண்ணிவெடியில் இறந்தனர். அதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் பல பொதுமக்களைச் சுட்டனர். இது நடந்தது எங்களது வீட்டுக்கு அருகாமையில். எங்களுக்கு நன்கு தெரிந்த குடும்பமும் இறந்து போனார்கள். இதனால் திரும்பி அங்கு போகத் தயக்கமாக இருந்தது. என் கணவரும் இறந்து 6 மாதங்களே ஆகியிருந்தது. அவரில்லாமல் அதே வீட்டில் போயிருக்க யோசனையாக இருந்தது. அத்துடன் எங்கள் வீடு தனிமையான இடத்தில் இருந்தது. ஆகவே பாதுகாப்பைப் பற்றியும் யோசிக்க வேண்டி இருந்தது.*

வாடகைக்கு ஒரு சிறு வீடு எடுத்து சென்னையில் குடியேறினோம். பிள்ளைகளுக்கு ஒரு பள்ளிக் கூடத்தில் இடமும் எடுத்து பள்ளி செல்லத் தொடங்கினர். அப்போது ஒரு நாட்காலை எங்கள் நண்பர் சுந்தரலிங்கம் டாக்டர் குமாரி ஜயவர்த்தனாவும் கமலா பாசினும் உங்களைப் பார்க்க விரும்புகிறார்கள், பக்கத்தில் ஒரு இடத்தில் தங்கியிருக்கிறார்கள் என்று ஒரு முகவரியைத் தந்தார். புதிய இடத்தில் தனித்துப் போயிருந்த எனக்கு இந்த செய்தி மிகவும் மகிழ்ச்சியைத் தந்தது. சொன்ன விலாசத்திற்கு விரைந்து சென்றேன்.

டாக்டர் குமாரி ஜயவர்த்தனாவை எனக்கு முன்னரே தெரியும். எனது மறைந்த கணவரும் குமாரியும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சக பேராசிரியர்களாக இருந்தனர். குமாரியிடம் இருந்து தான் நான் பெண்ணிலைவாதம் பற்றி முதலில் கேள்விப்பட்டேன். புத்தகங்கள் படித்தேன். குமாரிதான் கமலா பாசினையும், நிகத்கானையும் அவர்களது பெண்ணிலைவாத வேலைகளைப் பற்றியும் கூறுவார். இந்த மூன்று பெண்களது அறிவும், பெண்கள் விடயத்தில் இருந்த அர்ப்பணிப்பும் எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

**சிந்திக்க ஆரம்பிக்கும் பொழுது முதலில் நினைவுக்கு வருவது 1981 ஆண்டு யாழ்நூல் நிலைய எரிப்புத்தான். அந்த நிகழ்வு பலரையும் மிகவும் பாதித்த ஒன்றாகும். அது மனதில் உறைந்து போன துன்பமான விசயம்.**

குமாரியைத் தவிர மற்றையோரை அப்போதுதான் முதல் முறை பார்த்தேன். அதுவரை பெயரளவில்தான் அவர்களைப் பற்றித் தெரிந்திருந்தேன். கடற்கரைக்கு அருகில் skills என்ற கலை நாட்டிய நிலையம் தான் அந்த விலாசம். அங்கு தான் நடனத்திற்குப் பேர்பெற்ற சந்திரலேகாவின் வீடும் இருந்தது. பெண்ணிலைவாத கோணத்தில் அவரது நடன நாடக நிகழ்ச்சிகளை வடிவமைத்தவர்.

**இரகசியமாக இந்த விசயங்களை வைத்திருப்பதும் பலர் இருக்கும் இடங்களில் அதிகம் பேசுவதைத் தவிர்ப்பதும் ஒரு புதிய கலாசாரம் ஆகியது.**

சந்திரலேகாவையும் அப்போதுதான் முதன் முறை சந்தித்தேன். குமாரி, கமலா பாசின், நிகத் கான், சந்திரலேகா எல்லோரும் அன்பாக வரவேற்றனர். அடுத்த 5 நாட்களும் தாங்கள் தெற்காசியப் பெண்களின் பயிற்சிப்பட்டறை நடத்தப் போவதாகவும் என்னையும் அதில் சேர்ந்து கொள்ளுமாறும் அழைத்தனர். என்னால் நம்பவே முடியவில்லை. உடனேயே ஒத்துக் கொண்டேன். நேபால், இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் மற்றும் இலங்கையில் இருந்து 20 பெண்கள் பட்டறைக்கு வந்திருந்தனர். அடுத்த 5 நாட்களும் நிறையக் கற்றுக் கொண்டேன். எதிர்காலத்தில் இந்தப் பயிற்சி எவ்வளவு உதவப் போகின்றது என்று எனக்கு அப்போ தெரிந்திருக்கவில்லை. என்னில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டிருப்பதை உணர்ந்து கொண்டேன்.

1984 தை மாதம் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து பூட்டிக் கிடந்த எங்கள் வீட்டைத் துப்பரவு செய்து வாழ ஆரம்பித்தோம். பழைய சிநேகிதிகள் மத்தியில் மீண்டும் வாழத் தொடங்கியது சந்தோசமாக இருந்தது. 1983ஆம் ஆண்டு, இனக் கலவரம் பற்றியும் அது எப்படி அனைவரைப் பாதித்தது என்பது பற்றியும் மக்கள் சந்திக்கும் போது பேசினார்கள். அது மன ஆறுதலடைய அவர்களுக்கு உதவியிருக்க வேண்டும்.

அந்த சமயம் நிறைய ஆண் பிள்ளைகள் தெருக்களில் காணப்படாததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. வாரங்கள் செல்லத்தான் தெரிய வந்தது அவர்கள் பெற்றோருக்குத் தெரியாமல் போய் விட்டார்கள் என்று. இதுவும் தாய்மார்களால் இரகசியமாகவே சொல்லப்பட்டது. இரகசியமாக இந்த விசயங்களை வைத்திருப்பதும் பலர் இருக்கும் இடங்களில் அதிகம் பேசுவதைத் தவிர்ப்பதும் ஒரு புதிய கலாசாரம் ஆகியது.

1984 இல் நாங்கள் 5 சிநேகிதிகள் மிகவும் நெருக்கமாக இருந்தோம். அதில் இருவர் 1983 இல் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்தவர்கள். நாங்கள் கிணற்றுத் தவளைகளாகி விடுவோமோ என்ற பயம் இருந்தது. யாழ் வாசிகசாலையும் எரிந்து விட்டது. நாங்கள் நிறைய வாசிக்க வேண்டும், அவை பற்றி நம்மிடையே கலந்துரையாட வேண்டும் என்று பெண்கள் ஆய்வு வட்டம் என்ற குழுவை அமைத்து ஒழுங்காக ஒன்றை விட்டு ஒரு சனிக் கிழமைகளில் எங்கள் வீட்டில் கூடினோம். ஏதாவது ஒரு நூலைப் படித்து விட்டு, பின்னர் அதனைப் பற்றி நிறைய விவாதிப்போம். எங்கள் அங்கத்தவர்கள் 5, 6 பேராக இருந்து 15 பேராக வளர்ந்தோம். அதில் சிலர் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள். புத்தகங்களுக்கு அப்பால் யாரும் ஏதும் பேச விரும்பினால் அவற்றையும் விவாதிப்போம். நாங்களும் கட்டுரைகள் மற்றும் கவிதைகள் எழுதினோம். நாங்கள் எழுதிய கவிதைகளை "சொல்லாத சேதிகள்" என்ற சிறு நூலாக வெளியிட்டோம். பின்னர் ஒரு கட்டுரைத் தொகுப்பும் புத்தகமாக வெளியிட்டோம். எனக்கு ரீனிபாமர் என்ற கவிஞரின் 2 வரிகள் மிகவும் பிடித்தன. "என்னுடைய சகோதரிகளின் உரிமைகளுக்கு நான் போராடா விட்டால் அவள் என்றும் அடிமையாக இருப்பாள்" எனக்கு மிகவும் பிடித்த கவிதை என்ற வகையில் ஆங்கிலத்தில் இருக்கும் கவிதையை இங்கு நான் அதனை முழுமையாக மொழிபெயர்த்துத் தருகிறேன்.

<u>நான் ஒரு பெண்</u>

நான் எனது வல்லமையில் ஆணுக்கு நிகர்
என்று நம்புகிறேன்
எனது தாயார் ஒரு பணிவான
பாத்திரமாக வாழ்ந்தாள்
நானும் அப்படியே இருக்க
வேண்டியதில்லை என்று

நம்புகிறேன்
நான் எனது சகோதரிகளின் உரிமைகளுக்கு
போராடா விட்டால்
அவர்கள் என்றும் அடிமைகளாக
இருப்பார்கள்
என்று நம்புகிறேன்
எனது மகளிற்கு எல்லையற்ற
தொடுவானத்தைப் போல
அளவற்ற வாய்ப்புக்கள் காத்திருக்கின்றன
சில பழைய பாத்திரங்கள் மாத்திரமல்ல
என்று நம்புகிறேன்
இந்த உலகிற்குக் கொடுப்பதற்கு என்னிடம்
நிறைய உள்ளன
அதற்கான வல்லமையும்
ஆற்றலும் என்னிடம்
இருக்கிறதென்று நான் நம்புகிறேன்
ஒவ்வொரு பெண்ணும் ஒரு தனிநபர்
அவர்களை ஒரே பாணியில் மாதிரிபடுத்தப்
கூடாதென்று நான் நம்புகிறேன்

ஆவணி மாதம் 1984 இல், ஒருநாள் வல்வெட்டித்துறையைச் சுற்றி வளைத்து இராணுவம் 360 ஆண் பிள்ளைகளைக் கொண்டு சென்று விட்டது என்ற அவலமான செய்தி வந்தது. எதிர்காலத்தில் வல்வெட்டித்துறைக்கு நடந்தது போல மற்றக் கிராமங்களுக்கும் நடக்கலாம் என்ற பயம் எல்லார் மனதிலும் குடிகொண்டது. எங்கள் பெண்களில் சிலர் வல்வெட்டித்துறைக்கு சென்று நடந்தவற்றை அறிந்து வந்தனர்.

எங்கள் பெண்கள் வட்டம் சிநேகிதிகள் இந்த விசயத்தைப் பற்றி நிறையப் பேசினோம். என்ன செய்யலாம் என்று நிறைய சிந்தித்தோம். இதற்குப் பொது மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்காமல் விட்டால் மீண்டும் மீண்டும் சுற்றி வளைப்புகளும் கைது செய்தலும் நடைபெறும் என்பது மட்டும் நமக்குத் தெளிவாகத் தெரிந்தது. எங்களில் நான்கு பேர் நெருங்கிய சிநேகிதிகள், அரசியல் விசயங்களில் முற்போக்குக் கருத்துக் கொண்டவர்கள். இந்த நேரத்தில் பொது மக்களாகிய நாம் கட்டாயம் எமது எதிர்ப்பைக் காட்ட வேண்டும். ஓர் தாய்மாரின் ஊர்வலம் வைத்து அரச அதிபருக்கு ஒரு மகஜரில் அதனைச் சொல்ல வேண்டும் என்று தீர்மானித்தோம். அதற்கு ஒரு பரந்த முன்னணி வேண்டும் என்று தெரிந்தது.

ஒரு பெரிய ஊர்வலமாக இருந்தால் தான் அதில் பயனிருக்கும் என்று எங்களுக்குத் தெரிந்தது. அத்தோடு அதனை சீக்கிரமாகவும் ஒழுங்கு செய்யவும் வேண்டும். எங்கள் ஒவ்வொருவருக்கும் தெரிந்த 5 பேருடன் வாருங்கள் ஒரு கூட்டம் போட வேண்டும் என அழைத்தோம். வல்வெட்டித்துறையில் நடந்தது எல்லாரையும் பாதித்திருந்தபடியால் பல பெண்கள் வந்திருந்தனர். இந்த மாதிரி இனியும் நடக்காமல் இருக்க என்ன செய்யலாம் என்று நன்கு கலந்தாலோசித்தோம். ஒரு குழு அமைத்தோம். நமக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று யோசித்தோம்.

**நாங்கள் கிணற்றுத் தவளைகளாகி விடுவோமோ என்ற பயம் இருந்தது. யாழ் வாசிகசாலையும் எரிந்து விட்டது. நாங்கள் நிறைய வாசிக்க வேண்டும், அவை பற்றி நம்மிடையே கலந்துரையாட வேண்டும் என்று பெண்கள் ஆய்வு வட்டம் என்ற குழுவை அமைத்து ஒழுங்காக ஒன்றை விட்டு ஒரு சனிக் கிழமைகளில் எங்கள் வீட்டில் கூடினோம்.**

ஊர்வலம் நடத்துவதற்கு மகஜரை அரச அதிபரிடம் கொடுப்பதற்கு பலருடைய ஆதரவும் இருந்தது. இதனால் வெற்றி கிடைக்குமா எனப் பலர் சந்தேகத்துடன் கேட்டனர். சுற்றி வளைத்துப் பிள்ளைகளைப் பிடிப்பதை நிறுத்த வேண்டும் என்ற உறுதி எல்லாருக்கும் இருந்தது. வல்வெட்டித்துறையில் இருக்கும் தாய்மாரை அழைத்துவர சில பெண்கள் பொறுப்பெடுத்தனர். நோட்டீஸ் அடிக்கத் தீர்மானித்தோம். அதற்கு முன்னர் திகதியைத் தீர்மானித்தோம். எங்களுக்கு ஒரு பெயர் தேவைப்பட்டது. எத்தனையோ பெயர்களைப் பட்டியல் எழுதி கடைசியில் அன்னையர் முன்னணி எனப் பெயர் வைத்தோம். அந்தப் பெயருடன் நோட்டீஸ் அடிக்க ஏற்பாடுகள் செய்தோம். கெடுபிடிகள் இருந்ததால் ஓரளவு கவனமாகவும் நிதானமாகவும் வேலை செய்தோம்.

நோட்டீஸ் அடிக்கக் கூட எங்களிடம் பணம் இருக்கவில்லை. ஒரு சிநேகிதி 500 ரூபாவை காணிக்கையாக மேசையில் வைத்தார். அந்தப் பணத்தில் தான் நோட்டீஸ் அடித்தோம்.

வீடு வீடாகச் சென்று தாய்மாரை ஊர்வலத்திற்கு வரும்படி அழைத்தோம். பிள்ளைகள் உள்ள தாய்மார் கட்டாயம் வருவார்கள் என்று நம்பினோம். அப்பொழுதுதான் பெண்களை வீட்டை விட்டு வெளியே கொண்டு வருவது எவ்வளவு கஸ்டமான விசயமென்று தெரிந்தது. ஒரு கலியாண வீடு, செத்த வீடு என்றால் தான் வெளியே போவார்கள். கோயிலுக்குப் போவார்கள் ஊர்வலத்துக்கு அழைத்த போது சுகமில்லை, கணவன் வர விடமாட்டார் என்று பல காரணங்களைச் சொன்னார்கள். பெண்கள் எவ்வாறு வீட்டுக்குள்ளேயே முடக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது மிகவும் வேதனையை அளித்தது.

**பெண்கள் எவ்வாறு வீட்டுக்குள்ளேயே முடக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது மிகவும் வேதனையை அளித்தது....**

**....கடைசி நிமிடம் வரையும் பல பெண்கள் கலந்து கொள்வார்களா என்ற கவலை இருந்தது. மெள்ள மெள்ள தொலைவில் இருந்து வந்த பஸ்வண்டிகளில் பெண்கள் வந்து இறங்கினார்கள்.**

"உங்கள் பிள்ளைகளைப் பிடித்துச் சென்றால் ஒருவரும் உதவ வரமாட்டார்கள். பெண்கள் ஒன்று சேர்ந்தால்தான் இந்த நிலைமையைத் தவிர்க்க முடியும்" என்று நாங்கள் அவர்களுக்கு விளங்க வைத்தோம். முட்டுக்கட்டைகளுக்கு அப்பால் பல பெண்கள் உற்சாகமாக எங்களுடன் சேர்ந்து கொண்டார்கள். உதவவும் செய்தார்கள். ஓரளவு இரகசியமாகவே இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்ததால் வீடு வீடாகச் சென்று அழைத்துக் கூட்டம் போட வேண்டி இருந்தது.

இன்னுமொரு விடயமும் கவனிக்கக் கூடியதாக இருந்தது. அது என்னவென்றால் பிற்போக்குச் சிந்தனையும், ஆணாதிக்கமும் அதிகம் இருந்த குடும்பத்து ஆண்கள் எங்கள் முயற்சி சரிவராது என்றும், எல்லாப் பொம்பிளைகளும் சுடுபட்டுச் சாகப் போகிறீர்கள் என்றும் பலவிதமாக எங்களைப் பின்வாங்க வைக்க முயற்சி செய்தார்கள். நாங்கள் இவர்களுடைய வெருட்டல்களுக்குப் பயப்படவில்லை. நாங்கள் போகும் பாதை சரியானதுதான் என்று தெளிவாக இருந்தோம். அதேசமயம் வேறு பல ஆண்கள் எங்கள் முயற்சிக்கு ஆதரவாக இருந்ததுடன், தமது மனைவி பிள்ளைகளை ஊர்வலத்துக்கு அனுப்ப ஏற்பாடு செய்ததோடு, நாங்கள் எந்தவிதத்தில் உங்களுக்கு உதவலாம் என்றும் கேட்டார்கள். ஊர்வலத்தை யாழ் பஸ்தரிப்பு நிலையத்துக்கு அருகில் ஆரம்பித்து, யாழ் அரசாங்க அதிபர் காரியாலயத்தில் முடிவடையத் திட்டம் போட்டிருந்தோம். நாங்கள் கையில் எடுத்துச் செல்லும் பதாதைகளின் வாசகங்கள் சுற்றி வளைப்பு, பிள்ளைகளைப் பிடித்துச் செல்லுதல், சம்பந்தமாகவே இருக்க வேண்டுமென்பதில் கண்காணிப்பாக இருந்தோம். பல இயக்கங்களும் இருந்ததால் அவர்களும் தங்களுடைய ஆதரவாளர்களுடன் ஊர்வலத்தில் சேர்ந்து கொள்ளலாம் என்பதில் அவதானிப்புடன் செயற்பட்டோம். அன்னையர் முன்னணி என்ற பதாதையையும் தயார் செய்தோம். யாரிடமும் நாம் எந்தப் பண உதவியையும் கேட்கவில்லை. நாங்களே எமக்குள்ளேயே எல்லா செலவுகளையும் பார்த்துக் கொண்டோம்.

ஊர்வலம் வைக்க வேண்டிய நாளும் வந்தது. சரியான பரபரப்பும் எல்லாம் ஒரு அசம்பாவிதமும் இன்றி நடக்க வேண்டும் என்ற படபடப்பு. விடியவே சமையல் எல்லாம் செய்து முடித்து விட்டு திருநெல்வேலிப் பெண்கள் எல்லாம் யாழ் பஸ்தரிப்பு நிலையம் சென்றோம். கடைசி நிமிடம் வரையும் பல பெண்கள் கலந்து கொள்வார்களா என்ற கவலை இருந்தது. மெள்ள மெள்ள தொலைவில் இருந்து வந்த பஸ்வண்டிகளில் பெண்கள் வந்து இறங்கினார்கள்.

பிள்ளைகளைப் பறி கொடுத்த தாய்மாரின் சோகம் அப்படியே தெரிந்தது. எங்களைக் கண்டவுடன் அழ ஆரம்பித்து விட்டார்கள். அவர்களை நம்மில் சிலர் அழைத்துக் கொண்டு ஊர்வலம் ஆரம்பிக்கும் இடத்திற்கு

நடந்தார்கள். அடுத்த ஒரு மணிநேரம் வந்த பஸ்களில் தாய்மார்கள் வந்தபடியே இருந்தார்கள். எங்களால் நம்ப முடியவில்லை. அவ்வளவு பெண்கள் வந்து இறங்கினார்கள்.

சொன்ன நேரத்திற்கு நாங்கள் ஊர்வலத்தை ஆரம்பித்தோம். அன்னையர் முன்னணி பதாகையை ஏந்தியவர்கள் முன்னால் செல்ல வல்வெட்டித்துறை அம்மாமார் முன்னால் வர மற்றையவர்கள் பின்னால் வந்தார்கள். ஆயிரக்கணக்கானோர் ஊர்வலத்தில் நடந்தனர். வழியிலே பார்க்க வந்த பெண்களும் சேர்ந்து கொண்டனர். ஊர்வலம் கச்சேரியை ஒரு அசம்பாவிதமும் இல்லாமல் அடைந்தது. அங்கு கச்சேரி நுழைவாசல் மூடப்பட்டு இருந்தது. பெருந்திரளான பெண்கள் வருவதைக் கண்டுதான் பாதுகாப்பாகப் பூட்டி வைத்தார்களோ? திறவுங்கள் அரசாங்க அதிபருடன் நாங்கள் பேச வேண்டும் என்று காவலாளியிடம் கூறினோம். "5 பேர் மட்டும் வாருங்கள். மற்றவர்கள் இங்கு நில்லுங்கள்." என்றார் ஒரு காவலாளி. அவர் கேட்டைத் திறந்தது தான் தருணம் என்று எல்லோரும் உள்ளே தள்ளிக் கொண்டு போய் விட்டோம். அம்மாக்களின் அழுகை ஓலம் பயங்கரமாக இருந்தது.

அரசாங்க அதிபரின் அறைக்குள் சென்றோம். ஆயிரக்கணக்கான தாய்மார்கள் காரியாலயத்தின் உள்ளேயும் வெளியேயும் நின்றார்கள். தாய்மாரின் ஓலச் சத்தத்தில் அதிபருடன் பேச முடியவில்லை. அம்மாக்களின் அழுகைச் சத்தம் கொஞ்சம் குறைய நாங்கள் சொல்ல வந்ததைச் சத்தமிட்டு சொல்லி "360 பிள்ளைகளையும் உடனே வீட்டுக்கு அனுப்ப வேண்டும். மீண்டும் கிராமங்களை சுற்றி வளைப்பதை நிறுத்த வேண்டும்" என்றோம். எங்களுக்கு அரசிடம் இருந்து ஒரு பதில் உடனேயே வேண்டும் என்று கேட்டோம். அவர் உடனே தொலைபேசியில் மந்திரியைக் கூப்பிட்டார். நிலவரத்தை அவருக்கு விளக்கினார். "தாய்மார் உடனே பிள்ளைகளை விடுதலை செய்து வீட்டுக்கு அனுப்பாவிட்டால் அங்கேயே இருக்கப் போகிறார்களாம்" என்றார். "பள்ளி செல்லும் பிள்ளைகளைப் பிடித்து கப்பலில் பூசா சிறைக்கு அனுப்புவது போன்றவற்றை அரசு செய்யக் கூடாது" என்று நாம் சொன்னோம். அதனையும் அவர் மந்திரிக்குச் சொன்னார்.

மந்திரியுடன் கொஞ்ச நேரம் பேசி விட்டு எங்களிடம் "அன்னையர் முன்னணி குழுவினருடன் பேசி இதனைத் தீர்க்க மந்திரி தயாராக இருக்கிறார். உங்களை அழைத்து வருவதற்கு ஒரு ஹெலிகொப்டர் அனுப்புவதாகவும் கூறுகிறார்" என்றார். நாங்கள் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. "பேசித் தீர்ப்பதற்கு இதில் ஒன்றும் இல்லை. பிடித்த பிள்ளைகளைத் திருப்பி அனுப்புங்கள். மீண்டும் இந்த மாதிரி சுற்றி வளைப்புகள் நடைபெறக் கூடாது" என்று மீண்டும் வலியுறுத்தினோம். அம்மாக்களின் ஓலத்தின் மத்தியில் அதிபரும் மந்திரியும் எங்களிடம் கேள்விகள் கேட்டனர். நாங்கள் விடாப்பிடியாக நின்றோம்.

**"5 பேர் மட்டும் வாருங்கள். மற்றவர்கள் இங்கு நில்லுங்கள்." என்றார் ஒரு காவலாளி. அவர் கேட்டைத் திறந்தது தான் தருணம் என்று எல்லோரும் உள்ளே தள்ளிக் கொண்டு போய் விட்டோம். அம்மாக்களின் அழுகை ஓலம் பயங்கரமாக இருந்தது.**

கடைசியில் மந்திரி இரு தினங்களில் பிள்ளைகளைப் பதிவு செய்து விட்டு கட்டாயமாகத் திருப்பி அனுப்புவதாக வாக்குறுதி கொடுத்தார். இனி மேலும் சுற்றிவளைப்புகள் நடைபெறமாட்டாது என்று உறுதியும் கூறினார். அரசாங்க அதிபருக்கு நன்றி கூறிவிட்டு எல்லோரும் வெளியே சென்றோம். வல்வெட்டித்துறைத் தாய்மாருக்குப் பிள்ளைகள் வீடு திரும்பியவுடன் எமக்கு அறிவிக்கும்படி கூறினோம். முதல் கட்டம் வெற்றி பெற்றது பற்றி எங்களுக்கு மிகவும் சந்தோசம். அவர்கள் சொன்ன வார்த்தையைக் காப்பற்ற வேண்டும் என்ற நம்பிக்கை கலந்த ஏக்கம் இருந்தது. தூரத்தில் இருந்து வந்த பெண்களிடம் எல்லாம் பேசி அவர்களை அனுப்பி விட்டு நாம் ஒருவர் வீட்டில் கூடி அன்று நடந்தவற்றை ஆராய்ந்தோம்.

நாங்கள் வெற்றிகரமான ஒரு முயற்சியை நடைமுறைப்படுத்திவிட்டோம் என்ற சந்தோசம் எல்லாரிடமும் இருந்தது. இரண்டு நாட்களில் சொன்னபடியே பிள்ளைகள் எல்லாம் வீடு திரும்பினர். இருபது பேரின் விசாரணை முடிந்தவுடன் அவர்களையும் அனுப்பி விடுவதாக எங்களுக்கு அதிபர் உறுதி கூறினார்.

**நாங்கள் 3 வருடகாலமாக அன்னையர் முன்னணியை எவ்வித வெளிநிதி உதவியுமில்லாமலேயே கொண்டு சென்றோம்...**

**...அதில் இளம்தலைமுறையினர் சமூக விடயங்களில் பங்குபற்ற முதல் காலடி வைத்தனர். சமூகத்தில் நல்ல மாற்றங்கள் கொண்டுவர தங்களுக்கும் முக்கிய பங்கு இருப்பதை உணர்ந்து ஒரு பெரிய வளர்ச்சியை அடைந்தனர்.**

அடுத்த ஒரு வாரமாக பத்திரிகைகளில் எப்படி ஒரு தாய்மார்களின் கூட்டம் ஒன்று திரண்டு தங்கள் பிள்ளைகளை விடுவித்தனர் என்று செய்திகளும் கட்டுரைகளும் வந்தன. அடுத்த சில மாதங்களில் பல கிராமங்களில் வசித்த பெண்களின் வேண்டுகோளுக்கிணங்கி அன்னையர் முன்னணி கிளை ஒன்றை ஆரம்பித்து வைக்கச் சென்று வந்தோம். அப்போது கடற்கரையோரத்தை அரசின் அதி உயர் பாதுகாப்பு மையமாக மாற்றப்பட்டதால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல தடை போடப்பட்டது. தொடர்ந்து கடலுக்குச் செல்லாமல் மீனவர் குடும்பங்கள் பெரும் கஸ்டங்களுக்கு உள்ளாகினார்கள். மீனவர் குடும்பங்களில் தற்கொலைகள் இடம்பெற்றன. அன்னையர் முன்னணிஅங்கத்தவர்கள் வீடு வீடாகச் சென்று அரிசி போன்ற உணவுப் பொருட்களைச் சேர்த்து பாதிக்கப்பட்ட கரையோரக் கிராமங்களுக்கு அனுப்பிக் கொண்டிருந்தோம்.

இதே சமயம் கால் ஊனமுற்றோரை ஜெயப்பூர் செயற்கைக் கால் போடுவதற்கு அவர்களை அனுப்பி வைக்கும் பணிகளிலும் ஈடுபட்டோம். பின்னர் NORAD நோவே நாட்டு உதவியுடன் யாழ்ப்பாணத்திலேயே ஜெயப்பூர் கால் பொருத்தும் நிலையத்தையும் நிறுவி நடத்தினோம். இதற்கு மட்டுமே நிதியுதவி பெற்றோம். நாங்கள் 3 வருடகாலமாக அன்னையர் முன்னணியை எவ்வித வெளிநிதி உதவியுமில்லாமலேயே கொண்டு சென்றோம். எமது மூன்றாம் ஆண்டே ஜெயப்பூர் வேலையிலும் ஈடுபட்டோம். சிறிது காலத்தில் எமக்கு சில வெளி அழுத்தங்கள் வரத் தொடங்கின. நாங்கள் சுதந்திரமாக பெண்களின் பிரச்சினைகளுக்கு மட்டும் முகம் கொடுத்து பெண்கள் மேம்பாட்டுக்கு வேலை செய்வது சிலருக்குப் பிடிக்கவில்லை. அன்னையர் முன்னணிக்கு இருந்த பெயரையும் பலத்தையும் வெளிச்சக்திகள் தங்களின் நலனுக்காகப் பாவிக்க முனைந்தார்கள். தங்களுக்குக் கீழே நாங்கள் இயங்க வேண்டும் என்று வந்தபோது, நாங்கள் இனி இயங்கப் போவதில்லை என்று தீர்மானம் எடுத்தோம். பெண்களுக்காக செயற்படத் தொடங்கிய எமக்குச் சுதந்திரம் மிக அவசியமாகப்பட்டது. அந்தச் சுதந்திரம் இல்லாமல் நாம் இயங்க முடியாது என்பதில் எங்களுக்கு சந்தேகம் இருக்கவில்லை. அவர்களிடம் அதனைச் சொல்லி விட்டு அன்னையர் முன்னணியை மூடிவிட ஏற்பாடு செய்தோம். அனைத்து அங்கத்தவர்களுக்கும் அறிவித்தோம். அவர்களும் அதனை ஏற்றுக் கொண்டனர். ஜெயப்பூர் செயற்கைக் கால் பட்டறை மட்டும் எங்களின் ஓர் அங்கமாக இயங்கியது. யாழ்ப்பாணப் பத்திரிகையில் நாங்கள் இனிமேல் இயங்கமாட்டோம் என்பதை அறிக்கையாக வெளியிட்டோம்.

சிறிது காலத்துக்குப் பின்னர் இந்திய அமைதிகாக்கும் படையினர் வந்தனர். அதன் பின்னர் நடந்த போரின் காரணமாக இந்தியப் படையினர் சிலவேளைகளில் சந்தேகத்தின் நிமித்தம் ஆண்களைப் பிடித்துச் செல்வார்கள். பெற்றோருக்கு, இந்திய இராணுவ முகாமுக்குச் செல்லத் தயக்கமும், ஆங்கிலம் பேசத் தெரியாது என்ற பிரச்சினையும் இருந்தது. அப்போது அவர்கள் முன்னைய அன்னையர் முன்னணிப் பெண்கள் சிலரை

உதவிக்கு அழைத்துச் செல்வார்கள். இப்படி உதவி செய்த பெண்கள் பலர். அவர்களில் இருவரை புலிகள் சுட்டனர். அவர்கள் செய்த குற்றம் இந்திய இராணுவ முகாமுக்குள் சென்றதே. இந்த செய்திகள் எங்களை மிகுந்த துன்பத்திற்குள்ளாக்கியது. இந்திய அமைதி காக்கும் படைக்கும் புலிகளுக்கும் இடையில் அகப்பட்ட பொது மக்களின் வாழ்க்கை மிகவும் அவலமானதாக மாறியது. அதனையும் தாண்டி வருவோம் என்ற நம்பிக்கை நம்மிடையே இருந்தது.


நான் கற்றுக் கொண்டதில் எனக்கு முக்கியமானதாகப் படுவது, எவ்வளவோ இழப்புகளுக்கும் மத்தியில் பெண்கள் நாம் சாதித்தவை பற்றிப் பெருமைப்பட வேண்டும் என்பதாகும். அத்துடன், பெண்கள் சரித்திரம் பெண்களே எழுத வேண்டும் என்பதுமாகும்.

மூன்று தலைமுறைப் பெண்களும் நான் இங்கு குறிப்பிட்ட செயல்வாதங்களில் மிகவும் உற்சாகமாகப் பங்கு பற்றினார்கள். அதில் இளம்தலைமுறையினர் சமூக விடயங்களில் பங்குபற்ற முதல் காலடி வைத்தனர். சமூகத்தில் நல்ல மாற்றங்கள் கொண்டுவர தங்களுக்கும் முக்கிய பங்கு இருப்பதை உணர்ந்து ஒரு பெரிய வளர்ச்சியை அடைந்தனர். அவர்களில் சிலர் "பூரணி" உருவாகி அதனை வழிநடத்த காரணிகளாக அமைந்தனர். வெளிநாடுகளுக்குச் சென்ற சில பெண்கள், தொடர்ந்தும் புதிய புதிய தளங்களைப் பெண்களுக்கு அமைத்துக் கொண்டு முன்னோடியாக இருக்கின்றனர்.

நடுத்தர வயதுடைய தாய்மாரில் பாதிப்பேராவது தொடர்ந்தும் சமூக சேவையிலும், ஜெயப்பூர் செயற்கைக் கால் நிறுவனத்திற்கும் பங்களிப்பு செய்தனர். மற்றவர்கள் தங்கள் முன்னைய வாழ்க்கைக்கு - நான், வீடு, என் குடும்பம் - என்ற குறுகிய வட்டத்திற்கு மீண்டும் சென்றனர்.

இளைய தலைமுறையில் நாங்கள் கொண்டு வந்த மாற்றம் திருப்தியைத் தந்தது. எங்களில் பலர் தொடர்ந்தும் பல செயல்வாதப் பயணங்களில் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். பெண் உரிமைப் போராட்டங்களும் நம்பிக்கைகளும் பெண்கள் மத்தியில் வலுப்பெறுகின்றன. ■

**சர்வமங்களம் கைலாசபதி**




பெண்கள் நாட்டின் கண்கள் என்றும்
பெருமை சேர்க்கும் பெண்களே
நாளைய உலகில் வாழ நாமும்
நாட்டிற்காக உழைத்திடுவோம்

அகிலம் போற்றப் பிறந்தோமே
உரிமை காக்க மலர்ந்தோமே
உலகில் ஆழம் அறிந்து கொண்டு
பாரில் என்றும் நிலை பெறுவோம்

பசுமை நிறைந்த கனவுகளை
படித்தே நாங்கள் பண்பு பெற்று
நனவின் உயர்வை உரிமைக்காய்
பெற்ற அன்பை விதைத்திடுவோம்.

உரிமையை தேடி ஓடி விடு
உயர்விற்காய் என்றும் உழைத்து விடு
உலகம் போற்ற வாழ்ந்து விடு

**இ. பிரசாந்தினி**

# இலங்கையின் சமூக சீர்திருத்த, பெண்கள் விடுதலை முன்னோடி மங்களம்பாள் மாசிலாமணி பற்றிய ஒரு பார்வை :

இலங்கையில் எழுபதுகளிலிருந்து ஏற்பட்ட பெண்நிலைவாத எழுச்சியும், பெண்கள் இயக்கங்களின் ஆர்வமும் இலங்கைப் பெண் வரலாற்றை உருவாக்குவதற்குத் தூண்டுகோலாக அமைந்தன. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து இவர்கள் சமூக சீர்திருத்தம், தொழிலாளர் நலன், அரசியல், ஜனநாயக உரிமைகள் போன்ற பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க பணியாற்றியுள்ளனர். அந்த வகையில் சமூக சீர்திருத்தம், பெண்விடுதலை பற்றிய செயற்பாடுகளின் முன்னோடிகளுள் முக்கிய பெண்மணியாக விளங்குபவர் மங்களம்மாள் மாசிலாமணி என்பவராவர். மங்களம்மாள் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் வண்ணார்ப்பண்ணையைச் சேர்ந்த வழக்கறிஞர் கதிரவேற்பிள்ளைக்கு 1884 ஆம் ஆண்டு மகளாகப் பிறந்தார். கல்வியறிவும், செல்வாக்கும் கொண்ட குடும்பப் பின்னணி கொண்டவர். இவர் பாடசாலை சென்று முறையாகக் கல்வி கற்றதற்குரிய சான்றுகள் கிடைக்கவில்லை. ஆனால் போதியளவு ஆங்கிலமும் தமிழும் கற்றுத் தமது கல்வி அறிவினை மேம்படுத்திக் கொண்டார். இவரது உறவினர்கள் சிலர் இந்தியாவில் கல்வி கற்றுத் தொழில் புரிந்ததன் காரணமாக இந்திய சுதந்திரப் போராட்டங்கள் பற்றிய நூல்களும் பத்திரிகைகளும் இவருக்கு நிறையவே கிடைத்தன.

இவரது கணவர் மாசிலாமணி கேரளத்தில் கல்வி கற்ற ஒரு முற்போக்குவாதி. தேசாபிமாணி என்ற பத்திரிகையை யாழ்ப்பாணத்திலும் பீபிள்ஸ் மகசீன் (people magazine) என்ற பத்திரிகையை கொழும்பிலும் வெளியிட்டார். இத்தகைய குடும்பச் சூழலில் வாழ்ந்த இவருக்கு இலங்கையின் ஏனைய பகுதிகளிலும், உலக நாடுகளிலும் நடைபெறும் விடயங்களை அறியும் வாய்ப்புக் கிடைத்தது. 19ஆம் நூற்றாண்டில், பொதுவாக இலங்கையில் பெண்களைப் பற்றிய பழமைவாதக் கருத்துகளே காணப்பட்டன. பெண்களுக்கு கல்வி என்பது அவசியமில்லை என்றும் குடும்ப வாழ்க்கையைத் திறப்பட நடத்துவதற்குரிய கல்வி பெற்றாலே போதுமானது என்ற ஆணாதிக்கச் சிந்தனை கொண்ட பின்னணியிலே மங்களம்மாள் பெண்களின் நவீன முன்னேற்றத்திற்காக குரல் கொடுத்து வந்தார். சமூகப் பணிகளின் மூலம் மக்களை முன்னேற்ற முடியும் என்ற கருத்துக் கொண்டிருந்த இவர் 1962ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணம் வண்ணார்ப்பண்ணையில் பெண்கள் சேவா சங்கம் எனும் நிலையத்தைத் தொடங்கினார். இச்சங்கமே தேசிய உணர்வு பெற்ற இலங்கைப் பெண்களின் முதலாவது சங்கம் எனலாம். இவர் இந்தியா போய் வாழ்ந்த காலத்தில் இச்சங்கம் நின்று விட்டதாக அம்மையார் கூறியுள்ளார்.

மங்களம்பாள் இலங்கையின் முதற் பெண் பத்திரிகையாளர் ஆவார். 1923 ஆம் ஆண்டு தமிழ் மகள் என்ற பத்திரிகையை ஆரம்பித்தார். யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட இப்பத்திரிகை மங்களம்பாள் இந்தியாவில் சில வருடங்கள் வாழ்ந்த போது அங்கிருந்தும் வெளிவந்தது. இப்பத்திரிகையே அகில இலங்கையில் பெண்களுக்காகத் தோன்றிய முதலாவது பத்திரிகையாகும். நாமார்க்கும் குடியல்லோம் என்ற இலட்சிய வாசகமும் கொண்ட இப்பத்திரிகையானது பெண்விடுதலை, பெண்சமத்துவம், பெண்மை நலம் பேணுதல், தீண்டாமை, சீதனக் கொடுமை போன்ற பல புதிய நோக்குக்கான கட்டுரைகளைத் தாங்கி வந்தது. நிதி நெருக்கடி காரணமாக இப்பத்திரிகை 1971 ஆம் ஆண்டு முற்றாக வெளிவருவது நின்று விட்டது. இவர் அக்காலத்தில் வெளிவந்த தேசபக்தன், இந்து சாதனம், ஈழகேசரி, Hindu Organ போன்ற பத்திரிகைகளிலும் தனது கருத்துகளை எழுதினார்.

மங்களம்பாள் திருமணத்தின் பின்பு சில காலம் தன் கணவரோடு இந்தியாவில் வாழ்ந்த காலத்தில் இந்தியக் காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்த காங்கிரஸ்சின் முக்கிய தொண்டர்களுள் ஒருவராவார். 1924ஆம் ஆண்டு கோவில் பட்டி எனும் ஊரில் நடந்த காங்கிரஸ் பெண்கள் மாநாட்டுக்குத் தலைமை தாங்கிப் பேருரை நடத்தினார். 1926ஆம் ஆண்டு இவர் பெண்கள் மாநாட்டைக் கூட்டி தமிழ் பெண்களின் தற்கால நிலமை எனும் பொருள் பற்றிப் பேசினார். 1926இல் இந்திய அரசு பெண்கள் அரசாங்கத்தில் வகிக்கக் கூடாது எனும் தடையை நீக்கியது. இதனை முதன்முதற் பயன்படுத்தியது சென்னை, பம்பாய் ஆகிய இருமாகாணங்களே. எனவே 1927இல் மாநகரசபைத் தேர்தலுக்குச் சில பெண்களையும் நிறுத்த வேண்டுமெனக் காங்கிரஸ்கட்சி தீர்மானித்தது. மங்களம்பாள் எழும்பூர் தொகுதியில் காங்கிரஸ்கட்சி சார்பில் தேர்தலுக்கு நின்று ஐஸ்டிஸ்கட்சி நாயுடுவை வெற்றி பெற்றார். இலங்கைப் பெண்ணொருத்திக்கு இத்தகைய சிறப்பிடம் கிடைத்தது பெருமைக்குரியதே.

மங்களம்பாள் இந்தியாவில் வாழ்ந்தாலும் இலங்கை அரசியிலும் அக்கறை கொண்டவராகக் காணப்பட்டார். இதனை அவர் இலங்கையில் பத்திரிகைகளுக்கு எழுதிய கடிதங்களிலிருந்து அறிய முடிகிறது. டொனமூர் அரசு சமூக நிலைகளை ஆராய்வதாக இருந்தது. அந்நேரம் இங்குள்ளோர் தத்தம் அபிப்பிராயங்களை மனுக்களாக எழுதி அனுப்பி வைத்தனர் அவற்றை ஆராய்ந்த பின்னரே குழு நேரடிச் சாட்சியம் பெற இங்கே வருவதாக இருந்தது. அந்நேரத்தில் மௌனமாயிருக்கும் இலங்கைப் பெண்கள் மீது அவருக்குக் கோபம் ஏற்பட்டது.

பெண்களுக்கு அரசியல் உரிமை தேவை என்பதில் மங்களம்பாள் உறுதியுடன் இருந்தார் இந்து சாதனபத்திரிகையின் ஆங்கிலப் பதிப்பில் பெண்களது வாக்குரிமையின் அவசியம் குறித்து மங்களம்பாள் ஒரு கடிதம் எழுதியிருந்தார். "உலகம் முழுவதும் பெண்கள் தமது நிலையை உணர்ந்து தமது உரிமைகளுக்காகப் போராடத் தொடங்கிவிட்டனர். இந்தியாவில் பெண்கள் வாக்களிப்பதற்கு மாத்திரமின்றி முனிசிபல் கவுன்சில், சட்டசபை போன்றவற்றுக்கான தேர்தல்களுக்கு வேட்பாளர் ஆவதற்கும் உரிமையுடையவர்கள். இத்தகைய உரிமைகள் அவர்களுக்கு இலகுவில் கிடைத்து விடவில்லை. அவர்கள் தாமே தமது உரிமைகளுக்காகப் போராடியுள்ளார்கள். ஆனால் எமது இலங்கைப் பெண்கள் இத்திசையில் தமது சுட்டுவிரலைத்தானும் அசைக்கவில்லை. எனவே சகோதரிகளே, நாம் எமது உரிமைகளுக்காகப் போராடுவோம். அவை கிடைக்கும் வரை சளைக்க மாட்டோம்" எனக் கூறியிருந்தார்.

1927இல் இலங்கைக்கு வந்த டொனமூர்க் கொமிஷன் அரசியல் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்காக இலங்கையரின் ஆலோசனைகளையுங் கேட்டது. சொத்து, கல்வி ஆகியவை உடைய ஆண்களே தேர்தலில் வாக்களிக்கத் தகுதியானவர்கள் என சுதேசிகள் கூறினர். தேர்தலில் வாக்களிக்கும் உரிமையை பொதுமக்களுக்கு விரிவுபடுத்த இவர்கள் விரும்பவில்லை. பெண்களுக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துப் பெண்கள் வாக்குரிமைச் சங்கம் லேடி டயஸ் பண்டாரநாயக்காவினால் ஆரம்பிக்கப்பட்டது.

பொன்னம்பலம் இராமநாதன் போன்றோர் பெண்களின் சமூகப்பணியை மறுத்து வீடே உலகம் எனக்கூறிய கருத்தை மறுத்து விவாகம் செய்யாமல் சமூகப்பணி செய்வது பற்றியும் மங்களம்பாள் குறிப்பிட்டார். மங்களம்பாள் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் பெண்ணுரிமைக்காக வாதாடிப் பேசியிருக்கின்றார்.

இவர் யாழ்ப்பாணத்தில் மட்டுமின்றி இலங்கையின் பல பாகங்களிலும் தமது பணியை ஆற்றியுள்ளார். குறிப்பாக திருகோணமலை மாதர் ஐக்கிய சங்கத்தின் 11ஆம் ஆண்டு நிறைவுவிழவுக்குத் தலைமை தாங்கி உலக மேம்பாடு குறித்தும் பெண்கள் ஆற்ற வேண்டிய கடமைகள் குறித்தும் உரையாற்றினார். இத்தகைய பன்முக ஆற்றல் கொண்ட பெண்மணியாகவும் பெண்களின் சமத்துவம், பெண்களின் அரசியல் ஈடுபாடு, இன்றைய பெண்ணுரிமைக் கருத்துக்கள் அனைத்தையும் சமுதாயத்தில் எடுத்துக் கூறி, பெண்கள் முன்னேற்றத்திற்காக உழைத்த பெண்மணியாக மாசிலாமணி மங்களம்பாள் விளங்குகின்றார். ■

**ஏகாம்பரம் லோகமலர்**

# செயல்வாதங்களுக்கான கேள்வி அதிகரிப்பின் ஓர் பிரதிபலிப்பு

இலங்கையில் சுமார் 20 வருடங்களுக்கு மேலாக கவனத்தில் எடுக்கப்பட்டு கருத்தாடல் செய்யப்படுகின்ற ஓர் விடயமே பெண்களுக்கெதிரான வன்முறையாகும். இவ்விடயம் தொடர்பான பல ஆய்வுகளும் கருத்துருவாக்கங்களும் விளக்கப்படுத்தல்களும் எம்மத்தியில் பரவிக் கிடக்கின்றன. பெண்களுக்கெதிரான வன்முறையை ஒழிக்க வேண்டுமென பல செயல்வாதங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. பெண்ணியச் செயற்பாட்டாளர்கள் ஆண்-பெண் இருபாலாரது முயற்சிகள் உட்படப் பலரது முயற்சிகள் இதிலடங்கும். இலங்கையில் உள்ள சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சும் முயற்சிகளை எடுத்து வருகின்றது. சர்வதேச மட்டத்தில் பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிக்க உருவாக்கப்பட்டிருக்கும் அனைத்துச் சமவாயங்களிலும், "பெண்களுக்கெதிரான அனைத்து விதமான பாராபட்சங்களையும் இல்லாதொழிக்கும் சமவாயம்" உட்பட இலங்கை கைச்சாத்திட்டுள்ளது.

இவை யாவற்றிற்கும் மேலாக இன்னமும் எமது சமூகங்களில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரித்த வண்ணம் இருப்பது மிகவும் கவலைக்குரியது மட்டுமல்லாது இன்னும் ஆக்கபூர்வமான செயல்வாதங்களுக்கு அறைகூவல் விடுக்கின்றது.

பால், பால்நிலை, பாலியல்பு, பாலியல் என்பவற்றின் அடிப்படையிலேயே பெண்களுக்கெதிரான வன்முறை உருப்பெறுகின்றது. ஒரு பெண்ணுக்குத் தனது உடல் மற்றும் உணர்வுகள் சம்பந்தப்பட்ட சகலவிதமான தீர்மானங்களை எடுப்பதற்கு முழு உரிமையும் உண்டு. இந்த அடிப்படையான உரிமைகள் மறுக்கப்படுவதே பெண்களுக்கெதிரான வன்முறைகளாகின்றன. இவை உடல் மற்றும் உள, மொழி மற்றும் செயற்பாட்டு ரீதியில் நிகழ்த்தப்படுகின்றன.

அண்மைக்காலத்தில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கெதிரான பாலியல் வன்முறைகள் அதிகரித்து வருகின்றன என்பதை பத்திரிகைகளூடாகப் பலர் அறிந்துள்ளார்கள். இது உண்மையிலேயே அதிகரித்துள்ளதா அல்லது இப்போதுதான் இவ்வாறான சம்பவங்கள் வெளிப்படுத்தப்படுகின்றனவா என்பதை ஆராய வேண்டிய தேவை உள்ளது. இதனால் பாதிக்கப்படும் பெண்களுக்கு தமது வாழ்க்கையை மீளமைத்துக் கொள்வது என்பது ஓர் போராட்டமே. எமது சமூகங்கள் இப்பெண்களை ஒழுக்கம் தவறியவர்களாகவே பார்க்கின்றன. கருத்தடை இன்னமும் சட்ட ரீதியற்ற செயற்பாடு என்பதால் வல்லுறவினால் கருத்தரிக்கும் பெண்களது வாழ்க்கையே கேள்விக்குறியாகின்றது. இதனால் தற்கொலைகளும் நாட்டில் அதிகரித்து விட்டன. தமது உடம்பையே சரிவரப் புரிந்து கொள்ளாத சிறுமிகள் பாலியல் வல்லுறவுக்குள்ளாகின்றார்கள். இவை அநேகமாக சிறுமியின் குடும்பத்தவர்கள் அல்லது உறவினர்களால் நடைபெறும் சம்பவங்களாக உள்ளன.

கலாசாரம் என்ற போர்வையில் பால் மற்றும் பாலியல்பு தொடர்பான பாடநெறித்திட்டம் இந்நாட்டில் இல்லை. தகவல் தொழில்நுட்பத்தின் மிகையான வளர்ச்சி வேகத்தில் தற்போதைய இளைஞர்களுக்குத் தேவையான அளவு பாலியல் தொடர்பான தகவல்கள் கிடைக்கின்றன. அதேநேரம் பாடசாலையிலோ அல்லது வீட்டிலோ பாலியல் தொடர்பான சரியான கல்வி கிடைப்பதில்லை. பாலியல் பற்றிக் கதைப்பதே குற்றம் அல்லது வெட்கம் என அநேகமான பெற்றோர்கள் எண்ணுகின்றார்கள். கணவன் மனைவிக்கிடையிலேயே பாலியல் பற்றிக் கதைக்காத சமூகம் எவ்வாறு பிள்ளைகளுடன் கதைக்கும்? இவ்வாறு சரியானதொரு

உரையாடல் இல்லாதவிடத்து இளைஞர்கள் தமது சந்தேகங்களைச் செயன்முறையில் தீர்க்கப் பார்க்கின்றார்கள். இதனால் பாலியலில் ஈடுபடும் இருபாலாரும் பாதிப்புக்குள்ளாகின்றார்கள். குறிப்பாக இளம் பெண்கள் மிகுந்த பாதிப்புக்குள்ளாகின்றார்கள். சமூகங்களில் பெண்களுக்கு வகுக்கப்படும் வகிபாத்திரங்களினால் அதாவது பால்நிலை அடிப்படையிலான வேறுபாடுகளினால் பெண்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகள் வெளிப்படுத்தப்படுவது குறைவு. வெளிப்படுத்தப்பட்டவற்றிட்கும் நீதி, நியாயம் கிடைத்ததும் குறைவு. தினசரிப் பத்திரிகைகளில் பெண்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகள் பற்றி வாசிக்கின்றோம். ஆனால் வன்முறையாளருக்குக் கிடைத்த தண்டனை பற்றியோ, பாதிக்கப்பட்ட பெண்ணிற்குக் கிடைத்த தண்டனை பற்றியோ அல்லது பாதிக்கப்பட்ட பெண்ணிற்குக் கிடைத்த நியாயம் பற்றியோ பத்திரிகைகளில் வெளிவருவது மிக அரிது.

பாதிக்கப்பட்ட பெண்களின் உண்மை நிலை பலருக்குத் தெரிய வருவதில்லை. பெண்களின் மற்றும் சிறுமிகளின் வாழ்க்கையைச் சின்னாபின்னமாக்கி விட்டு வன்முறையாளர்கள் சுதந்திரமாக நடமாடி வருகின்றார்கள். அவர்கள் தொடர்ந்து பற்பல பெண்களுக்கு எதிரான வன்முறைகளைச் செய்த வண்ணமே இருக்கின்றார்கள். வன்முறைக்குட்பட்ட பெண் அல்லது அப்பெண்ணின் குடும்பம் மட்டுமே பாதிக்கப்படுகின்றார்கள் என நம்மில் பலர் எண்ணக் கூடும். பாதிக்கப்பட்ட பல பெண்களுடனும் மற்றும் அவர்களைச் சேர்ந்த சமூகங்களுடனும் பழகிய எனது அனுபவங்கள் இதைப் பொய்யாக்குகின்றன. பெண்களுக்கெதிரான வன்முறைகள் ஓர் சமூகத்தையே அழிக்கக் கூடிய பாரதூரமான விடயமாகும். ஆகவே இவை நிறுத்தப்பட வேண்டும் என்றால் சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் செயற்பட வேண்டும். இது தனியே பெண்கள் உரிமைக்காகக் குரல் கொடுப்போர் மட்டும் செய்ய வேண்டிய ஒன்றல்லாமல் ஒவ்வொரு சமூகமும் ஒன்றாக இணைந்து நிறுத்த வேண்டிய ஒன்றாகும். குறிப்பாகப் பல ஆண்கள் இதைக்குறைப்பதற்கான மற்றும் முற்றாக ஒழிப்பதற்கான செயல்வாதங்களில் இறங்க வேண்டும்.

அத்தோடு வரையறுக்கப்பட்ட விதத்திலேனும் கருக்கலைப்பு சட்ட ரீதியானதாக்கப்பட வேண்டும். குடும்ப வன்முறைச்சட்டம் பரந்தளவில் அமுலாக்கப்பட வேண்டும். பெண்களுக்கு எதிரான வன்முறைகள் என்று வரும்பொழுது வழமையாக சட்டத்தில் உள்ள ஓட்டைகளைப் பாவித்து வன்முறையாளர்கள் தப்பிவிடக் கூடாது. அவர்கள் பெரிய பதவிகளில் இருந்தாலென்ன அரசியல் செல்வாக்குடன் இருந்தாலென்ன தண்டனை விதிக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அவர்கள் எந்தவொரு சிறு கிராமத்தைச் சேர்ந்தவராக இருந்தால் கூட பாரபட்சமற்ற வகையில் தேவையான சேவைகள் கிடைக்க வேண்டும். பாடசாலைகளில் பாலியல் கல்வி வழங்கப்பட வேண்டும். பெற்றோர் பிள்ளைகளுடன் பால் பால்நிலை மற்றும் பாலியல் தொடர்பாக உரையாட வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்ணோ சிறுமியோ தம்மேல் ஏற்படுத்தப்படுகின்ற வன்முறைகளைப் பெண் என்ற வகையில் பொறுத்திருக்க வேண்டும் என்றோ, பெண்ணாகப் பிறந்தால் இவற்றையெல்லாம் ஏற்றுக் கொண்டு முகம் கொடுக்க வேண்டும் என்றோ அல்லது பிறர் சொல்லும் நியாயப்படுத்தலுக்குச் செவிமடுத்து வன்முறையை மூடி மறைக்காது வன்முறையாளரைத் தண்டிக்கவும் தனக்கு நியாயம் தேடவும் முன்வர வேண்டும்.

இவையாவற்றையும் உள்வாங்கிக் கொண்டால் தவிர பெண்களுக்கு எதிரான வன்முறைகள் படிப்படியாக குறைந்து வந்து நாளடைவில் முற்றாக ஒழிய வேண்டும் என்பது கனவாகவே இருந்து விடும். இம்மாற்றங்களை 20 வருடங்களுக்கு அப்பாலும் நாம் ஏற்படுத்தத்தவறினால் இன்னமும் பற்பல வருடங்களுக்குத் தலைமுறை தலைமுறையாக பெண்களும் சிறுமிகளும் வன்முறைக்குள்ளாக்கப்படுவார்கள். தற்போது மாற்றங்களைக் கொண்டு வருவதில் எமது கடமைகளைச் சரிவரச் செய்யத் தவறிய நாமும் இக்கொடுமைக்கு வழிவகுத்தவர்களாகி விடுவோம். எமது சமூகங்கள் தொடர்ந்தும் பாதிப்புக்குள்ளாகும் சமூகங்களாகி விடும். வன்முறையாளர்கள் எமது வீட்டிலேயே குடியிருப்பவர்களாகி விடுவார்கள். ■

**காயத்ரி டிவகலால**

# பால்நிலைச் சமத்துவம் நோக்கிய எனது பயணம்

ஆணாதிக்கச் சிந்தனையின் நிலைமாறாக் கருத்துப் படிமங்களினூடு கட்டமைக்கப்பட்டுள்ள எமது சமூகமானது பெண்கள் மீதான ஆதிக்கத்தை, அவர்களுக்கெதிரான வன்முறைகளை ஏற்றுக் கொள்வதற்கும், அங்கீகரிப்பதற்கும் ஏதுவாகக் காணப்படுகிறது. குறிப்பாக எமது சமூகமானது ஆண்களின் சமூகமாகவும், அவர்களின் சிந்தனைகளையே மிகப் பெரும்பாலும் உள்வாங்கியுள்ளது என்பதுவும் எவரும் மறுக்க முடியாத உண்மையாகும். இவ்வாறு கட்டமைக்கப்பட்ட ஆணாதிக்க வரம்புகளுக்குட்பட்ட சமூக கட்டமைப்பிற்குட்பட்டே எனது வாழ்க்கையும் அமைந்திருந்தது.

ஒரு ஆணாக என்னை நான் அடையாளப்படுத்துவதில் பெருமைப்பட்டுக்கொண்டேதான் இருந்தேன். சிறந்த கவனிப்பு, உடுப்புத் தோய்த்துத் தரும் அம்மா, சாப்பிட்ட பாத்திரத்தில் கைகழுவும் அப்பா என எனது குடும்ப அமைப்பும் என்னை சமூகம் எதிர்பார்க்கும் ஆணாக வளர்வதற்கு ஏதுவாக அமைந்திருந்தது.

இவ்வாறிருக்கையிலேயே, எனக்கிருந்த கலையார்வத்தினடிப்படையில் திரு. சி. ஜெயசங்கர் அவர்களின் நட்புக் கிடைத்ததும் தொடர்ச்சியாக பொழுதுபோக்காக சில பல கலைச் செயற்பாடுகளிலும், கலந்துரையாடல்களிலும் அவற்றினது முக்கியத்துவம் தெரியாமலேயே

*... பெண்கள் மீதான ஆதிக்கத்தை, அவர்களுக்கெதிரான வன்முறைகளை ஏற்றுக் கொள்வதற்கும், அங்கீகரிப்பதற்கும் ஏதுவாகக் காணப்படுகிறது. குறிப்பாக எமது சமூகமானது ஆண்களின் சமூகமாகவும், அவர்களின் சிந்தனைகளையே மிகப் பெரும்பாலும் உள்வாங்கியுள்ளது ...*

கலந்து கொள்ள ஆரம்பித்திருந்தேன். குறிப்பாக நான் எமது பிரதேசத்தின் சடங்குப் பாரம்பரியத்தினூடாக வளர்ந்தவனென்ற அடிப்படையில் சிறிது உடுக்கை வாசிக்கத் தெரிந்திருந்தது. அந்த அடிப்படையிலேயே நான் சில கலைச்செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கினேன். இது இவ்வாறு இருக்கையிலே, பல்வேறுபட்ட கலந்துரையாடல்களில் பங்குபற்ற வேண்டியிருந்ததன் காரணமாக உள்ளூர் அறிவுதிறன் சார்ந்து எனக்கு விளங்கக் கூடியதாகவும் அவை சார்ந்து செயற்படவும் ஆர்வம் ஏற்பட்டிருந்தது. இவ்வாறே மூன்றாவது கண் உள்ளூர் அறிவு, திறன் செயற்பாட்டுக் குழுவுடனான எனது பயணம் தொடங்கியது.

இக்காலகட்டத்திலேயே எமது குழுவின் அமைப்பாளர்களுள் ஒருவரான கமலா

வாசுகி அவர்களால் 2004 ஐப்பசி மாதத்தில் குழுவிற்கான பால்நிலை சம்பந்தமான தொடர் களப்பயிற்சி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்தச் சந்தர்ப்பம். எனது வாழ்க்கை ஓட்டத்தை திசை திருப்பும் என்பதை நான் அப்போது அறிந்திருக்கவில்லை. இவ்வாறு வாசுகி அக்கா அவர்களால் மேற்கொள்ளப்பட்ட தொடர் களப்பயிற்சியினூடு நான் கற்றுக் கொண்ட, உணர்ந்து கொண்ட, புரிந்து கொண்ட விடயங்கள் ஏராளம். ஆணாதிக்கக் கட்டமைப்பிற்குட்பட்ட சமூகம் எதிர்பார்க்கும் ஒரு ஆணாக இச்சமூகத்தில் வாழ்வது பெண்களுக்கெதிரான மற்றும் ஜீவராசிகளுக்கொதிரான வன்முறைகளை ஏற்றுக் கொள்வதற்குச் சமமாக இருப்பதை என்னால் உணரக்கூடியதாக இருந்தது. ஆயினும், இந்நிலையானது காலங்காலமாக சட்டமைக்கப்பட்டிருக்கின்றமையையிட்டு இது சார்ந்து செயற்பட வேண்டிய அவசியத்தையும் என்னால் புரிந்து கொள்ளக் கூடியதாகவிருந்தது. இதன் முதற்கட்டமாக, பால்நிலை சமத்துவத்தை என்னுடைய மட்டத்தில் ஏற்படுத்துவதற்கு நான் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதையும் இத்தொடர்க் களப்பயிற்சிகளினூடு புரிந்து கொண்டதன் அடிப்படையில், வீட்டிலே பெண்களுக்கென வகுக்கப்பட்டிருக்கும் சில வேலைகளில் எனது பங்களிப்பை வழங்க ஆரம்பித்திருந்தேன். இருந்தபோதும் ஆரம்பத்தில் அவை எனது பெற்றோராலும் சுற்றத்தவராலும் ஏற்றுக் கொள்ளப்படாதவைகளாகவே காணப்பட்டன. இவ்வாறு பால்நிலைச் சமத்துவத்திற்கான தேவையும் அவசியமும் என்னால் ஓரளவிற்குப் புரிந்து கொள்ளப்பட்டிருந்த வேளையிலேயே என்னில் ஏற்பட்ட மாற்றங்களின் வெளிப்பாடாக, பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கெதிரான ஆண்களின் செயல்வாதத்தை இணைப்பாக்கம் செய்தேன்.

பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கெதிரான ஆண்களின் செயல்வாதமானது கமலா வாசுகி அவர்களால் மூன்றாவது கண் நண்பர்களுக்கு மேற்கொண்ட தொடர் களப்பயிற்சியின் விளைவான பங்குபற்றல் செயற்பாட்டின் ஊடாக சி. ஜெயசங்கர் மற்றும் கமலா வாசுகி அவர்களால் "ஆண்களின் குரல்கள் ஆதரவுக் குரல்களே அன்றி மற்றுமொரு ஆதிக்கக் குரல்கள் அல்ல" எனும் தொனிப்பொருளில் வடிவமைக்கப்பட்ட வீதிநாடக மன்ற அரங்காகப் பரிணமித்தது. பலகாலமாக, பால்நிலை சமத்துவம் சார்ந்து பெண்களுடன் பெண்கள் அமைப்புகளே இயங்கிக் கொண்டிருக்கின்றன. பெண்களை வலுப்படுத்தல், பெண்களுக்கான உரிமை தொடர்பாக விழிப்பூட்டல், பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கெதிரான செயற்பாடுகள், பெண்களுக்கான சட்ட அனுசரனை என்பன தொடர்ச்சியாக பல்வேறு நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வந்து கொண்டிருக்கும் சமயத்திலேயே மூன்றாவது கண் குழுவானது பால்நிலை தொடர்பாக ஆண்களுடனான செயற்பாடுகளை ஆரம்பித்திருந்தது. பால்நிலை என்பது வெறுமனே பெண்களோடு மட்டும் சம்பந்தப்பட்டதல்ல என்பதோடு சமூக ரீதியான பால்நிலை அமைப்பிலுள்ள ஏற்றத்தாழ்வைக் களைவதற்கு பால்நிலை வன்முறைகளின் பங்காளர்களான ஆண்களும் உள்வாங்கப்படல் வேண்டும் என்பது ஆணித்தரமாக கலந்துரையாடப்பட்டு இச்செயல்வாதம் உருவாக்கப்பட்டது. இவ்வாறு வடிவமைக்கப்பட்ட இச்செயல்வாதமே இலங்கையிலேயே முதன் முறையாக பால்நிலை சமத்துவம் சார்ந்த ஆண்களின் செயல்வாதமாக உருவாகியது என்பது உண்மை. இச்செயல்வாத உருவாக்கத்தின்

**...சிறந்த கவனிப்பு, உடுப்புத் தோய்த்துத் தரும் அம்மா, சாப்பிட்ட பாத்திரத்தில் கைகழுவும் அப்பா என எனது குடும்ப அமைப்பும் என்னை சமூகம் எதிர்பார்க்கும் ஆணாக வளர்வதற்கு ஏதுவாக அமைந்திருந்தது.**

போது பால்நிலை, பால்நிலை அதிகார உறவுகள் மற்றும் ஆணாதிக்கச் சிந்தனைகள் தொடர்பான மேலதிக விழிப்புணர்வு எனக்கு ஏற்பட்டதுடன் பால்நிலை அதிகார உறவுநிலை தொடர்பாக அதிருப்தியும் ஏற்பட்டது. இவ்வாறு என்னுள் ஏற்பட்ட சிந்தனை மாற்றத்தின் விளைவாக "நியாயக் கும்மி" எனும் தலைப்பில் சில கும்மிப் பாடல்களை நான் எழுதினேன். இவ்வாறு எழுதப்பட்ட கும்மிப் பாடல்கள் இன்றும் கூட எமது செயல்வாதத்தில் உள்வாங்கப்படப்பட்டு வருகிறது. அவ்வாறு எழுதப்பட்ட பாடல்களுள் சில உங்களுக்காக இங்கே:

சமமான உறவுதனைப்பேண - இங்கே
சமத்துவம் தானாய் வளர்ந்திடுமே
சமத்துவம் என்றே சொல்லும் போது
பால்நிலை என்பது முக்கியமே.

தந்தன தானன ...

ஆண்களும் பெண்களும் சரிசமமாய் - இந்த
பாரினில் உண்மையை ஏற்றுக் கொள்வீர்
பெண்களை அடிமையாய் பார்த்துவிட்டால் - இந்த
பூமியில் உண்மைகள் செத்துவிடும்

தந்தன தானன ...

பாலியல் வன்முறை நிற்கவேண்டும் - என்று
பாருலகெங்கிலும் கோஷமுண்டு
பாலியல் வன்முறை நிற்கவில்லை - இந்த
பாருலகென்றோ மடிந்து போகும்.

தந்தன தானன ...

ஊரினில் சண்டைகள் வந்து விட்டால் - இந்த
ஊரார் அனைவரும் ஒன்று சேர்வர்
வீட்டிலே பெண்ணுக்கு அடிவிழுந்தால் - இங்கே
கேட்பதற்காருண்டு ஞானப் பெண்ணே

தந்தன தானன ...

பெண்களும் மனிதர்கள் என்று சொல்லி - நல்ல
மேன்மையை உலகுக்கு எடுத்துரைக்க
பெண்களின் அடிமைத்தளை உடைக்க - இந்த
பூமியில் மாந்தர்கள் ஒன்று சேர்க.

தந்தன தானன ...

இவ்வாறு மற்றைய மூன்றாவது கண் நண்பர்களதும் படைப்புகளையும் உள்வாங்கிக்கொண்டு உருவாக்கப்பட்ட செயல்வாத மன்ற அரங்கானது, மட்டக்களப்பின் பல்வேறு பிரதேசங்களில் அளிக்கை செய்யப்பட்டது. குறிப்பாக கெயார் (CARE) சர்வதேச நிறுவனத்தினது வேண்டுகோளுக்கிணங்க இவ் அரங்கானது மட்டக்களப்பில் 10 கிராமங்களில் அளிக்கை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், இவ்வாறு பல்வேறு இடங்களில் இவ் அளிக்கையினை மேற்கொண்டபோதே என்னால் யதார்த்த ரீதியாக பெண்களுக்கொதிரான வன்முறைகள் அவற்றின் வடிவங்கள் சார்ந்து ஆழமாகப் புரிந்துகொள்ளக் கூடியதாகவிருந்தது. குறிப்பாக வீட்டுவன்முறைகள் சார்ந்து என்னால் ஜீரணிக்க முடியாத பல உண்மைகளையும் அறியக் கூடியதாகவுமிருந்தது. அவற்றில் முக்கியமாக என்னால் கவனிக்கக் கூடியதாகவிருந்தது யாதெனில், படித்த சமூகங்கள் எனக் கூறிக்கொண்டு நாங்கள் சந்தோசமாக வாழ்கிறோம் என நகர்ப்புறங்களில் வாழும் குடும்பங்களில் காணப்படும் வீட்டுவன்முறைகளாகும். பொதுவாக நகரங்களில் வாழும் நாம், கிராமத்தவர்களை மட்டம் தட்டிக்கொண்டு எங்கள் வீட்டுப் பிரச்சினைகளைப் பூசி மெழுகி விடுவோம். மற்றையவர்களுக்கே எமது அறிவுரைகளும் அனுதாபங்களும். ஆயினும், நகர்ப்புறங்களிலேயே பெண்கள் நான்கு சுவர்களுக்குள் இரு மடங்கு வன்முறைக்குட்படுத்தப்படுகின்றனர் என்பதுவும் அது மிகவும் கண்டிக்கப்பட வேண்டியது என்ற சிந்தனையும் எனக்கு செயல்வாத அளிக்கைகளின் பின்னூட்டல்களிலேயே ஏற்பட்டது.

இவ்வாறு மூன்றாவது கண் செயற்பாட்டுக் குழுவின் பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கெதிரான ஆண்களின் செயல்வாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போதே எனக்கு கெயார் சர்வதேச நிறுவனத்தின் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளைத் தடுத்தலுக்கான செயற்திட்டத்தில் வேலை செய்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. குறிப்பாக இவ் வாய்ப்பானது மூன்றாவது கண் குழுவில் செயற்பட்டதில் பெற்றுக்கொண்ட அனுபவங்களின் அடிப்படையிலேயே அமைந்தது என்பது முற்றிலும் உண்மை.

**ஆணாதிக்கக் கட்டமைப்பிற்குட்பட்ட சமூகம் எதிர்பார்க்கும் ஒரு ஆணாக இச்சமூகத்தில் வாழ்வது பெண்களுக்கெதிரான மற்றும் ஜீவாரசிகளுக்கொதிரான வன்முறைகளை ஏற்றுக் கொள்வதற்குச் சமமாக இருப்பதை என்னால் உணரக்கூடியதாக இருந்தது.**

மேலும் இத்திட்டத்தினை கெயார் நிறுவனத்திற்காக இயக்கிக்கொண்டிருந்தவர் மூன்றாவது கண் குழுவின் இணைப்பாளர்களுள் ஒருவரான கமலா வாசுகி ஆவார். இத்திட்டத்தில் இணைந்து வேலை செய்ததன் மூலம் பால்நிலை, பால்நிலைச் சமத்துவம் மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் சார்ந்து எனது அறிவும், சிந்தனையும் மிகவும் பரவலடைந்தது. பால்நிலை சமத்துவம் சம்பந்தமாக வேலைகளை முன்னெடுத்துவரும் பல்வேறு நபர்களின் தொடர்புகள் கிடைத்தது. எல்லாவற்றிற்கும் மேலாக பால்நிலை சமத்துவம் சார்ந்து இன்னும் வேகத்தோடு இயங்க வேண்டும், விடயங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் அதிகரித்தது. இந்தக்கட்டத்திலே, ஏற்கனவே மூன்றாவது கண் குழுவில் பால்நிலை சார்ந்து ஆண்களின் செயல்வாதத்தில் ஈடுபட்டிருந்தமையின் அடிப்படையில், நண்பர்களின் ஆலோசனைக்கினங்க திட்டத்தின் ஒரு பகுதியான பால்நிலை சமத்துவத்தில் ஆண்களின் பங்களிப்பை அதிகரிக்கச்செய்வதற்கான செயற்பாடுகளில் கவனம் செலுத்தத் தொடங்கினேன்.

அந்தவகையிலே பல்வேறு கிராமங்களில் ஆண்கள் குழுக்களை ஒருங்கிணைப்பதும் பால்நிலை சமத்துவத்திற்கான தேவை பற்றி அவர்களுடன் கலந்துரையாடுவதுமாக எனது செயற்பாடுகள் விரிவடைந்திருந்தது. பால்நிலை சமத்துவம் சார்ந்து ஆண்களுடன் செயற்படுவது அவ்வளவு எளிதான காரியமல்ல. மூன்றாவது கண் குழுவின் ஆண்கள் செயல்வாதத்தில் செயற்பட்டமையின் அனுபவம் மற்றும் வாசுகி அக்கா அவர்களின் ஆலோசனை வழிநடத்தல் போன்றவற்றின் மூலம் பால்நிலை சார்ந்து ஆண்களுடனான செயற்பாட்டின் நோக்கத்தை சிறிதளவு அடையக்கூடியதாகவிருந்தது. எமது பால்நிலைக் கட்டமைப்பானது இரு பாலினருக்கும் இடையில் ஏற்றத்தாழ்வுடன் கட்டமைக்கப்பட்டுள்ளமை நாம் யாவரும் அறிந்ததே. எமது சமூகம் ஆண்களின் பக்கம் அதிகாரத்தையும் பெண்களின் பக்கம் அடிமைத்தனத்தையும் ஊட்டி ஊட்டி வளர்த்திருக்கின்றது. தங்களது அதிகாரத்தைத் தணித்து பெண்களையும் சமமாக மதிக்க எத்தனை ஆண்கள் தயார்? இக்கேள்வியானது எழுப்பப்படும் முன்பே சிதறடிக்கப்படக்கூடியது. ஆயினும் அதிகாரம் என்பது வாழ்வின் நின்மதியையும் சமாதானத்தையும் இல்லாமல்ச் செய்துவிடும் என்பதையும், வலி என்பது அனைத்து ஜீவராசிகளுக்கும் பொது என்பதையும் ஆண்களுக்குத் தெளிவுபடுத்துவதன் மூலம் ஆண்களுடனான செயற்பாட்டின் நோக்கத்தை சிறிதளவேனும் அடையக்கூடியதாக இருந்தது.

இவை எல்லாவற்றிற்கும் மேலான விடயமாக நான் கருதுவது, பால்நிலை தொடர்பாக என்னுள் ஏற்பட்ட சிந்தனைத் தெளிவும் அது சார்ந்து எனது பழக்கவழக்கங்களில் ஏற்பட்ட மாற்றமுமாகும். பால்நிலைச் சமத்துவம் தொடர்பான வேலைகளில் ஆண்களை ஈடுபடுத்துவது கடினமாக இருக்கும் பட்சத்தில் நான் என்னுள் இது சார்ந்து ஏற்பட்ட மாற்றங்களை ஆண்களுடன் பகிர்தலும் மிகவும் தேவையாக இருந்தது. மேலும், பால்நிலைச் சமத்துவத்தை எம்மளவில் எம் வீடுகளிலேயே நாம் ஆரம்பிக்க வேண்டும். குறிப்பாக வீடுகள் சமாதானமாக இருக்கும் போதே நாம் வெளியுலக சமாதானத்தைப் பற்றிப் பேச முடியும் என்ற கருத்துக்கமையவே இந்த ஆண்களுடனான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டு வந்தது. இந்த அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்ட பங்குபற்றல் செயற்பாடுகளினூடாக "வீடுகளில் நம்பிக்கை - சந்தோசம் - சமாதானம்" என்ற தொனிப்பொருளில் உருவாக்கப்பட்ட ஆண்களின் பிரச்சார நிகழ்வொன்று முதன் முறையாக கிராம மட்ட

ஆண்களால் முன்னெடுக்கப்பட்டது. இது எனது வாழ்வின் முக்கிய படிப்பினையை உருவாக்கியது. அதாவது, பால்நிலைச் சமத்துவச் செயற்பாடுகளில் ஆண்களை உள்வாங்குதலானது ஒரு பாரிய விளைவை ஏற்படுத்தும் என்பதும், அது இன்றைய காலத்தின் மிக முக்கிய தேவை என்பதையும் எனக்கு உணர்த்தியது. மேலும் இச்செயற்பாடானது, ஆண்களுடனான வேலைகளை விரிவுபடுத்த எனக்கு மேலும் ஆர்வத்தை ஏற்படுத்தியது. இதனைத் தொடர்ந்து இம்மாதிரியான விழிப்புணர்வுப் பிரச்சாரங்களை கெயார் நிறுவன அனுசரனையோடு பல்வேறு கிராமங்களில் முன்னெடுப்பதற்கான வாய்ப்புக்கள் எனக்கு ஏற்பட்டது.

இது இவ்வாறிருக்க எமது மூன்றாவது கண் குழுவின் பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கெதிரான ஆண்களின் செயல்வாதமும் தொடர்ந்து கொண்டிருந்தது. அந்தவகையில் மூன்றாவது கண் குழுவின் முக்கிய செயற்டபாடுகளுள் ஒன்றான கூத்து மீளுருவாக்கச் செயற்பாடுகளில் பெண்நிலைவாதச் சிந்தனைகள் உள்வாங்கப்பட்டு பாரம்பரிக் கூத்துக்கள் மீளுருவாக்கப்பட்டமை முக்கிய இடத்தைப் பெறுகின்றது. ஜெயசங்கர் அவர்களின் பாரம்பரிய அரங்கு மீதான பங்குகொள் ஆய்வுச்செயற்பாடான கூத்து மீளுருவாக்கச் செயற்பாட்டின் முக்கிய அம்சமாக இந்த பெண்நிலைவாதச் சிந்தனைகள் உள்வாங்கப்பட்டு கூத்துப் பிரதிகள் மீளுருவாக்கப்பட்டமையானது முதன்மை பெறுகிறது.

மேலும், இச்செயல்வாதமானது பல்வேறு பரிமானங்களைப்பெற்று மூன்றாவது கண் செய்ற்பாடுகளான சிறுவர் அரங்கச் செயற்பாடுகள், கல்வியியல் அரங்கச் செயற்பாடுகள் போன்றவற்றிலும் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பால்நிலை ஏற்றத்தாழ்வுகள் சார்ந்த ஆணாதிக்கச் சிந்தனைகளின் தகர்ப்பிற்கான செயற்பாடானது நான் எனது இடத்தில் எனக்கான மாற்றங்களையும், நான் சார்ந்தவர்களது மாற்றங்களையும் அடிப்படையாக வைத்தே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற கருத்திற்கமைவாகவே இன்றுவரை நான் எனது தளத்தில் சாத்தியமான இடங்களில், சந்தர்ப்பங்களில் பால்நிலை சமத்துவத்திற்கான

**மேலும், பால்நிலைச் சமத்துவத்தை எம்மளவில் எம் வீடுகளிலேயே நாம் ஆரம்பிக்க வேண்டும். குறிப்பாக வீடுகள் சமாதானமாக இருக்கும் போதே நாம் வெளியுலக சமாதானத்தைப் பற்றிப் பேச முடியும் என்ற கருத்துக்கமையவே இந்த ஆண்களுடனான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டு வந்தது.**

செயற்பாடுகளில் பங்குபற்றி வருகிறேன். உதாரணமாக, தற்போது நான் வேலை செய்யும் நிறுவனத்தில் அரச நிதிவழங்கும் திட்டங்களிற்கான முகாமையாளராக இருக்கின்றபோதிலும், எனது பால்நிலை சமத்துவம் சார்ந்த ஈடுபாட்டின் அடிப்படையில் நிறுவனத்தின் பால்நிலை ஆலோசகராக பல்வேறு திட்ட வடிவமைப்புகளுக்கான உள்ளீடுகளை வழங்குவதிலும், ஏனைய உத்தியோகத்தர்களை பால்நிலை சமத்துவம் சார்ந்து அறிவூட்டுவதிலும் ஈடுபட்டு வருகிறேன். குறிப்பாக இவ்விதமான செயற்பாடுகளுக்கு உறுதுணையாகவும் அடிப்படையாகவும் காணப்படுவது மூன்றாவது கண் குழுவின் பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கெதிரான ஆண்களின் செயல்வாத அனுபவமேயாகும். மேலும் மிகமுக்கியமாக நான் குறிப்பிட வேண்டியது என்னவென்றால், எனது தொடர்ச்சியான செயற்பாடுகள் மற்றும் ஆர்வம் காரணமாக தொடர்ந்தும் மூன்றாவது கண் குழுவின் ஒரு இயங்குநிலை செயற்பாட்டாளனாக பெண்களுக்கிழைக்கப்படும் வன்முறைகளுக்கெதிரான ஆண்களின் செயல்வாதத்தில் எனது பங்களிப்பானது எனக்கு மிக மனத்திருப்தியையும் பெருமையையும் அளிக்கிறது என்பதாகும். ■

**ஜோ. கருணேந்திரா**



பெண்கள் ஊடகக் கூட்டமைப்பு
56/1, சரசவி லேன், காசல் வீதி,
கொழும்பு 8, இலங்கை.
தொலைபேசி : 94-11-5632045 / 5635900
தொலைநகல் : 94-11-2690192
மின்தபால் : wmcsrilanka@gmail.com

ரூ. 50/-